# சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட்

## ஒவ்வொரு வாழ்வுக்கும் வலுச்சக்தியை நிரப்பல்



வருடாந்த அறிக்கை 2019

# பொருளடக்கம்


## கூட்டிணைந்த மேலோட்டம்

01 தொலைநோக்கு மற்றும் பணி
02 எம்மைப்பற்றி
05 முன்னிலைப்படுத்தப்பட்ட செயலாற்றுகை - 2019
06 வருடம் ஒரே பார்வையில்

## எங்கள் தலைமைத்துவம்

08 தலைவரின் செய்தி மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரது செய்தி
10 பணிப்பாளர் சபை
14 முகாமைத்துவ குழு

## முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

19 நிதி மூலதனம்
23 உற்பத்தி மூலதனம்
26 மனிதவள மூலதனம்
31 இயற்கை மூலதனம்

## ஆளுகை மற்றும் இணக்கம்

34 கூட்டிணைந்த ஆளுகை
43 இடர் முகாமைத்துவம்
50 பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை
52 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

## நிதியியல் தகவல்கள்

55 கணக்காளர் தலைமை அதிபதியின் அறிக்கை
61 வருமானக் கூற்று
62 அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று
63 உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று
64 காசுப்பாய்ச்சல் கூற்று
65 நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்
93 விரிவான வருமானக் கூற்று
94 ஐந்து வருடகால நிதியியல் சுருக்கம்
கூட்டிணைந்த தககல்கள்

# தொலைநோக்கு

தெற்காசியாவில் மிகவும் வினைத்திறன்மிக்க
பெற்றோலிய முனையத் தொழிற்படுத்துனராகத் திகழ்தல்

# பணி

அக்கறைதாரர்களின் எதிர்பார்க்கைகளை நிறைவு செய்கின்ற மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மட்டத்தினை உணர்ந்துகொள்ளத்தக்க அத்துடன் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கு அர்ப்பணித்துள்ள அதேவேளை முனைய வசதி பயன்பாட்டாளர்களுக்கு - வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற பெற்றோலிய உற்பத்திகளின் தரத்தினை பாதுகாத்தல், மிகச்சரியான தரத்தினை உறுதிசெய்தல், நுகர்வோரினதும் பொதுமக்களினதும் பின்னூட்டல் மூலம் வழிநடாத்தப்படும் விசுவாசமிக்க, பாடுபடுகின்ற சிறப்பாக பயிற்றப்பட்ட தொழிற்படையின் அர்ப்பணிப்புமிக்க பங்கேற்பின் ஊடாக ஆரோக்கியம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்புக்கான செயற்பாட்டிலுள்ள நியமங்களுக்கு கௌரவமளித்து நாட்டில் மிகவும் வினைத்திறன் மிக்க முனையத் தொழிற்படுத்துனராக திகழ்தல்.



# எம்மைப்பற்றி



### சிலோன் பெற்றோலியம்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனமானது 1987 இன் 23 ஆம் இலக்க பொதுக் கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வியாபாரத்தினை பொதுக் கம்பனியாக மாற்றும் சட்டத்தின் பிரிவு 2(1) ஆம் நியதிகளுக்கு அமைவாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டு 2003 ஒக்டோபர் 13ஆம் திகதி 1310/08 ஆம் இலக்கத்தினை உடைய அதி விசேட அரசாங்க வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்ட எரிபொருள் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய் இணைப்பு மற்றும் பௌசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

இலங்கையில் மூன்றாம் நிலை பெற்றோலிய உற்பத்திகளின் கையாளுகையினை நாம் முகாமைத்துவம் செய்வதற்கான அதி நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பெற்றோலிய மொத்தக் களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கம்பனியாவோம். ஆரோக்கியமான மற்றும் போட்டி எரிபொருள் சேமிப்பு மற்றும் விநியோகத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் வளர்ச்சிப் பயணத்தை ஆதரிப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நிரூபிக்கும் வகையில் எங்கள் பங்குதாரர் மதிப்பு முன்மொழிவுகளை தொடர்ந்து மேம்படுத்துகின்றோம்.

இந்தக் கம்பனி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாக அதன் 2/3 பங்கு மூலதனத்தையும் மிகுதி உரிமைப் பங்கை இலங்கை இந்திய ஒயில் கூட்டுத்தாபனத்திடமிருந்தும் பெற்றுக் கொண்டு இயங்குகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் தாய் நிறுவனத்திடமிருந்து நன்மைகளை ஆறு தசாப்தங்களாகப் பெற்று இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துகின்றோம்,

புத்தாக்க உந்தல் மற்றும் வலுசக்தித் துறையில் சுற்றாடல் நிலைத்திருப்பினை உறுதிப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளுகின்றது. நாட்டின் சில்லறை நுகர்வோரினதும் பொருளாதார அபிவிருத்தி செயன்முறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு கைத்தொழிற்துறைகளிலும் காணப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான மொத்த நுகர்வோரினதும் சக்திக்கான கேள்வியினை நிறைவு செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இலங்கை இந்திய ஒயில் கம்பனிக்கும் உரித்தான நாடுமுழுவதிலுமுள்ள சுமார் ஆயிரம் சில்லறை விநியோக நிலையங்களுக்கு சேவையளிக்கின்றோம்.

கம்பனியின் பல்வேறு நடவடிக்கைகள் சுமார் 3000 ஊழியர்களின் ஊக்கமிக்க பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுவதுடன் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவற்றில் ஈடுபட்டுள்ள 11 மொத்தக் கிடங்குகளுக்கு துணையளிக்கப்படும் இரண்டு பிரதான முனையங்கள் காணப்படுகின்றன.

## பிரதான முனையங்கள்

- கொலொன்னாவை நிலையம் மற்றும் முத்துராஜவெல முனையம்

## மொத்த கிடங்குகள்

- அனுராதபுரம்
- கொட்டகல
- மட்டக்களப்பு
- மாத்தறை
- ஹப்புத்தளை
- சரசவி உயன
- பதுளை
- குருநாகல்
- காலி
- பேராதெனிய
- காங்கேசன்துறை

கொலன்னாவை நிலையமானது 12 பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுகின்ற அதேவேளை முத்துராஜவெல முனையம் 5 பெற்றோலிய உற்பத்திகளைக் கையாளுகின்றது.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விநியோகத் தொழிற்பாடானது இரண்டு சந்தைப்படுத்தும் கம்பனிகளான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்திய ஒயில் கம்பனி ஆகியன சார்பிலும் உற்பத்திகளை விநியோகிப்பதைப் பொறுப்பேற்கின்றது. கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெல ஆகிய இடங்களில் பிரதான முனையங்கள் காணப்படுகின்றன. இவை நாடுமுழுவதும் பெற்றோலிய உற்பத்தி விநியோகத்தினை வலுப்படுத்தும் பொருட்டு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் 11 வெளிப்பிரதேச மொத்தக் கிடங்குகளையும் ஒரு உள்ளூர் புகையிரதப்பகுதி கிடங்கினையும் தொழிற்படுத்துகின்றது. இவ்வமைவிடங்களுக்கும் உள்நாட்டு புகையிரதப்பகுதி கிடங்கிற்கும் உற்பத்திகளின் நிறைவாக்கம் கொலொன்னாவை விநியோக நிலையத்தில் ஏற்றப்படும் புகையிரதக் கொள்கலன்கள் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பாதைகள் மற்றும் பிரதான முனையங்களில் இருந்து தாங்கிகளுக்காக வாடகைக்குப் பெறப்பட்ட பாதைகள் மூலம் அனுப்பப்படும். விமான எரிபொருட்கள் கொலொன்னாவை நிலையத்தில் மாத்திரம் களஞ்சியப்படுத்தப்பட்டு புகையிரதம் மூலம் நாளாந்த அடிப்படையில் கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றது. இரத்மலானை மற்றும் இலங்கை விமானப் படையினால் தொழிற்படுத்தப்படும் ஏனைய விமானத் தளங்களுக்கு வீதி மூலம் எரிபொருள் வசதி அளிக்கப்படுகின்றது. முத்துராஜவெல முனையத்தில் மாத்திரம் குறைந்த கந்தக உலை எண்ணெய் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதுடன் கெரவலப்பிட்டிய மின்னுற்பத்தி நிலையத்திற்கு ஒரேயொரு வாடிக்கையாளருக்காக ஒதுக்கப்பட்ட குழாய் இணைப்பு ஊடாக அனுப்பப்படுகின்றது.



கொலொன்னாவை நிலையம் சுத்திகரிப்புச் சாலைகளில் இருந்தும் கொழும்பு டொல்பின் இறங்குதுறையில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட தாங்கிகளில் இறக்கப்படுகின்ற உற்பத்திகளைப் பொறுப்பேற்றுக்கொள்ளுகின்றது. முத்துராஜவெல முனையமானது கெரவலப்பிட்டிய கரைக்கு சுமார் ஆறு கிலோமீற்றர் தொலைவில் அமையப்பெற்றுள்ள தனிநிலை நங்கூர மிதவையூடாக இறக்கப்படும் இறக்குமதி செய்யப்பட்ட கப்பல் சரக்கில் இருந்து மாத்திரம் உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளுகின்றது.



வாகன எரிபொருளுக்கான களஞ்சியம்

நாங்கள் சுமார் 450,000 மெற்றிக்தொன் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட பல்வேறுபட்ட பெற்றோலியம் பொருட்களை கொலொன்னாவை, முத்துராஜவெல மற்றும் நாடு முழுவதிலுமுள்ள கிடங்குகளில் சேமிக்கின்றோம்.

நாடு முழுவதிற்கும் அவசியமான பெற்றோலியப் பொருட்களின் போக்குவரத்தின் 66% வீதத்திற்கு பங்களிப்பு செய்யும் பிரதான வீதி தாங்கியின் ஊடான விநியோகத்தை மேற்கொள்ளுகின்றோம்.



வீதி டாங்கிகள்

**வாகன எரிபொருட்களின் விநியோகம்**

தற்போது நாங்கள் நாடு முழுவதிற்கும் 85% வீதமான தானியங்கி பெற்றோலியப் பொருட்களை விநியோகிக்கின்றோம்.



புகையிரத வெகன்

இரண்டாவது விநியோக ஊடகமாக புகையிரத வெகன்கள் இருப்பதுடன், இது நாடுமுழுவதிலும் பெற்றோலியப் பொருட்களை போக்குவரத்து செய்வதில் 30% வீதமான பங்களிப்பினை வழங்குகின்றது.

அடுத்த விநியோக ஊடகமாக குழாய் இணைப்பு பரிமாற்றம் இருப்பதுடன் இது களனிதிஸ்ஸ மற்றும் கெரவலப்பிட்டிய மின்னிலையங்களுக்கும் சப்புகஸ்கந்தவில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு போக்குவரத்து செய்வதற்கும் உதவுகின்றது.



குழாய் இணைப்பு


தொகைசாலை கே.கே.எஸ்
பிரதான களஞ்சிய முனையம்
தொகைசாலை
தொகைசாலை அனுராதபுரம்
தொகைசாலை மட்டக்களப்பு
தொகைசாலை குருணாகலை
பிரதான களஞ்சிய முனையம் முத்துராஜவெல
தொகைசாலை பேராதெனிய
தொகைசாலை சரசவி உயன
பிரதான களஞ்சிய முனையம் கொலன்னாவ
தொகைசாலை பதுளை
தொகைசாலை கொட்டகலை
தொகைசாலை ஹப்புத்தளை
தொகைசாலை காலி
தொகைசாலை மாத்தறை

# முன்னிலைப்படுத்தப்பட்ட செயலாற்றுகை

| | | | 2019 | 2018 | 2017 | 2016 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|
| நிதி மூலதனம் | **உபாயமார்க்க முன்னுரிமை: நிதி வளர்ச்சி** | | | | | | |
| | வருமானம் | இ.ரூ.மில் | 15,340 | 13,130 | 14,176 | 12,663 | 11,687 |
| | தொழிற்பாட்டு இலாபம் | இ.ரூ.மில் | 2,605 | 1,405 | 3,208 | 2,406 | 1,917 |
| | இலாபம் / (நட்டம்) வரிக்கு முன்னர் | இ.ரூ.மில் | 2,928 | 1,522 | 3,273 | 2,330 | 1,716 |
| | இலாபம் / (நட்டம்) வரிக்கு பின்னர் | இ.ரூ.மில் | 1,668 | 254 | 2,717 | 1,949 | 1,407 |
| | உரிமைப்பங்கு மீதான வருவாய் | % | 6% | 1% | 11% | 9% | 7% |
| | **நிதித் திடத்தன்மை** | | | | | | |
| | மொத்த சொத்துகள் | இ.ரூ.மில் | 32,205 | 30,322 | 29,991 | 28,059 | 27,270 |
| | மொத்த பொறுப்புகள் | இ.ரூ.மில் | 5,997 | 5,556 | 4,828 | 5,208 | 5,881 |
| | பங்குதாரர்களின் நிதிகள் | இ.ரூ.மில் | 26,209 | 24,766 | 25,163 | 22,851 | 21,389 |
| | காசு மற்றும் காசுக்கு சமனானவை | இ.ரூ.மில் | 3,999 | 3,149 | 1,474 | 2,455 | 748 |
| | **பங்குதாரரின் தகவல்** | | | | | | |
| | பங்கு ஆதாயங்கள் | இ.ரூ. | 2.35 | 0.26 | 3.73 | 2.32 | 1.83 |
| | பங்குக்கான பங்குலாபம் (கொடுப்பனவு செய்யப்பட்டது) | இ.ரூ. | 0.30 | 0.868 | 0.54 | 0.65 | - |
| | பெறுமதி சேர்க்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதி | இ.ரூ. | 35 | 33 | 33 | 30 | 29 |
| | உபாயமார்க்க முன்னுரிமை: தொழிற்பாட்டு சிறப்பு | இ.ரூ.மில் | 2,778 | 1,613 | 3,616 | 1479 | 1084 |
| தயாரிக்கப்பட்ட மூலதனம் | **உபாயமார்க்க முன்னுரிமை: தொழிற்பாட்டு சிறப்பு** | | | | | | |
| | **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | | | | | |
| | முனையங்கள் மற்றும் கிடங்குகள் | எண்ணிக்கை | 13 | 13 | 14 | 14 | 14 |
| | மூலதனச் செலவு | இ.ரூ. | 981 | 375 | 833 | 913 | 224 |
| மனித மூலதனம் | **உபாயமார்க்க முன்னுரிமை: மக்களில் முதலீடு** | | | | | | |
| | மொத்த ஊழியர்கள் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,856 | 2,932 | 3,045 | 3,118 | 2,964 |
| | பெண்கள் பங்களிப்பு எண்ணிக்கை | எண்ணிக்கை | 326 | 334 | 343 | 351 | 338 |
| | ஊழியருக்கான கொடுப்பனவுகள் | இ.ரூ.மில் | 6,636 | 6,853 | 5,570 | 5,782 | 5,307 |
| | ஊழியர் ஊதிய விகிதம் | % | 5% | 6% | 1% | 1% | 1% |
| | பயிற்சியில் முதலீடு | இ.ரூ.மில் | 17 | 22 | 32 | 30 | 27 |
| | மொத்த பயிற்சி மணித்தியாலங்கள் மணித்தியாலம் | மணித்தியாலம் | 9706 | 12609 | 21,832 | 26,088 | 17,928 |
| | சராசரி பயிற்சி மணித்தியாலங்கள்/ஊழியர் மணித்தியாலம் | மணித்தியாலம் | 5 | 7 | 9 | 11 | 9 |
| | ஊழியருக்கான வருமானம் | இ.ரூ.மில் | 5.37 | 4.48 | 4.67 | 4.06 | 3.93 |
| சமூக மற்றும் உறவுமுறை மூலதனம் | ஊழியருக்கான தேறிய இலாபம் (நட்டம்) | இ.ரூ.மில் | 0.58 | 0.09 | 0.9 | 0.63 | 0.47 |
| | மறைமுக ஊழியர் (அண்ணளவாக) | எண்ணிக்கை | 71 | 63 | 105 | 114 | 121 |
| | வாடிக்கையாளர் தொடுகைப் புள்ளிகள் | எண்ணிக்கை | 40 | 40 | 40 | 40 | 40 |
| | கூட்டிணைந்த சமூக பொறுப்புகளில் முதலீடு | இ.ரூ.மில் | 3.8 | 2.1 | 6.1 | 5.7 | 16.8 |
| | பயன்பெறுனர்களின் எண்ணிக்கை (அண்ணளவாக) | எண்ணிக்கை | 8800 | 8700 | 8,500 | 7,000 | 12,000 |
| | அரசாங்கத்திற்கான பங்களிப்பு | இ.ரூ.மில் | 2,441 | 2,579 | 2,175 | 1,895 | 1,303 |
| இயற்கை மூலதனம் | **உபாயமார்க்க முன்னுரிமை: நிலைத்திருப்பு** | | | | | | |
| | வலுச்சக்தி நுகர்வு | கிவோம | 3,268,177 | 3,286,631 | 2,904,300 | 2,914,112 | 2,942,078 |
| | தண்ணீர் நுகர்வு | கிலீ | 299 | 333 | 276 | 270 | 249 |

# வருடம் ஒரே பார்வையில்

வருமானம் மற்றும் மொத்த இலாப எல்லைப் போக்கு (இ.ரூ.மில்)




## விற்பனை கொள்ளளவு

**5,466,569 கி.லீ**

மொத்த கொள்ளளவு (கி.லீ.மில்)




## வரிக்கு பின்னரான இலாபம்

வரிக்கு முன்னர் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் (இ.ரூ.மில்)




மொத்த சொத்து வளர்ச்சி (இ.ரூ.மி)




தொழிற்பாட்டு செயலாற்றுகை




நடைமுறை/உடனடி சொத்து வீதம் (எண்ணிக்கை)



## அதியுயர் வருமானம்

இ.ரூபா 15 பில்லியன்

இ.ரூபா 1.77 பில்லியன்

## சொத்து அடிப்படை

இ.ரூபா

30.97

பில்லியன்

உரிமைப் பங்கு மீதான வருவாய் %




சொத்து புரள்வு வீதம்




ஒரு பங்குக்கு தேறிய சொத்துப் பெறுமதி (இ.ரூபா)




உந்தல் வீதம் (எண்ணிக்கை)



# தலைவரின் செய்தி

அன்பார்ந்த பங்குதாரர்களே, 31 டிசம்பர் 2019ஆம் ஆண்டு முடிவடைந்த சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் லிமிடட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதியியல் கூற்றுக்களின் முக்கிய விடயங்களை சபையின் சார்பாக உங்களுக்கு முன் வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன், 2020 பெப்ரவரியில் புதிய தலைவராக பெறுப்பேற்று 2019ஆம் ஆண்டின் முக்கிய விடயங்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து "நெருக்கடியான ஆண்டாக" இருந்த போதிலும், தேசிய பொருளாரத்திற்கான நீண்ட கால வாய்ப்புகள் செழிப்பானதாக இருக்கும் என நாங்கள் நம்புகின்றோம்.



### தொழிற்படும் சூழல்

இலங்கையின் பொருளாதாரம், சவாலான உள்நாட்டு சூழலுடன், குறிப்பாக உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன், பிரதான பொருளாதார நடவடிக்கைகள் தாக்கமடைந்தமையைத் தொடர்ந்து 2018ஆம் ஆண்டில் 3.3 வீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2019இல் 2.3 எனும் மிதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. நாட்டில் நீண்ட காலமாக அமைதியாக காணப்பட்ட சூழல் தாக்குதல் காரணமாக நிலைகுலைந்து போனது. ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுடன் முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள சுற்றுலாத்துறையில் பேரழிவை ஏற்படுத்தியதன் காரணமாக, அதனுடன் விசேடமாக தொடர்புடைய சேவைக் கைத்தொழிற்துறையும் தாக்கமடைந்தது.

இந்த ஆண்டின் இரண்டாம் அரையாண்டிலும், ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் வந்த ஜனாதிபதி தேர்தல் காரணமாக எழுந்த அரசியல் ஸ்திர நிலையின்மையினால் எதிர்மறையான சூழ்நிலையே காணப்பட்டமையினால் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி குறைந்து செல்லும் நிலையே தொடர்ந்தது.

### எங்கள் செயலாற்றுகை

மீளாய்வு ஆண்டின் பொருளாதாரத்தின் பெரும் பின்னடைவின் வெளிச்சத்தில், மீளாய்வின் போது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் 2019இல் இ.ரூ.15 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக்கொண்டதுடன், இது 2018ஆம் ஆண்டு பெறப்பட்ட இ.ரூபா 13 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 17% வீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது. எங்களுக்கு கீழ் 17 வகையான பெற்றோலியப் பண்ட வகைகளை நாங்கள் கையாளுகின்றோம். ஒவ்வொரு பண்ட வகைகளும் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த போதிலும் லங்கா ஓட்டோ டீசல் 2,199,.065 கிலோ லீற்றரை வழங்கி முதலிட்டதைப் பெற்றுக்கொண்டு மொத்த அளவில் 39% வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. 2019இல் லங்கா பெற்றோல் 92 ஒக்டேன் 1,543,464 கிலோ லீற்றரை பங்களிப்பு செய்து 26% வீதத்துடன், இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. வருடம் முழுவதிலும் எதிர்மறையான காலநிலை காணப்பட்ட போதிலும், 151,283 கி.லீற்றரை லங்கா எரிபொருள் ஒயில் சுப்பரும் 245,498 கி.லீற்றரை லங்கா எரிபொருள் ஒயில் 1500 செக்கும் கையாண்டன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பின்னடைந்தமையை 2018ஆம் ஆண்டு 588,707 கி.லீற்றராக இருந்த JET A1 555,437 கி.லீற்றராக குறைவடைந்ததை பிரதிபலிக்கின்றது.




2019 ஆம் ஆண்டில் பண்ட பாய்ச்சல் வினைத்திறன் மற்றும் தாங்கியின் இயலளவு மேம்படுத்தல் கம்பனியின் ஒட்டுமொத்த செயற்திறனை பதிலீடுசெய்வதனால் முக்கிய திட்டங்கள் நிறைவடைந்தன என்பதை முன்னிலைப்படுத்துவது பெறுமதிவாய்ந்ததாகும்.

பண்டத்தைக் கையாளுவதின் வினைத்திறனை மேம்படுத்துவதுவதற்கான திட்டமிடலின் கிழ் கொலொன்னாவை நிறுவலில் 15,000 எண்ணெய் களஞ்சியப்படுத்தல் தாங்கியில் நிர்மாணிக்கப்படுகின்றது.



எங்கள் விஸ்வாசமான, போட்டித்தன்மையுள்ள மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுடன் கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலொன்னாவை நிறுவல் வரை பூரணப்படுத்தப்பட்ட பண்டங்களை தடையின்றி இடமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கும் 12″ குழாயின் புதுப்பித்தல் கருத்திட்டத்தின் பூர்த்திசெய்வதற்கு எங்களால் முடிந்தது.

அதன் விளைவாக, தாமதவரியைக் குறைப்பதற்கு பெரும்பங்காற்றிய அதேவேளையில், 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலொன்னாவைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பண்டங்களின் அளவானது 141 மில்லியன் தொன்களால் அதிகரித்துள்ளது.

பிரதான முனையங்கள் மற்றும் கிடங்குகளுக்கு இடையிலான கலவை வகையான போக்குவரத்தின் செயற்பாடுகளை எடுத்துக்கொண்டால், கிடங்குகளில் இருந்து மேற்கொள்ளப்படும் மொத்தப் போக்குவரத்து செய்யப்படும் அளவில் 60% தனியார் பவுஸர்களினால் மேற்கொள்ளப்படும் அதேவேளையில் 30% வீதம் சீஜிஆர் வகன்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டேரேஜ் லிமிடட் நிறுவனத்தின் சொந்த கூட்டு வாகனத் தொகுதியினால் மொத்தக் கிடங்குகளின் அண்ணளவாக 6% வீதம் மட்டுமே போக்குவரத்து செய்யப்படுகின்றது. அடுத்த வருடம், எங்கள் அடிக்குழாயினை மேம்படுத்துவதன் ஊடாக எங்கள் மொத்த போக்குவரத்து கிடைப்பனவு முறைமையில் வகன் போக்குவரத்தினை அதிகரிப்பதற்கும் போக்குவரத்தினால் ஏற்படும் இழப்பீட்டை 50% வீதத்தினால் குறைப்பதற்கும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.



### எதிர்கால நோக்கு

முன்னறிவிக்கப்பட்ட திரவநிலை சௌகரியமாக இருக்கும் போது, பலமான ஐந்தொகை மீதியைப் பராமதிப்பதற்கும் சீரான மற்றும் விரைவான மீட்பு நிலையைப் பராமரிப்பதற்கும் எங்களால் இயலுமாகும் வகையில் பாதுகாப்பான அடிகளை எடுத்து வைத்தல் என்பது கம்பனியின் கருத்தாகும். கொடுக்கப்பட்ட கொந்தளிப்பான மற்றும் விரிவடைந்துவரும் நிலப்பிரதேசத்தில் எங்கள் தொழிற்பாடுகளிலுக்கான தாக்கத்தை கண்காணிப்பதுடன் வியாபாரத்தை சாத்தியமான வகையில் தொடர்வதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல். இதற்கு மொத்தக் கிடங்குகள் மற்றும் இரு முனையங்களில் பணியாற்றும் எங்கள் தொழிற்படையின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் மிக முக்கியமானது என முன்னுரிமை வழங்கல். கம்பனி அரசாங்கத்தினால் வழங்கப்படும் அனைத்து வழகாட்டல்களையும் சர்வதேசத்தினால் பின்பற்றப்படும் சிறந்த செயன்முறைகளையும் மதிப்பீடு செய்கின்றதுடன், இதன் அடிப்படையில் ஊழியர்கள், விருந்தினர்கள் மற்றும் ஏனைய நலன் விரும்பிகளுக்கு பாதுகாப்பானதும் பொருத்தமான பணியிட ஒழுங்குபடுத்தல்களை உறுதிப்படுத்துவதற்கு தனியார் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களை அபிருத்தி செய்தல். இவை இருந்தபோதிலும் முன்னோடியில்லாத நேரங்களை நாம் குறுகியது முதல் நடுத்தரம் வரை எதிர்கொள்கின்றோம், இந்த சவால்களைக் கடந்து மேலே செல்வதற்கு இயலும் எனும் நம்பிக்கை இருப்பதுடன் இலங்கையினுள் பெற்றோலியப் பொருட்களின் தங்குதடையின்றிய விநியோகத்தை உறுதிப்படுத்தவதற்கும் அனைத்து பங்குதாரரிகளுடன் நெருக்கமாக பணிபுரிவதற்கு அர்பணிப்புடன் செயல்படுவோம்.

இந்த அறிக்கையில் சிறு தாமதம் ஏற்பட்டதால், 2021ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைகள் வரிசையில் உள்ளன என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

திருகோணமலைப் பண்ணையைத் தவிர்த்து இரண்டு தொடக்கம் மூன்று மாதங்களுக்கான கையிருப்பினை தற்போதுள்ள தாங்கிப் பண்ணைகளில் வைத்திருப்பதற்கு அத்தாங்கிகளை மேம்படுத்தவதற்கான திட்டத்துடன். திருகோணமலை தாங்கிப் பண்ணையின் தொழிற்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான திட்டத்தில் நாங்கள் ஒரு வெற்றியைக் கொண்டுவர முயல்கின்றோம்.

கொலொன்னாவையினுள் மூன்று வருடத்தினுள் இதன் இயலளவை 50% (100,000 மெற்றிக்தொன்) அதிகரிப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பெற்றோலியக் களஞ்சிய முனையங்கள் அரசமயமாக்கப்பட்டதில் இருந்து இவ்வளவு பெரியளவில் இயலளவை மேம்படுத்துவதற்கு திட்டமிட்டமை முதல் தடவையாகும்.

நாங்கள், அரச கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட உயர் இடர் காரணிகளாக இலக்கிடப்பட்ட புதிய குழாய்களை இணைத்தல் மற்றும் புதுப்பித்தல் மீது திட்டமிடுகின்றோம்.

மேலும் புதிய இரயில்வே மார்க்கங்களை அறிமுகப்படுதல் மற்றும் போக்குவரத்தில் இரட்டிப்பு செயற்பாட்டினைக் குறைப்பதன் ஊடாக போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்கு நாங்கள் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம்.

### நன்றி நவிலல்கள்

முடிவில், எனது சகாக்களுக்கு நன்றி தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகின்றேன், அவர்களின் விலைமதிப்பற்ற வழிகாட்டுதலுக்காகவும், நிலையானதாகவும் வழங்கிய ஆதரவுக்கு எனது ஆழ்ந்த பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன். எங்கள் நிர்வாக குழு மற்றும் ஊழியர்கள் அவர்களது அயராத முயற்சிக்கு அர்ப்பணிப்பு மற்றும் முன்கொண்டு செல்லலுக்கு நான் பாராட்டுதல்களை வழங்க விரும்புகின்றேன். சபை மற்றும் நான், கௌரவ போக்குவரத்து, வலுச்சக்தி மற்றும் சக்தி அமைச்சர் திரு. மகிந்த அமரவீர மற்றும் கௌரவ வலுச்சக்தி அரச அமைச்சர் திரு. ரோகித அபேகுணவர்தன அவர்கள் வழங்கிய அளவிடமுடியாத பங்களிப்பிற்கு அவர்களைப் பாராட்டி எதிர்கால வெற்றிக்கு வாழ்த்துகின்றேன். இறுதியாக, பிரதான வாடிக்கையாளர்கள், போக்குவரத்து தொழிற்பாட்டாளர்கள், கருத்திட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் அவர்கள் வழங்கிய இடையறாத ஆதரவுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன் வாழ்த்தினையும் தெரிவிக்கின்றேன்.

**எம்.யு. மொஹமட்**

**தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்**

# பணிப்பாளர் சபை



01



02



03



05



06



07



04

## 01

**திரு. எம். உவயிஸ் மொஹமட்**

**தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்**

மக்களை போதியவரை நன்றாகப் பயிற்றவும் அதனால் அவர்கள் விலக முடியும். அவர்களை போதியவரை நன்றாகக் கவனிக்கவும் அதனால் அவர்கள் அதனைச் செய்ய மாட்டார்கள் - ரிச்சட் பிரான்சன்

திரு. மொஹமட் உவயிஸ் மொஹமட் தனது பணிக்குழுவினர் மீது அபார நம்பிக்கையைக் கொண்டிருப்பதுடன். செழிப்பான முறையில் முன்னேறுவதற்கான ஒரே வழி ஒன்றியைந்து பயணிப்பது என நம்புகின்றார்.

அண்மைக் காலத்தில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட வயது குறைந்த தலைவராக திரு உவயிஸ் இருப்பதுடன், அவர் தொடர்ந்து வரும் நோய்த் தொற்றுக் காலத்தில் வெற்றிகரமாக அமுல்படுத்திய புத்தாக்க வியாபார உத்திகளும் தீர்வுகளும் அவரது திறமையான தீர்வுத் திறனை சான்றுபடுத்தியது.

தற்போது தொழிற்முயற்சி திட்டமிடலுக்கான வலுச்சக்தி அமைச்சின் தலைவராகவும் இருக்கின்றார். அத்துடன் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளராகவும் இருக்கின்றார்.

அவர் இரண்டு தசாப்தங்களாக போக்குவரத்து, ஈஆர்பி, வலுச்சக்தி போன்றனவை உள்ளடங்கலாக பல்தரப்பட்ட துறைகளில் நீடிக்கப்பட்ட சிரேஸ்ட முகாமைத்துவ அனுபவத்தை சான்றுபடுத்துகின்றார். அவருடைய பணி அனுபவத்தையும் திறமையையும் ஐரோப்பா மற்றும் தெற்காசியாவின் ஏனைய பகுதிகளை உள்ளடக்கி உலகின் பல்தரப்பட்ட வலயங்கள் வரை விரிவுபடுத்தியுள்ளார்.

இவர் லண்டன் மெற்ரோபொலிடன் பல்கலைக்கழகத்தில் கௌரவ விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன். வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாகத்திற்கான முதுமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

பல வருடங்களாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கியல் உள்ளடங்கலாக பல துறைகளில் தொழில்சார் தகைமைகளையும் சான்றுபடுத்தல்களையும் பெற்றுக்கொண்டுள்ளார். தொழில்முயற்சியாளர் மட்டத்தில் கூட்டிணைந்த ஈஆர்பி முறைமையை அமுல்படுத்துவதில் தொடர்ந்தும் ஆர்வமாக உள்ளார்.

அதிமேதகு ஜனாதிபதி கோதாபாய ராஜபக்ஷ அவர்களின் செழிப்பான எதிர்கால கொள்கையை வலுச்சக்தித்துறையில் அமுல்படுத்துவதை தன் இலக்காகக் கொண்டுள்ளார்.

## 02

**திரு. புத்திக மடிஹஹேவா**

**பணிப்பாளர்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு. புத்திக மடிஹஹேவா ஆவார். அவர் அரச நிறுவனங்களிலும் தனியார் அமைப்புகளிலும் பிரதான முகாமைத்துவத்திலும் முகாமைத்துவ மற்றும் பட்டய சந்தைப்படுத்தல் தொழில்சார் நிபுணராகவும் 25 வருடத்திற்கு மேற்பட்ட தொழில் அனுபவத்தையும் கொண்டுள்ளார்.

இவர் ஐக்கிய இராஜ்ஜிய, சந்தைப்படுத்தலுக்கான பட்டய நிறுவனத்தில் அங்கத்தவராகவும், ஐக்கிய இராஜ்ஜிய சந்தைப்படுத்தலுக்கான பட்டய நிறுவனத்தின் உடனிணை அங்கத்தவராகவும், ஐக்கிய இராஜ்ஜியத்தின் வியாபார நிறைவேற்று அலுவலர்களின் சங்கத்தின்

# பணிப்பாளர் சபை

உடனிணை அங்கத்தவராகவும், இலங்கை முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவராகவும், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் சான்றுபடுத்தப்பட்ட அங்கத்தவராகவும் உள்ளார்.

இவர் 2020 ஜனவரியில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். இவர் 2008 இருந்து 2015 வரை இலங்கை உரக் கம்பனி லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும், லங்கா கோல் கம்பனி லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், போர்ட்ஸ் சேர்விசஸ் கோ லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், சுவர்ணகலும் குழுமக் கம்பனிகளின் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்ற அலுவலராகவும் மற்றும் ஏபிஎம்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

## 03

**திரு. ஈ. ஏ. ரத்னசீல**

**பணிப்பாளர்**

அரச நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக இருக்கும், திரு. ஈ.ஏ. ரத்னசீல இலங்கை நிர்வாக சேவையின் 1ஆம் வகுப்பு அலுவராகவதுடன், இவர் ஐக்கிய அமெரிக்காவின், மசாசுசெஸ்ட், வில்லியம் கல்லூரியில் 2007/2008 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் 1992/1995ஆம் ஆண்டு ரூகுணுப் பல்கலைக்கழகத்தில் தனது விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் இவர் 2002 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருளாதார அபிவிருத்திக்கான பட்டப்பின்படிப்பு டிப்ளோமாவையும் 2003/2004 இல் ஜப்பான். சிபோவில் பொருளாதாரத்திற்கான உயர் பாடசாலையில் அபிவிருத்திக் கற்கைக்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

திரு. ஈ.ஏ. ரத்னசீல 2001 இருந்து 2006 வரை உதவிப் பணிப்பாளராக அரசிறைக் கொள்கைகள் திணைக்களத்தில் தன் பணியை ஆரம்பித்ததுடன், பிரதிப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்ற இவர் 2007 இருந்து 2010 வரை வர்த்தகம் மற்றும் தீர்வைகள் திணைக்களத்தில் பணிபுரிந்தார். மேலும் இவர் 2011 இருந்து 2013 வரை தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளராகவும், 2013 இருந்து 2016 வரை இலங்கை சுங்கத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிந்துள்ளார். 2016 இல் இருந்து அரச நிதிகள் திணைக்களத்தின் பணிப்பாளர்/ மேலதிக பணிப்பாளர் நாயகமாக பணிபுரிகின்றார்.

திரு. ஈ.ஏ. ரத்னசீல அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு கூட்டுத்தாபனம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய ஆராய்ச்சிப் பேரவை, தேசிய அபிவிருத்தி வங்கி போன்ற பல்வேறுபட்ட அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபையில் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியாக இருந்துள்ளதுடன், தற்போது வியாபார முகாமைத்துவத்திற்கான தேசிய பாடசாலை மற்றும் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக உள்ளார்.

## 04

**திரு. மனோஜ் ஜெயின்**

**பணிப்பாளர்**

திரு மனோஜ் ஜெயின் ஜெய்பூர், என்ஐடியில் இருந்து சிவில் பொறியியலாளர் பட்டம் பெற்ற ஒருவராவதுடன். இவர் ஜெய்பூர் போடார் முகாமைத்துவ நிறுவனத்தில் இருந்து வியாபார நிர்வாகத்திற்கான முதுமானியையும் பெற்றுள்ளார். திரு குப்தா இந்தியன் ஒயில் கோப்பரேஷனில் 1993ஆம் ஆண்டு இணைந்துள்ளதுடன், அன்றிலிருந்து விமான மற்றும் சில்லறை விற்பனைகள் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட துறைகளில் பணிகளை ஆற்றியுள்ளார். முழு மாநிலத்திற்கும் பெற்றோலியப் பொருட்களின் இடைவிடாத வழங்கலைப் பராமரிப்பதற்காக ஏனைய ஒயில் சந்தைப்படுத்தல் கம்பனிகள் மற்றும் மாநில அரசுடன் நெருங்கிய ஒருங்கிணைப்பை பேணுவற்கு பொறுப்பாக ஹரியான மாநிலத்தில் மாநில அரச மட்ட ஒருங்கிணைப்பாளராக இருந்தார்.

உயர் உபாயமார்க்க மற்றும் உயர் கொள்ளவு கொண்ட பனிபட் மற்றும் கொல்கத்தா எனும் இரு காரியாலங்களில் தலைவராக இருந்தார். அவர் தலைவராக இருந்த காலங்களில் அவற்றினை மேலும் இயலுமாக்க மற்றும் விரும்பும் பணியிடமாக உருவாக்குவதற்கும், தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் உட்கட்டமைப்பைப் பெருக்குவதற்கும் ஊடாக பங்காளர்களின் இயலளவைக் கட்டியெழுப்புவதிலும் கவனம் செலுத்தினார். ஆழ்ந்த அறிவு மற்றும் புத்திசாலித்தனத்துடன் சில்லறை விற்பனைகளில் கொல்கத்தா போர்ட் ட்ரஸ்ட் மற்றும் மேற்கு பெங்கால் உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் நெருங்கித் தொழிற்பட்டார். இவரின் தலைமையின் கீழ் பல்வேறு அரச பகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டு நவீன சில்லறை விற்பனை நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

திரு. குப்தா சர்வதேச ஆலோசனையாளர்களுடன் இந்தியன் ஒயில் கம்பனியால் உருவாக்கப்பட்ட சில்லறை மாற்று நிகழ்ச்சித்திட்டத்தின் (துரவ) முக்கிய அங்கத்தவராக இருந்தார். இவர் துருவா கருத்திட்டத்தினால் உருவாக்கப்பட்ட FIT, SEVA, AWESUM, DARPAN' (விற்பனையாளர்களுக்கான புள்ளி அட்டை) உருவாக்குவதில் பிரதான வடிவமைப்பாளராவார். தலைமையகத்தில் இருந்து ஒன்லைன் லீடர்போர்டின் ஊடாக அனைத்து களங்கள் மற்றும் பிராந்திய அலுலகங்கள் கண்காணிப்பு செய்யப்பட்டது. இவர் இயலளவு கட்டியெழுப்பல் மற்றும் புகழ்பெற்ற தொழில்சார் முகவர்களின் ஊடாக விற்பனையாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் பங்கேற்றலை அறிமுகப்படுத்தினார். இவர் பணியாளர்களின் பணி அறிவினையும் ஈடுபாட்டையும் மேம்படுத்துவதற்காக வாராந்த ஒன்லைன் புதிர்களை அறிமுகப்படுத்தினார்.

திரு. குப்தாவின் மேற்படி உபாயமார்க்க முன்னெடுப்பு மற்றும் வலையமைப்பு/ வாடிக்கையாளரை மையப்படுத்திய அணுகுமுறை துருவா கருத்திட்டத்தின் கீழ் கூட்டுத்தாபனத்தின் பிரதிவிம்பத்தை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு செய்தது. ஒன்றிணைந்து பணிசெய்வதே வெற்றியின் தாரக மந்திரம் என்பதை அவர் நம்பினார்.

# பணிப்பாளர் சபை

**05**

**திரு. பிரமோத் ஜெயின்**

**பணிப்பாளர்**

பிரமோத் ஜெயின் இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாக நிதி, வரியிடல் மற்றும் வர்த்தக விடயங்கள் தொடர்பாக எண்ணெய் மற்றும் வாயுத் துறைகளில் பணி அனுபவத்தை இந்தியன் ஓயில் கோப்பரேஷன் லிமிடட் நிறுவனத்தில் கொண்டுள்ளார். அத்துடன் அவர் உள்ளக கணக்காய்வு, INDAS அமுல்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு போன்ற விசேட துறைகளையும் கையாளுகின்றார். இந்த பல விடயங்கள் சார்ந்த அறிவு நிறுவனத்தின் உபாயமார்க்கத்துடன் நிதியில் நோக்கத்தை இணைத்து வியாபார நோக்கத்தை வெற்றி கொள்வதற்கு அவரால் இயலுமானது. சிரேஸ்ட துணைத் தலைவராக கம்பனியின் முழு நிதி நடவடிக்கைகளையும் கண்காணிக்கின்றார்.

இவர் இந்தியாவின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினதும் இந்தியாவின் ஆகுசெலவு மற்றும் முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தினதும் அங்கத்தவராவார். இவர் டெல்லி பல்கலைக்கழகத்தின் வணிகவியல் பட்டத்தைக் கொண்டுள்ளார். இந்தியாவின் பட்டயக் கணக்காளர் சங்கத்தினால் அனுசரணை அளிக்கப்படும் கணக்காய்வு தொழில் நிபுணர்களுக்கான தகவல் தொழில்நுட்பத்திற்கான தொழில்சார் சான்றிதழை வழங்கும் கணக்காய்வு தகவல் முறைமை டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

இவர் இந்தியன் ஓயில் நிறுவனத்தில் பணிபுரிகையில் பல்வேறு மட்டங்களில் சந்தைப்படுத்தல் நிதியில், நேரடி மற்றும் மறைமுக வரி நிர்வாகம், உள்ளக கணக்காய்வு மற்றும் SAP & ERP முறைமை போன்ற பல்வேறு நிதித்துறைகளில் அனுபவத்தைப் பெற்றுள்ளார். திரு ஜெயின் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளராகவும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவராகவும் இருக்கின்றார்

**06**

**திரு. சுராஜ் பட்னாக்**

**பணிப்பாளர்**

பெற்றோலியத் துறையில் 25 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள திரு சுராஜ் பட்னாக் தற்போது இலங்கையின் இந்தியன் ஓயில் கம்பனி பிஎல்சி நிறுவனத்தின் சிரேஸ்ட துணைத் தலைவராக (தொழிற்பாடுகள், இறக்குமதி மற்றும் கிடங்கு விற்பனைகள்) பணியாற்றுகின்றார். இவர் 1994ஆம் ஆண்டு முகாமைத்துவ பயிலுனராக இந்தியன் ஓயில் கம்பனியில் இணைந்து கொண்டதுடன், அன்றிலிருந்து இந்தியன் ஓயில் கம்பனியின் பல்வேறுபட்ட முனையங்களிலும் விநியோக சங்கிலி முகாமைத்துவம் கப்பல் போக்குவரத்து தொழிற்பாடுகள் என்பவற்றில ஈடுபட்டார். திரு பட்நாக் கல்கத்தாவில் பணிபுரிந்த காலத்தில் நேபாளம், பூட்டான் மற்றும் இந்தியாவின் வட கிழக்கில் உள்ள மலைப்பாங்கான தூர நகரங்களுக்கு பெற்றோலிய பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகத்தை மேற்கொண்டார். தற்போது அவர் இலங்கை ஐஓசி நிறுவனத்தின் கிடங்கு வியாபாரத்தின் தலைவராக செயற்படுகின்றார்.

எம்.பி.ஏ பயிற்சியின் ஊடாக திரு. பட்நாக் மும்பாய் கடற்போக்கு வரத்திற்கான நோராட்டம் மொரார்ஜி நிறுவனத்தின் மதிப்புமிக்க பெலோவராவார். பணிப்பாளர் சபை மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்கையில் அவருடைய முனையங்கள் தொழிற்பாடு மற்றும் கடற் போக்குவரத்து அனுவத்தை பயன்படுத்தி அதனை வலுவூட்டுகின்றார்.

**07**

**திரு. தரிந்து எச் விக்ரமசிங்க**

**பணிப்பாளர்**

இவர் தொழில்முறையில் ஒரு வழக்கறிஞராவார். திரு விக்கிரமசிங்க கொழும்பு ரோயல் கல்லூரியில் கல்வியைப் பயின்றுள்ளார். அவரின் சேவைக் காலத்தில் பல்வேறுபட்ட சிவில் மற்றும் வர்த்தக சட்ட விவகாரங்களையும் பல்வேறுபட்ட புலமைச் சொத்து விடயங்களையும் கையாண்டுள்ளார். இவர் வெஸ்ட் லண்டன் பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வகுப்பு கௌரவப்பட்டத்துடன் சட்டத்தில் (புலமைச் சொத்துக்கள்) முதுமானியைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவர் தனது சட்டமானிப் பட்டத்தை வொல்வர்ஹம்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டுள்ளதுடன் சர்வதேச உறவுகள் தொடர்பான உயர் டிப்ளோமாக் கல்வியை பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகள் நிலையத்தில் பயின்றுள்ளார். திரு விக்கரமசிங்க இலங்கை சார்பாக பல்வேறுபட்ட சர்வதேசக் கூட்டங்களில் பங்குபற்றியுள்ளார். அத்துடன் இவர் பல்வேறுபட்ட தனியார் கம்பனிகளில் பணிப்பாளராகவும் உள்ளார்.

# முகாமைத்துவ குழு



1



2



3



5



6



7



9



10



11


4


8


12

| | | |
|---|---|---|
| 01 | திரு. பி. டி. தர்மவங்ச | மனிதவளம் மற்றும் நிர்வாகம்<br>பிரதி பொது முகாமையாளர் |
| 02 | திரு. ஓ. பி. கோக்கொடஆராச்சி | பிரதி பொது முகாமையாளர் |
| 03 | திரு. ஜே. ஏ. யு. ஆர். கே. ஜயலத | நிதி<br>பதில் பிரதி பொது முகாமையாளர் |
| 04 | திரு. ஜீ. எம். ஏ. பண்டார | பொறியியல் மற்றும் உதவிச் சேவைகள்<br>பதில் பிரதி பொது முகாமையாளர் |
| 05 | திரு. எம். எஸ். எம். நியாஸ் | தொழிற்பாடுகள்<br>பதில் பிரதி பொது முகாமையாளர் |
| 06 | திரு. டி. ஆர். எப். டயஸ் | பதில் பிரதான தகவல் அலுவலர் |
| 07 | திருமதி. சந்தியா விக்ரமாராச்சி | களஞ்சியம்<br>முகாமையாளர் |
| 08 | திரு. எல். டபிள்யு. குணசேகர | பிரதான சட்ட அலுவலர் |
| 09 | திரு. டி. ஏ. ஜே. எஸ். தர்மபிரிய | வாகனம்<br>தொழிற்பாட்டு முகாமையாளர் |
| 10 | திரு. அஜீம் விஜேசூரிய | வளாகங்கள் மற்றும் பொறியியல் சேவைகள்<br>முகாமையாளர் |
| 11 | திரு. டீ. வி. சரத்சந்திர | மொத்த நகர்வு மற்றும் மொத்த செயன்முறை<br>தொழிற்பாட்டு முகாமையாளர் |
| 12 | திரு. என். ஜயவர்தன | பாதுகாப்பு<br>முகாமையாளர் |

# முகாமைத்துவ குழு


13


14


15


17


18


19


21


22


23



16



20



24

13
**திருமதி. எஸ். என்.க மகே**
கூட்டிணைந்த விவகாரங்கள்
முகாமையாளர்

14
**திரு. கே. எம். என். ஏ. சீ. பெரேரா**
மனித வளங்கள்
முகாமையாளர்

15
**திரு. ஆர். எஸ். எஸ். பிரேம குமார**
பெறுகை
முகாமையாளர்

16
**திரு. டபில்யூ. எம். டீ. டபில்யூ. ஏ. பண்டார**
விநியோகம்
முகாமையாளர்

17
**திரு. ஆர். ஏ. பி. ஏ. ரனசிங்க**
கரைகடந்த தொழிற்பாடுகள்
தொழிற்பாட்டு முகாமையாளர்

18
**திரு. ஈ. ஏ. ஆர். டி. பண்டார**
பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி
முகாமையாளர்

19
**திருமதி. ஆர். சுசிரிவர்தன**
மருத்துவ அலுவலர்

20
**திருமதி. பி. ஜயகொடி**
தகவல் முகாமை முகாமையாளர்

21
**திரு. ஆர். எம். என். ஜயதிலக்க**
புலனாய்வு
பதில் முகாமையாளர்

22
**திரு. பி. எம். சீ. டயஸ்**
தீ மற்றும் பாதுகாப்பு
பதில் முகாமையாளர்

23
**திரு. கே. எச். எம். ஜயசேகர**
உள்ளக கணக்காய்வாளர்
பதில் முகாமையாளர்

24
**திரு. ஜீ. எச். என். எம். சந்திரசிறி**
ஆய்வுகூடம்
பிரதி முகாமையாளர்

# முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வு

# நிதி மூலதனம்




### நிதியியல் முனைப்புறுத்தல்கள்

பெற்றோலிய முடிவு பொருட்கள் கைத்தொழிலில் தொடர்ந்தும் காணப்படுகின்ற சந்தை நிலவரங்களில் பலதரப்பட்ட சவால்கள் காணப்பட்ட போதும், இந்த வருடத்தில் நாம் இ.ரூபா 15 பில்லியன் வருமானத்தையும் இ.ரூபா 1.7 பில்லியன் இலாபத்தையும் பெறக் கூடியதாக இருந்ததை அறிவிப்பதில் பெருமிதமடைகின்றோம்.

### வருமானமும் இலாபத்தன்மையும்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினலஸ் லிமிட்டட் நிறுவனத்தின் வருமானமானது உற்பத்தி வருமானம் மற்றும் போக்குவரத்து வருமானத்திலிருந்து பெறப்படுகின்றது. இதில் உற்பத்தி வருமானமே பிரதான வருமனமாகும். இது 2019 ஆம் ஆண்டில் மொத்த வருமானத்தின் 81% ஆகும்.

கம்பனியின் மொத்த வருமானம் இ.ரூபா 15 மில்லியன் ஆவதுடன், இது 2019 ஏப்பிரலில் இருந்து அமுலாகும் வரையில் உற்பத்தி வீதம் அதிகரித்தமையினால் 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி 17% வீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் 2018 ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாபம் இ.ரூபா 6.7 பில்லியனாவதுடன் 29% வீதத்தினால் அதிகரித்துள்ளது.

**வருமானம் மற்றும் மொத்த இலாப எல்லைப் போக்கு (இ.ரூபா.மில்)**







வருமானம் அதிகரித்ததன் காரணமாக, 2018ஆம் ஆண்டு 40% வீதமாக இருந்த மொத்த இலாப வருமான எல்லை 44% வீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே காரணத்தினால் தேறிய இலாப எல்லை 2019 மற்றும் 2018 களில் முறையே 12% மற்றும் 2% வீதமாக இருந்தது.

### வரிக்கு முன்னரான இலாபம்

வருமானம் அதிகரித்ததன் காரணமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அதி உயர் வரிக்கு முன்னரான வருமானமாக இ.ரூபா 2.9 பில்லியனை கம்பனி பதிவுசெய்தது.

# நிதி மூலதனம்

### வரிக்குப் பின்னரான வருமானம்

இந்த வருடத்திற்கான வரி ரூபா 1,162 மில்லியனாகும். 2019இல் வருமானம் மற்றும் இலாபம் அதிகரித்திருந்த போதிலும், 2018 உடன் ஒப்பிடுகையில் 2019இல் காலம் பிற்போடப்பட்ட வரியிடல் கட்டணம் குறைந்தமையினால், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12% வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

கம்பனியின் ஏனைய விரிவான வருமானம் பிரதானமாக வரையறுக்கப்பட்ட கடமைகளின் மீதான இயல்பான நட்டத்தைக் கொண்டுள்ளது.

**வரிக்கு முன்னரான மற்றும் வரிக்குப் பின்னரான இலாபம் (இ.ரூபா.மில்)**




### தொழிற்பாட்டு செயலாற்றுகை

ஏனைய வருமானமானது ஊழியர்களுக்கான கடன்கள் மீதான வட்டி மற்றும் கடன்தருனர்களின் நீண்ட கால நிலுவையை பதிவழித்தமை காரணமாக ரூபா 148 மில்லியன் அதாவது 21% அதிகரிப்பைக் காட்டியது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நிருவாக செலவினங்கள் ரூபா 4,937 மில்லியன், அதாவது 9% அதிகரித்திருந்தது. தொழிற்பாட்டு நிலையில், கடந்த ஆண்டின் ரூபா 1,404 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு ரூபா 2,605 மில்லியன் கம்பனியின் செயற்பாட்டு இலாபமாக காணப்பட்டது. இது 85% இனால் அதிகரித்துள்ளது.

**தொழிற்பாட்டு செயலாற்றுகைகள்**




### நிதியியல் நிலைமை

**மொத்த சொத்துகள்**




**மொத்த சொத்து வளர்ச்சி (இ.ரூபா.மில்)**




ஐந்தொகையானது நடப்பு அல்லாத சொத்துக்களை நோக்கியதாகக் காணப்படுகின்றது. இது மொத்த சொத்துக்களின் 50% ஆகும். நடைமுறையல்லாச் சொத்துக்கள் வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகளை அதிகமாக நோக்கியிருந்தது.

2019இல் மொத்த சொத்துக்களின் அடிப்படை 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் காணப்பட்ட இ.ரூபா 30.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டின் வருமானத்திற்கு காசு மற்றும் காசுக்கு சமனானவை மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் பெரும் பங்களிப்பு செய்து 6% வீதத்தினால் அதிகரித்து வருட இறுதியில் இ.ரூபா 32.2 பில்லியனை அடைந்துள்ளது. காசு நிலவரம் உறுதியாக காணப்படுகின்றது. இதற்குரிய காரணம் வருட இறுதியில் குறுகிய கால முதலீடு இ.ரூபா 3.9 பில்லியன் அதாவது 27% அதிகரிப்பை பிரதிபலித்தது. இது கடந்த ஆண்டில் ரூபா 3.1 பில்லியனாகும்.

# நிதி மூலதனம்

வருட இறுதியில் நடைமுறைச் சொத்து மற்றும் விரைவுச் சொத்து விகிதம் இரண்டும் முறையே 6.55 மற்றும் 6.25 ஆகக் காணப்பட்டது.

நடைமுறை/ விரைவுச் சொத்து வீதம் (எண்ணிக்கைகள்)




### சொத்து புரள்வு விகிதம்

சொத்து புரள்வு விகிதமானது விற்பனையை உருவாக்குவதற்கு கம்பனியின் வினைதிறனான சொத்தின் பயன்பாட்டை அளக்கின்றது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2019 இல் கம்பனியின் மொத்த சொத்தானது 6% இனால் அதிகரித்தது என்பதுடன் வருமானமாமும் 17% இனால் அதிகரித்தது. 2018 இல் 44% ஆக இருந்த சொத்து புரள்வு விகிதம் 2019 இல் 49% ஆக காணப்பட்டது.

சொத்துப் புரள்வு வீதம்




### உரிமைப் பங்கு மற்றும் பொறுப்பு

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆனது ருபா 26.2 பில் பங்குதாரர்களின் நிதியைக் கொண்டுள்ளதுடன், இது கம்பனியின் மொத்த சொத்தின் 81% ஆகும். கம்பனியானது 2016 இல் கடன்கள் அனைத்தையும் கட்டி முடித்தது. அத்துடன் இந்த ஆண்டும் கடன்கள் எதையும் பெற்றிருக்கவில்லை. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் இன் மொத்த பொறுப்பு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபம் அதிகரித்தமையினால் வருமான வரிப் பொறுப்பு அதிகரித்ததன் காரணமாக 2018 இல் 5.5 பில்லியனாக காணப்பட்ட மொத்தப் பொறுப்பு 2019 இல் ருபா 5.9 பில்லியனாக உயர்ந்தது.

### பங்கு மீதான வருமானம்

கடந்த வருடத்தின் 1% ஒப்பிடும் போது இந்த வருடத்தில் பங்கு மீதான வருமானம் 7% ஆகக் அதிகரித்துள்ளது. 2018 இல் காணப்பட்ட இலாபத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே மேல் நோக்கிய போக்கிற்கு காரணமாகின்றது.

பங்கு மீதான வருமான %




### காசுப் பாய்ச்சல் பிறப்பாக்கம்

இலாபத்தில் அதிகரிப்பு காணப்பட்ட போதும், கடந்த வருடத்தின் ருபா 2.5 பில்லியனுடன் ஒப்பிடும் போது 2019 இல் ஏனைய நிதியியல் சொத்துக்களின் அதிகரிப்பு, வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகள் அதிகரித்தமை, வருமான அதிகரிப்புடன் வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டமை போன்ற காரணங்களினால் நிகர காசு உற்பத்தி ருபா 1.6 பில்லியனுக்கு குறைவடைந்தது. 2019இல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மேற்கொள்ளப்பட்ட முதலீடு இ.ருபா 6.5 மில்லியன் காரணமாக தேறிய காசுப் பாய்ச்சலில் இருந்து முதலீட்டு நடவடிக்கைகள் கணிசமாக அதிகரித்து. கடந்த ஆண்டின் ருபா 166 மில்லியனுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டில் நிகர காசுப்பாய்ச்சலில் வீழ்ச்சி காணப்பட்டு இந்த வருடம் ருபா 851 பில்லியனாக காணப்பட்டது.

| | 2019 | 2018 |
|---|---|---|
| ஒரு பங்கில் இருந்தான வருமானம் (ருபா) | 2.35 | 0.26 |
| ஒரு பங்கிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ருபா) | 35 | 33 |

2018இல் ஒரு பங்கிற்கான வருமானம் 0.26 ஆக இருந்த போதிலும் 2019இல் ஒரு பங்கிற்கான வருமானம் 2.35 ஆகும். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் ஒரு பங்கிற்கான தேறிய சொத்துக்களின் பெறுமதி 33 இருந்து 35 தடவைகளாக அதிகரித்தது.

உரிமைப் பங்கு மற்றும் பொறுப்பு



# நிதி மூலதனம்

ஒரு பங்கில் இருந்தான வருமானம் (இ.ரூபா)




ஒரு பங்குக்கான தேறிய சொத்துப் பெறுமதி (இ.ரூபா)




**இயக்குவித்தல் மற்றும் மூலதன அமைப்பு**

கம்பனியின் 81% ஆன சொத்து பங்கு மூலதனத்தால் நிதியிடப்பட்டுள்ளதுடன் மீதி 19% நீண்டகால மற்றும் குறுகிய கால கடன்களாகும். கீழே வரைபில் குறிப்பிட்டுள்ளவாறு 2018 உடன் ஒப்பிடுகையில் 2019 இல் பங்கு மூலதனத்தின் பங்களிப்பு சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது. இதற்குரிய காரணம் 2018 உடன் ஒப்பிடுகையில் 2019 இல் இலாபம் அதிகரித்தமையும் ஒரு பங்குக்கான பங்கு இலாபம் குறைந்தமையும் ஆகும்.

உந்தல் வீதம் (எண்ணிக்கைகள்)




நிதியிடல் வெற்றிகள் இ.ரூபா (மில்)



# உற்பத்தி மூலதனம்

முத்துராஜவெல முனையத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள்

கொலொன்னாவை நிறுவலில், 6ஆம் வலயத்தில் உள்ள குழாய் முறைமையை மேம்படுத்தல்



முத்துராஜவெல முனையத்தில் உள்ள 6,7 மற்றும் 8ஆம் இலக்க தாங்கிகளுக்கான உள்ளக மிதக்கும் கூரைகளை வடிவமைத்தல், வழங்கல் மற்றும் நிறுவல்

கொலொன்னாவை நிறுவலில், 03ஆம் வலயத்தில் வகென் நிரப்பல் நிலைதாங்கியின் நிர்மானிப்பு

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஆனால் 31 டிசம்பர் 2019இல் பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள்

**முத்துராஜவெலவில் உள்ள உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள்**

மேலதிக கொள்ளவை அறிமுகம் செய்யும் கருத்திட்டத்திற்கு இணையாக, முத்துராஜவெல முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

கொலொன்னாவை நிறுவுகை மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடடின் ஏனைய மொத்த டிப்போக்களுடன் ஒப்பிடும் போது முத்துராஜவல முனைப்பானது அரைதானியங்கி முனையைக் கொண்டுள்ளதுடன் வினைத்திறனானதும் உற்பத்தித்திறனானதுமான பல நன்மைகளைக் கொண்டுள்ளது. நிரப்பு நிலைதாங்கியின் அனைத்து சரக்கு ஏற்றுமிடங்களும் 10 வீதி தாங்கிகளை ஏற்றக்கூடிய கொள்ளளவைக் கொண்டுள்ளதுடன் ஓர் வீதி தாங்கி திரும்புவதற்கான நேரம் ஏனைய நிறுவுகையுடன் ஒப்பிடும் போது குறைந்தளவான நேரத்தையே கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக SPBM-02 இல் இறக்கப்படுபவை துறைமுக கட்டணமின்றி நேரடியாக முத்துராஜவல முனைப்பினுள் நேரடியாக மாற்றப்படுகின்றது. இன்னொரு விசேட நன்மையானது, 2019 ஆம் ஆண்டு செயற்பாட்டுக்கு உட்படவுள்ள வெளி சுற்று அதிவேக பாதையின் வாயிலில் அது அமைந்துள்ளமையாகும். வெளி சுற்று அதிவேக பாதையானது கொழும்பிலிருந்து ஆரம்பிக்கும் அனைத்து அதிவேக பாதைகளையும் இணைப்பதனால், இது முத்துராஜவல முனைப்பிற்கு இலங்கையின் அனைத்து பாகங்களுக்கும் குறைவான செலவில் அடைய உதவுகின்றது இந்த மூலோபாய புவியியல் அமைப்பின் நன்மையானது முத்துராஜவல முனைப்பின் உட்கட்ட அமைப்பின் வசதிகளினால் உச்சக்கட்ட பயனை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த கருத்திட்டமானது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடடின் "தென் ஆசியாவின் வினைத்திறனான பெற்றோலியம் முனைப்பாக இருத்தல்" என்ற நோக்கெல்லைக்கு உட்பட்டதாகும்.

கருத்திட்டத்தில் கவனம் செலுத்தப்படும் பிரதான அபிவிருத்திகளாக களஞ்சியக் கட்டடத்தின் விரிவாக்கம், புதிய தொழிற்பட்டறை நிர்மாணிப்பு மற்றும் முனையத்தின் பிரதான வாயிலின் திருத்தம் என்பன அமைந்துள்ளன. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடடின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இந்த கருத்திட்டத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2019இல் கட்டிடக்கலை வடிவமைப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளன. அமுல்படுத்தவதற்கு முன்னர் மீள் திருத்தப்பட்ட கட்டிட வடிவமைப்பு முன்மொழிவு முகாமைத்துவத்தின் மீளாய்வின் கீழ் உள்ளது.



இந்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதினால் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆனது விரைவான விநியோக நேரத்தில் இலங்கையின் எந்த பகுதியையும் அடையும் நன்மையைப் பெறுகின்றது.

# உற்பத்தி மூலதனம்

**முத்துராஜவலவில் தாங்கி இல. 6, 7 மற்றும் 8 இற்கான உள்ளக மிதக்கும் தாங்கிகளின் வடிவமைப்பு, விநியோகம் மற்றும் நிறுவுகை**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடடின் நிறுவன நோக்கு மற்றும் பணி இற்கு சமமான முறையில் நாம் முனைய செயற்பாடுகளின் செயல்திறனை அதிகரிக்க தொடர்ந்து பாடுபடுகின்றோம். பெற்றோலியம் பொருள்களை கையாளும் நடவடிக்கைகளில் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் முகம்கொடுக்கும் முக்கிய பிரச்சினை ஆவியாதலினால் ஏற்படும் இழப்பு ஆகும். ஆவியாதலானது பொருளாதார நட்டம் மட்டும் அல்ல சூழலையும் மாசடையச் செய்கின்றது. ஓர் பொறுப்பான கூட்டிணைந்த நிறுவனமான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் இந்த ஆவியாதலினால் ஏற்படும் இழப்பினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிலையான கூம்புவடிவ கூரைகளையுடைய தாங்கிகளுக்கு ஆவியாதலை குறைப்பதற்காக உள்ளக மிதக்கும் கூரைகளை அமைத்தல் அமெரிக்க பெற்றோலியம் நிறுவனத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட ஒரு முறையாகும். உள்ளக மிதக்கும் கூரைகள் எரிவாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்தவும் வெடிக்கத்தக்க வாயுக்களை பாதுகாப்பான முறையில் வளிமண்டலத்தினுள் வெளியேற்றவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. நிலையான கூரையுடைய தாங்கிகளினுள்ளே நிறுவுவதனால், அவை பொருளாதார ரீதியாக இலாபமான ஓர் தெரிவு ஆகும். உள்ளக மிதக்கும் கூரைகள் பெரும்பகுதியான திரவ மேற்பரப்பை மூடுவதுடன் அது 98% செயல்திறனுடன் வாயு உமிழ்வு குறைப்பை ஏற்படுத்துகின்றது.

ஆவியாதலை குறைப்பதற்காக உள்ளக மிதக்கும் கூரையை நிறுவுவதற்க்காக முத்துராஜவலவின் நிலையான கூம்புவடிவ கூரை, பற்றுவைக்கப்பட்ட எ:.கு. நிலைகுத்தான பெற்றோல் களஞ்சிய தாங்கி ஆகிய மூன்றும் (03) தெரிவு செய்யப்பட்டுள்ளன. மொத்த முதலீடு ரூபா 70 மில்லியன்களாகும். முன்மொழியப்பட்ட தாங்கி 06 மற்றும் தாங்கி 07 இல் உள்ளக மிதக்கும் கூரைகளை நிறுவுதல் மற்றும் திருத்தங்களுக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள இந்த இரண்டும் நியமிக்கப்பட்டு வெற்றிகரமாக இயங்குகின்றது. 08ஆம் இலக்க தாங்கியின் மிதக்கும் கூரைகளின் நிறுவல் பணிகள் தொடர்கின்றன. 2019ஆம் நிதியாண்டு முடிவடைகையில் கருத்திட்டத்தின் முன்னேற்றம் 80% வீதத்தைப் பதிவுசெய்துள்ளது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனமாக இந்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் பெற்றோலியப் பொருட்களின் விரயத்தை குறைக்க முடியும் எனவும் இந்த நாட்டின் பெருமதிமிக்க சூழலை பாதுகாக்க முடியும் எனவும் நம்புகின்றது.





**கொலொன்னாவையின் 04ஆம் இலக்க தாங்கிக்கான திருத்தம்**

களஞ்சிய தாங்கிகளை உரிய முறையில் பராமரிப்பது பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பிரதான நோக்காகும். தாங்கிகளின் நிலவரம் மற்றும் செயற்பாட்டுக்கு உகந்ததன்மை என்பவை பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் பெற்றோலியம் கைத்தொழில் நியமங்களுக்கு ஏற்றமுறையில் காலத்திற்கு காலம் சோதனை இடப்படும். களஞ்சிய தாங்கி பராமரிப்பு அதற்க்கமைய அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கண்டறிதல் நடவடிக்கையினால் தாங்கி இல 04 இற்கான திருத்த வேலைகள் திட்டமிடப்பட்டுள்ளது. இக் கருத்திட்டம் 04 ஆம் இலக்க தாங்கியின் கூரை திருத்தத்திற்கு மேற்கொள்ளப்படுகின்றது. கூரை அரிப்பை தடைசெய்து நீர் கசிவை தடுத்து உற்பத்திகள் கலப்படம் அடைவதை தடுப்பதற்காக இந்த திருத்த வேலை மேற்கொள்ளப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் வெற்றிகரமான நிறைவு பொருள்களின் தரத்தின் உத்தரவாதம் மற்றும் தாங்கியினை உரியமுறையில் வைத்திருத்தல் என்பவற்றை இலக்காக கொண்டது. மொத்த முதலீடு இ.ரூபா 36 மில்லியனாகும். இந்த வருடம் பாரிய 12,500 மெற்றிக்தொன் களஞ்சியத் தாங்கியின் முழுக் கூரையின் மணல் வெடிப்பு மற்றும் வர்ண தொழிற்பாடுகளின் கட்டமைப்பின் அரிப்பினைத் தடுப்பதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன. மேற்குறிப்பிட்ட பெற்றோலிய களஞ்சியத் தாங்கிகளுக்கான கூரைத் தகடுகள் விசேடமாக வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. தகடுத் தயாரிப்பு மற்றும் கப்பலில் கொண்டு வருவதற்கான பணிகள் ஐக்கிய இராஜ்ஜியத்தின் எம்ஏ ஸ்டீல் நிறுவனத்தினால் பாரமேற்கப்பட்டது. API 653 அமைப்புக் குறியீடுகளுடன் இணங்கும் வகையில் தகடுத் தயாரிப்பு பெல்ஜித்தில் உள்ள இரும்பாலையில் மேற்கொள்ளப்பட்டது. தகடுகள் வெற்றிகரமாக பெல்ஜியத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதுடன் நிதி ஆண்டின் முடிவில் இதன் 40% வீதமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.



# உற்பத்தி மூலதனம்

**வலயம் - 6 இல் குழாய் முறையை மேம்படுத்தல்: கொலொன்னாவை நிறுவல்**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனமானது நாட்டின் வருடாந்தம் அதிகரித்து வரும் எரிபொருள் கேள்வியை பூர்த்தி செய்ய நிரப்பு கனவளவை அதிகரிக்க தீர்மானித்தது. இதற்க்காக வலயம் 7 இன் கேன்டிரியன் நிரப்பு கொள்ளளவை புதிய உயர் திறனை உடைய பம்பை நிறுவுவதன் மூலம் அதிகரிக்க தீர்மானித்தது. தற்போதுள்ள பம்ப் வாடியில் புதிய பம்பை நிறுவ இடம் போதாது காணப்படுகின்றது. ஆகையினால், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆனது கொலொன்னாவையின் வலயம் 6 இல் புதிய பம்ப் வாடியை நிறுவ தீர்மானித்துள்ளது. இந்த புதிய பம்ப் ஹவுஸை நிர்மாணிப்பதற்கான பணிகள் லாப் எஞ்சினியரிங் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. மொத்த ஒப்பந்தத்தின் பெறுமதி இ.ரூபா 37.5 மில்லியன் ஆவதுடன் 2019 நிதியாண்டின் முடிவில் 80% வீதமான நிர்மாணிப்பு பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. பம்ப் ஹவுஸ் நிர்மாணிப்பு பணிகளுக்கு சமாந்தரமாக அகழிக் குழாய் நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்டது. அகழி நிர்மாணிப்பு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதுடன் இதற்கான மொத்த முதலீடு இ.ரூபா 50 மில்லியன் ஆகும்.

2019 நிதி ஆண்டுக்கு அவசியமான குழாய்கள், வால்வுகள், அழுத்த அளவீடுகள் போன்ற ஏனைய உதிரிப்பாகங்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. பெறுகைக்கான மொத்தப் பெறுமதி இ.ரூபா 55.7 மில்லியன் ஆகும்.

குழாய்த் தயாரிப்பானது API 54L - B தர அமைப்புக் குறியீடுகளுடன் இணங்கும் வகையில் ரோமானியாவில் உள்ள உருக்காலையில் மேற்கொள்ளப்படுகின்றது. நிதியாண்டின் முடிவில் மூன்றாம் தரப்பினரினால் வெற்றிகரமாக தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 2020ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பொருட்களின் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 ஆண்டின் முடிவில் குழாய் நிறுவல் பணிகளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

**கொலன்னாவை நிறுவுகையில், 03ஆம் வலயத்தில் வகன் நிரப்பு நிலைதாங்கி நிர்மாணிப்பு**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆனது JET A-1 விமான எரிபொருளை கட்டுநாயக்கா, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் சிலோன் விமான போக்குவரத்து அலகுக்கு புகையிரத தாங்கிகளின் மூலம் 38 மில்லியன் லீற்றர்களை வழங்குகின்றது. கொலான்னாவையில் தற்போதுள்ள விமான எரிபொருள் புகையிரத தாங்கி நிரப்பும் வசதியானது ஓர் திறந்த நிரப்பும் இடமாகும். நிரப்பும் செயற்பாடுகள் சீரற்ற காலநிலையினால் சில சமயங்களில் பாதிப்புக்கு உள்ளாகின்றது. சில சந்தர்ப்பங்களில் ஒரு மாதத்திற்கு அண்ணளவாக ஐந்து புகையிரத தாங்கிகள் அனுப்பப்படாது இருந்துள்ளது. இது அண்ணளவாக ரூபா 3.6 மில்லியன் வாய்ப்புச் செலவு ஏற்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு, தாழ்வாரத்துடனான புகையிரத தாங்கி நிரப்பும் தாங்கி ஒன்றை நிறுவ முன்மொழியப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, புதிய நிரப்பும் நிலைத்தாங்கியை நிறுவுவதனால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது நிலைத்தாங்கி நிரப்புகையின் பாதுகாப்பையும் மேம்படுத்திக் கொள்ளலாம்.

இந்த சூழ்நிலையில், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆனது வலயம் - 3 விமான எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் ஓர் புதிய நிரப்பு கான்றியை நிறுவ 28 மில்லியன்களை முதலிட்டுள்ளது. 2019 நிதியாண்டின் முடிவில், கூரை மற்றும் கூரைக் கட்டமைப்பு மற்றும், தொழிற்படு மேடையின் ஒரு பகுதி பூர்த்திசெய்யப்பட்டதன் கூடாக மொத்தக் கருத்திட்டத்தல் 85% வீதமான பணிகள் பூர்த்திசெய்யப்பட்டன. எந்தவொரு நிலையிலும் சர்வதேச விமானத் தொழிற்பாடுகளுக்கு எவ்வித தடையும் ஏற்படாத வகையில் இந்தக் கருத்திட்டம் மிகக் கவனமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதனால் வெளிப் பட்டறைகளிலும் பொருத்தும் இடங்களிலும் கட்டமைக்கப்பட்ட அங்கத்தவர்கள் பொருத்துவதற்கும் வர்ணம் தீட்டுவதற்கும் ஏற்றவகையில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2019 ஆம் நிதி ஆண்டின் இறுதியில் இந்த கட்டுமான வேலையின் 85% வேலை நிறைவுற்றது.









# மனித வளம்




எங்கள் ஊழியர்கள் எங்கள் வியாபாரத்தின் மிக முக்கியமான சொத்தாவார்கள், அவர்கள் எங்களின் வியாபரத்தின் வெற்றிக்கு குழுக்களாகவும் தனிநபர்களாகவும் அளப்பரிய பங்காற்றுகின்றனர். ஒரு குழுவாக, அவர்கள் வியாபாரத்தின் ஒரு பகுதியாக வலையமைப்பின் தனிப்பட்ட திறன் கலவைகளையும் உறவுகளையும் அபிவிருத்தி செய்துள்ளனர். போட்டித் தன்மையுள்ள ஊதியம், எண்ணற்ற நன்மைகள், கற்றல் மற்றும் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்கள் மற்றும் மாறும் பணிச் சூழல் என்பவற்றை வழங்குவதன் ஊடாக எங்கள் ஊழியர்கள் வளர்வதற்கு உதவுகின்றோம்.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் அதன் ஊழியர்களுக்கு சிறந்த அரச கட்டமைப்புகள், கொள்கைச் சட்டகங்கள், முறைமைகள் மற்றும் செயன்முறைகள் என்பன ஊழியர்களின் உற்பத்தித்திறன் இலக்குகளையும் ஆதரிக்கும் வகையில் உயர் ஊக்குவிப்பு குழுக்களுடன் இணைந்து முதலில் பணிபுரிவதற்கு ஓர் சிறந்த இடத்தை வழங்குவதன் ஊடாக பெறுமதியை உருவாக்கியுள்ளதுடன், அதனூடாக ஊழியர்களுக்கான பெறுமதியை கம்பனி உருவாக்குகின்றது.

### எங்கள் குழுவைக் கட்டியெழுப்பல்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் மனி-தவள முகாமைத்துவம் தொடர்பாக பிரதான உபாயமாக்க அக்கறையைக் கொண்டுள்ளது. இவ்வருடம் எங்கள் குழுவை பலப்படுத்துவதற்கு பின்னவரும் விடயங்கள் தொடர்பாக கவனத்தை குவித்திருந்தது.

- மனித வலுவைத் திட்டமிடல்
- ஆட்சேர்ப்பு மற்றும் தேர்வு
- செயலாற்றுகை மற்றும் வெகுமதி முகாமைத்துவம்
- மனித வள அபிவிருத்தி
- தொழிலாளர் உறவு மற்றும் நலன்புரிச் சேவைகள்
- மனிதவள தகவல் முறைமை

எங்கள் உபாயமார்க்கத்திட்டம், வாழும் எங்கள் கூட்டிணைந்த பெறுமதிகளின் பின்னால் உந்துசக்தியாக சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் 2856 ஊழியர்களைக் கொண்ட மக்கள் முகாமைத்துவம் எங்கள் அணுகுமுறை ஆகும். நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் அனைத்து இனத்தையும் மதத்தையும் சேர்ந்த ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றார்கள். பெண்களின் பிரதிநிதித்துவம் 24% வீதமாகவும் ஒப்பீட்டளவில் குறைவாகவும் உள்ளது. குறிப்பாக உத்தியோகபூர்வ தரமல்லதில் குறைவாக உள்ளதுடன் நிறைவேற்றுத்தரத்தில் 27% சதவீதத்தை பெண்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.




### பன்முகத்தன்மை மற்றும் சமத்துவ சந்தர்ப்பம்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் பன்முகத்தன்மையைக் கொண்டாடக்கூடிய ஒரு சூழலை நிறுவுவதற்கு அர்பணிப்புடன் செயற்படுகின்றது. நாங்கள் ஆட்சேர்ப்பு, ஊதியம் மற்றும் பதவியுயர்வுகள் உள்ளடங்கலாக எங்கள் தொழிற்பாட்டினை பால், இனம், மதம், தேசியம், சிவில் நிலை அல்லது அரசியல் கண்ணோட்டம் என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது சமமான சந்தர்ப்பங்களை வழங்குதன் மூலம் பன்முகத்தன்மையை ஊக்குவிப்பதற்கும் நிறுவுவதற்கும்

# மனித வளம்

முயலுகின்றோம். இந்த அர்பணிப்பின் மையமாக எங்கள் கம்பனியின் வேறுபட்ட தொழிற்பாடுகளுக்கு நாங்கள் 4 அங்கவீனமுடையவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்றோம்.

### மனித வள ஆளுகை

சிறுவர் தொழிலாளிகளைத் தடைசெய்தல் மற்றும் சமத்துவமான சந்தர்ப்பங்களை வழங்குதல் உள்ளடங்கலாக உரிய அனைத்து சட்டங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் மனிதவள கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இயலுமான வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. நாங்கள் 18 வயதுக்கு குறைந்தவர்களை ஊழியர்களாக இணைத்துக்கொள்வதில்லை என்பதுடன் ஊழியர்களுக்கு எவ்விதமான கட்டாய தொழில் நடைமுறைகளையும் அனுமதிப்பதில்லை.

### ஊழியர் ஈடுபாடுகளும் நன்மைகளும்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிட்ட் நிறுவனத்தின் வெகுமதியளிப்பு கட்டமைப்பு வெளிப்படைத்தன்மை உடையதாக கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆண் மற்றும் பெண்களுக்கு இடையில் எவ்வித வேறுபாடுகளும் இன்றி வியாபாரம் முழுவதிலும் வகுப்புகளின்றி ஒரே சீரான தரங்களைப் பேணும் வகையில் நியாயமாகவும் சமமாகவும் அளவீடு செய்யப்படுகின்றது. அனைத்து ஊழியர்களும் போட்டித்தன்மை சட்டகத்தில் வரையறுக்கப்பட்டவாறு வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடுகளுக்கு உட்படுகின்றனர்.

| நிரந்தர பதவியணிக்கான ஊழியர் நன்மைகள் | விபரம் | நன்னடத்தைக் காலத்தில் நன்மைகள் |
|---|---|---|
| **விடுமுறை** | | |
| - வருடாந்த விடுமுறை | 14 நாட்கள் | |
| - அமைய விடுமுறை | 7 வேலை நாட்கள் | ஆம் |
| - மருத்துவ விடுமுறை | 21 வேலை நாட்கள் | |
| - மகப்பேற்று விடுமுறை | - 84 வேலை நாட்கள் | |
| | - 84 அரை நாட்கள் | |
| | - சம்பளம் அந்த விடுமுறை 84 நாட்கள் | |
| - விபத்து விடுமுறை | பணியில் இருக்கும் போதான விபத்து | |
| - பதில் விடுமுறை | ஒரு மாதத்தில் 4 சனிக்கிழமைகள் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் 2 நாட்கள் விடுமுறையையும் மேலதிக நேரக்கொடுப்பனவையும் பெற்றுக்கொள்வர் | |
| - விசேட விடுமுறை | விசேட நிகழ்வுகளுக்கு (தேர்தல், ஊரடங்கு போன்றன) | |
| - கடமை விடுமுறை | அலுவலக கடமைகளுக்கான விசேட நிகழ்வுகள் | |
| - சம்பளமற்ற விடுமுறை | வெளிநாட்டு கற்கைகள், பயிற்சி, செயலமர்வு போன்றன. | |
| சம்பள உயர்வு | ஊழியரின் பணி, வரவு மற்றும் நடத்தை மதிப்பீடு செய்யப்படும் | ஆம் |
| கொடுப்பனவுகள் | உணவுக் கொடுப்பனவுகள், பயணக் கொடுப்பனவுகள், முடிவுறுத்துகை கொடுப்பனவுகள், வருகைக்கான ஊக்குவிப்பு, மாற்றல் கொடுப்பனவுகள், வருடாந்த விடுமுறைக் கொடுப்பனவுகள், வாழ்க்கைப்படிக் கொடுப்பனவுகள், தொழில்சார் கொடுப்பனவுகள், வாராந்த விடுமுறை நாள் கொடுப்பனவுகள், உத்தியோகபூர்வ தொலைபேசி நன்மைகள். | ஆம் |
| மிகையூதியம் | மருத்துவ, ஊக்குவிப்பு மிகையூதியம், வருடாந்த மிகையூதியம். | ஆம் |
| **கடன்கள்** | | |
| - இடர் கடன் | 10 மாத சம்பளம். 60 மாதத்தில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். | இல்லை |
| - வீட்டுக் கடன்கள் | காணி அல்லது வீட்டை வாங்குவதற்கு அல்லது வீட்டைக் கட்டுவதற்கு வழங்கப்படும். | இல்லை |
| - வீட்டுத் திருத்தக் கடன் | சலுகை வட்டி வீதத்தில் வழங்கப்படும் 300 மாதங்களில் அல்லது ஊழியரின் மீதிச் சேவைக்காலத்தில் எது குறைவானதோ அதில் மீளப் பெறப்படும். | |
| - வீட்டு வசதிக் கடன் | வீட்டைத் திருத்துவதற்கு வழங்கப்படும், 120 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். | |
| - சிக்கன சமூகக் கடன் | தளபாடங்களை வேண்டுவதற்கு. 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். | |
| - கார் கடன் | 03 மாத சம்பளம். 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். | |
| - மோட்டார் சைக்கில் கடன் | நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு மட்டும். இலகுான சலுகை வட்டி வீதம். | |
| - முச்சக்கர வண்டிக் கடன் | 60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன்.<br>60 மாதங்களில் மீளச் செலுத்த வேண்டியதும் சலுகை வட்டி வீதத்தை உடையதுமான கடன். | |

# மனித வளம்

| நிரந்தர பதவியணிக்கான ஊழியர் நன்மைகள் | விபரம் | நன்னடத்தைக் காலத்தில் நன்மைகள் |
|---|---|---|
| முற்கொடுப்பனவு | | |
| - விழாக்கால முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும். | |
| - புது வருட முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும். | |
| - பாடசாலைப் புத்தகங்களுக்கான முற்கொடுப்பனவு | வட்டி இல்லாதது. 10 மாதங்களில் மீளச் செலுத்தல் வேண்டும். | |
| விருது வழங்கல் | ஊழியரின் சேவை அடிப்படையில் தங்கியுள்ளது | |
| நலன்புரி சார் நன்மைகள் | - ஒவ்வொரு ஊழியரும் 3 பகல் மற்றும் 2 இரவுகள் குடும்பத்துடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அல்லது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விடுமுறை பங்களாவில் தங்குவதற்கு உரித்துடையவர்கள்.<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் விளையாட்டு களரி நிகழ்வுகளில் பங்குபற்றல்<br>- வருடாந்த சுற்றுலா<br>- இரத்ததான நன்கொடை முகாம்<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முனையங்களில் உள்ள கூட்டுறவுக் கடைகள்<br>- சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வளாகத்தில் சிற்றுண்டிச்சாலைகள் நடத்தப்படுகின்றது | |
| மருத்துவ நன்மைகள் | - சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தில் உள்ளக மருத்துவ வைத்தியர் உள்ளார் மற்றும் இலவச மருந்துகள் வழங்கப்படும் மற்றும் மருத்துவ மீள்கொடுத்துத் தீர்த்தல்.<br>- வைத்தியசாலையில் தங்கியிருத்தலுக்கு மருத்துவ காப்புறுதி.<br>- மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல்.<br>- விசேட மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான மீள் செலுத்தல். (CT scan, MRI etc). | |
| மரண நன்மைகள் | மரண இழப்பீடு | |
| சிக்கன சமூக நன்மைகள் | - ஊழியரின் மரணம் உள்ளடங்கலாக நெருங்கிய குடும்ப அங்கத்தவரின் மரணத்தின் போதான மரண நன்கொடை<br>- நியதிச்சட்ட பணக்கொடை போன்ற பணிக்கொடை வழங்கப்படும். | |
| ஓய்வூதிய ஏற்பாடு | நியதிச்சட்ட பணக்கொடை | |
| ஏனைய வசதிகள் | விசேட கடமைகளுக்கான சீருடைகள், ஊழியர்களின் இரவு நேர கடமைகளுக்கான உணவுகளை வழங்கல் | |

### இழப்பீடுகள், வெகுமதிகள் மற்றும் அங்கீகரிப்புகள்

கம்பனி ஊழியர்களுக்கு திருப்திகரமான சமூக நன்மைகளை வழங்குவதை உறுதிப்படுத்துகின்றது. தொடர்ச்சியான 5 வருடகால சேவைக்கான பணிக்கொடைக்கான உரிமை உள்ளடங்கலாக நியதிச் சட்ட நன்மைகள். சுகாதாரக் காப்புறுதி, ஊழியர் கடன்கள், மிகையூதியங்கள், ஊக்குவிப்புகள் போன்றவை உள்ளடங்கலாக பரந்துபட்ட சமூக நன்மைகளுக்கான உரிமைகள்.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் ஊழியர்களின் நிபுணத்துவ மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பாக கவனத்தைக் கொண்டிருப்பதுடன், ஊழியர்களுக்கு வியாபார நிர்வாக முதுமானி மற்றும் ஏனைய பட்டப்பின்படிப்பு கற்கைகளை மேற்கொள்ளுவதற்கு நிதியியல் உதவிகளை வழங்கி அவர்களை உயர்கல்விக்கு ஊக்குவிக்கின்றது. அத்துடன், உயர் தொழில்புரிபவர்களை நிறுவனத்தில் தக்க வைத்துக்கொள்வதற்காக சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் அவர்களின் சந்தாவை மீள்நிரப்பல் செய்கின்றதுடன், தொடர்ச்சியான தொழில்சார் நிபுணத்துவத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் அவர்களின் பங்குபற்றலை ஊக்குவிப்பதற்காகவும் தொழில்சார் நிபுணர்களினால் நடாத்தப்படும் மாநாடுகளுக்கான கட்டணத்தை மீள்நிரப்பல் செய்கின்றது.

கம்பனி, ஊழியர்களை மட்டுமல்லாது உயர் கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்குதன் மூலம் ஊழியர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கின்றது. இவ்வருடம் வேறுபட்ட துறைகளில் உள்ள இளநிலை மாணவர்களுக்கு 146 புலமைப்பரிசில்களை மீளாய்வு வருடத்தில் வழங்கியது.

### ஊழியரின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில்




இந்தக் கம்பனியில் குறிப்பிட்ட வருட கால சேவையை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஊழியர்கள் வருடாந்தம் கௌரவிக்கப்படுகின்றனர்..

| சேவைக் காலம் | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 20 வருடங்கள் | 80 |
| 30 வருடங்கள் | 29 |
| 35 வருடங்கள் | 9 |
| 40 வருடங்கள் | 2 |

# மனித வளம்

### தொழிலிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

இலங்கையில் செயற்படும் பெற்றோலிய முனையங்களைச் செயற்படுத்தும் நிறுவனங்களில் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் என்பது மிகப் பெரியதாகும். சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் கையாளப்படும் பொருட்கள் விரைவில் தீ பற்றக்கூடியவையாவதுடன், அவை உயர் இடர் வகுப்பின் கீழ் வருகின்றது. சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் பொருளாதார மையமாக இருப்பதுடன், ஒரு பாரிய தீ இலங்கையின் பொருளாதாரத்தை மிகப் பெரிய தாக்கத்தினை உருவாக்கும். அதனால், கைத்தொழில் மற்றும் தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் முக்கியமான ஒரு விடயமாக அமைந்துள்ளது. சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் அர்ப்பணிப்புள்ள உள்வீட்டினைக் கொண்டுள்ளது. அதில்,

- தொழிற்பாடுகளின் பாதுகாப்பினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு உள்வீடு, தீயணைப்பு என்பன தீ மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு உடனடியாக தொழிற்படுவதற்கு 7 நாட்களும் 24 மணி நேரமும் தயாராக உள்ளது.
- 7 நாட்களும் 24 மணி நேரமும் மருந்து மத்தியநிலையமானது சுகாதாரத்தைக் கண்காணிப்பதற்கும் ஊழியர்களுக்கு அவசர சிகிட்சையளிப்பதற்கும் உள்வீட்டு அன்புலன்ஸ் உடன் தயாராக உள்ளது.

கீழ்வரும் இடர்களைத் தவிர்ப்பதற்காகவும் சுகாதார மற்றும் பாதுகாப்பு என்பவற்றை வழங்குவதற்காகவும் கம்பனி விசேட கவனத்தைக் கொண்டுள்ளது.

- பொறிகள், உபரணங்கள் மற்றும் தொழிற்பாடுகளின் முறைமையின் ஏற்பாடு மற்றும் பராமரிப்பு
- எரிபொருளை கையாளுதல், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து செய்தல்.
- உரிய தகவல், பயிற்சி மற்றும் மேற்பார்வைக்கான ஏற்பாடுகள்.
- பணிச் சூழலைப் பராமரித்தல்
- பணியிடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தீங்குகளைத் தவிர்த்தல்
- அனைத்து ஊழியர்களும் சுகாதார மற்றும் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதைக் கட்டாயப்படுத்தல்.

### பயிற்சி மற்றும் அபிவிருத்தி

கம்பனியின் தொலைநோக்கு மற்றும் நிலைபேறான பெறுமதி உருவாக்கலை அடைதல் என்பது அதன் ஊழியர்களின் இயலுமையில் தங்கியுள்ளது என கம்பனி அடையாளம் கண்டுள்ளது. அதனால், கம்பனியின் உபாயமார்க்கத்தை அமுல்படுத்துவதற்கும் அதன் இலக்குகளை அடைவதற்கும் போட்டித்தன்மையுள்ள ஊழியர்களை அபிவிருத்தி செய்து தக்கவைத்திருத்தல் அவசியமாகும். சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பயிற்சி மற்றும் மனிதவள அபிவிருத்தி செயற்பாடு அனைத்து ஊழியர்களினதும் பயிற்சித் தேவைகளைக் கண்காணிக்கின்றது. நாங்கள் எங்கள் ஊழியர்களின் திறன்களையும் இயலுமையையும் வழமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக கூர்மைப்படுத்துவதற்கு ஆதரவளிக்கின்றோம். மேலும், பணியின் போதான பயிற்சிக்கு மேலதிகமாக வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை நாங்கள் ஊழியர்களுக்கு வழங்குகின்றோம். 2019ஆம் ஆண்டு, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் 13,492 மணித்தியாலங்கள் தொழில்நுட்ப அறிவு, மென் திறன்கள், தலைமைத்துவ திறன்கள், அழுத்த முகாமைத்துவம், நேர்மறைச் சிந்தனை, குழுக் கட்டமைப்பு போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

| நிகழ்ச்சித்திட்டம்/பயிற்சிப் பட்டறை | பங்குபற்றியவர்கள் | மணித்தியாலங்கள் |
|---|---|---|
| சங்கீத சிகிச்சை | 103 | 412 |
| இலங்கை அரச நிறுவனங்களுக்கான அரச பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வு | 48 | 384 |
| அலுவலக முகாமைத்துவத்தின் சட்ட அம்சங்கள் | 90 | 720 |
| இறுதிப் பாவனையாளர் கணணிப் பாதுகாப்பு | 93 | 372 |
| தீ மற்றும் பாதுகாப்பு | 18 | 432 |
| ஆளுமை அழகுபடுத்தல், | 36 | 288 |
| திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (மேசன் மற்றும் பிளம்பர்) | 8 | 360 |
| கூட்டிணைந்த புலனாய்வு | 69 | 552 |
| உள்ளகத் தீ | 78 | 312 |
| அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக நடைமுறைகள் | 47 | 376 |
| அரச நிதி முகாமைத்துவம் | 74 | 592 |
| சாரதிகளுக்கான வாகன ஓட்டத் தொழில்நுட்பங்கள், வாகனப் போக்குவரத்துச் சட்டங்கள் மற்றும் பாதை பாதுகாப்பு | 78 | 624 |
| தேசிய காணக்காய்வுச் சட்டம் 2018 | 60 | 480 |
| வீட்டுப் பராமரிப்பு | 12 | 192 |
| பிரஸென்டேசன் திறன்கள் | 67 | 536 |
| போதைப் பொருள் பாவனை முகாமைத்துவம் | 40 | 160 |
| தகவல் முகாமைத்துவக் கணக்காய்வு | 23 | 184 |
| தொழிற்சாலை கட்டளைச் சட்டத்தின் நிர்வாகம் | 21 | 168 |
| தொழில் சட்டம் மற்றும் நிர்வாக நடைமுறைகள். | 28 | 224 |
| அறிமுகப் பயிற்சி | 9 | 144 |
| விழிப்புடைய தலைவர்களை உருவாக்கல் | 24 | 192 |
| அணுகுமுறை மாற்றம் மற்றும் இயலளவு அபிவிருத்தி, மன அழுத்த முகாமைத்துவம் | 102 | 816 |
| மைக்ரோஸொப்ட் ஒபிஸ் | 10 | 2,400 |
| நிர்வாக அலுவலர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள் | 26 | 208 |
| தொழில் வெற்றி | 92 | 736 |
| தரமான தொழில் சூழல் | 27 | 216 |
| ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி சட்டம் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவு | 47 | 376 |
| உள்ளக ஒழுக்காற்றல் விசாரணைகளை எவ்வாறு மேற்கொள்வது | 39 | 312 |
| ஆரோக்கியமான இதயம் | 43 | 172 |
| அலுவலக உதவியாளர்களின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் | 35 | 280 |
| வாகனப் போக்குவரத்து சட்டம் | 34 | 272 |
| மொத்தம் | 1481 | 13,492 |

# மனித வளம்

எங்கள் வியாபாரத்தின் பெறுமதிக்கு அடிப்படை, ஊழியர்கள், அயலவர்கள் மற்றும் சமூகம் உள்ளடங்கலாக பிரதான பங்குதாரர்களுடன் ஆழமான உறவுகளை சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் தொடர்வதாகும்.

**ஊழியர் நிகழ்வுகள்**

- **இரத்ததானப் பிரச்சாரம்**

கம்பனியின் ஊழியர்களின் செயற்பாடான பங்களிப்புடன் தொடர்ச்சியான 39ஆவது வருடமாக 2019ஆம் ஆண்டும் வருடாந்த இரத்ததான பிரச்சார நிகழ்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.



- **பௌத்த நிகழ்வுகள்**

நிறுவனத்தின் பௌத்த சங்கம் போயா தினங்களில் பௌத்த நிகழ்வுகளை அலுவலக வளாகத்தில் ஒழுங்கு செய்ததுடன், அனைத்து ஊழியர்களின் பங்குபற்றலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.





- **சங்கீத சிகிச்சைக்கான பயிற்சிப் பட்டறை**

வேலை மற்றும் வாழ்க்கையை சமநிலைப்படுத்தவதற்கு இசை, தாளம், ஸ்வரம், தொழில்நுட்பம் மற்றும் சங்கீத சிகிச்சையின் பிரயோக அம்சங்கள் இல்லாமல் சொற்கள் இல்லாமல் சங்கீதத்தை எவ்வாறு விளங்கிக் கொள்ளுதல் எனும் நோக்கத்துடன் பயிற்சி மற்றும் மனித வள அபிவிருத்தி செய்ற்பாடுகளினால் சங்கீத சிகிச்சை மீதான பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது..





# இயற்கை மூலதனம்




இயற்கை மூலதனமானது எங்கள் பெறுமதி உருவாக்கல் செயன்முறையில் முக்கியமான உள்ளீடாக இருப்பதுடன் எங்கள் அனைத்து துறைகளும் எங்களினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதை உறுதிசெய்வதற்கு பலமான அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றன.

வளங்களின் பற்றாக்குறை மற்றும் காலநிலை மாற்றம் என்பன உலகளாவிய ரீதியாக பாரிய பிரச்சினையாக எழுந்துள்ளதுடன், இது உலகம் முழுவதிலுமுள்ள நிறுவனங்களின் நிலைத்திருப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக விளங்குகின்றது. எங்கள் காபன் கழிவுகளைக் குறைத்தல் வலுச்சக்தியை உச்சப்படுத்தல் மற்றும் நீரின் வினைத்திறனான பயன்பாடு, கழிவினைக் குறைத்தல் போன்ற செயன்முறையின் ஊடாக நிறுவனத்தின் நிலைத்திருப்பினை வளர்ப்பதற்கு நிறுவனம் முயலுகின்றது. வலுச்சக்தி நுகர்வு, வலுச்சக்தி செறிவு மற்றும் வெளியேற்றப்படும் கழிவுகளின் தரம் மற்றும் அளவு போன்ற சூழல் காட்டிகளை அளவீடு செய்வதற்கான முறைமை மேம்படுத்தப்படுகின்றது. இவ்வருடம், சுற்றாடல் ஒழுங்குவிதிகள் அல்லது சட்டங்கள் என்பவற்றுடன் இணங்காமை தொடர்பாக எவ்வித தண்டங்கள் அல்லது அபராதங்கள் எதுவும் விதிக்கப்படவில்லை

### வலுச்சக்தி

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் வலுச்சக்தி தேவைகள் டீசல், பெற்றோலிய எண்ணெய்கள் மற்றும் தேசிய மின்சாரக் கட்டத்திலிருந்து பெறப்படும் மின்சாரம் மூலம் பூர்த்திசெய்யப்படுகின்றது. வலுச்சக்தி, கரைகடந்த அலகு மற்றும் நாடளாவிய கிடங்குகளுக்கு அதிகமாக வலுச்சக்தியை வழங்குவதற்கு பிரதானமான இரு முனையங்கள் (கொலொன்னாவை மற்றும் முத்துராஜவெல) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வருடத்தில் கம்பனியினால் பயன்படுத்தப்பட்ட வலுச்சக்தி நுகர்வு மூலம் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வலுச் சக்தி மூலம் | ஒரு அலகுக்கான அளவீடு | 2019இல் நுகர்வு | 2018இல் நுகர்வு |
|---|---|---|---|
| மின்சாரம் | kwh | 3,268,177 | 3,286,631 |
| டீசல் | KL | 4,014 | 4,166 |
| தண்ணீர் | KL | 299 | 333 |

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் வலுச்சக்தி வினைத்திறனை அதிகரிப்பதற்கு பல்வேறுவகையான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. பம்ப் இல்லங்கள், நிரப்பல் கிடங்குகள் மற்றும் தாங்கிப் பண்ணைகள் மற்றும் மேற்குறிப்பிட்ட நிறுவலுக்கு அவசியமான பொறிகள் போன்ற நிர்மானிப்புகள் மற்றும்/ அல்லது விரிவுபடுத்தல்கள் புதிய அபிவிருத்திகள் மற்றும் மேம்படுத்தல்கள் வடிவமைக்கப்பட்ட நியமங்களுக்கு அமைவாக தொழிற்படும் மையத்தில் உச்சளவான வினைத்திறனுடன் பொறியில் செயற்பாடுகள் தொழிற்படும் வகையில் தனிப்பட்ட ரீதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்ளக பொறியியல் குழுவினால் வடிவமைக்கப்பட்ட முறைமைகளின் ஊடாக வினைத்திறன் அடையப்பட்டுள்ளது.

### தண்ணீர்

எங்கள் கம்பனியின் தொழிற்பாடுகளுக்கு நீர் மூலம் பயன்படுத்தப்படுவதில்லை மற்றும் எங்கள் ஊழியர்களின் நுகர்வுக்கும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு மட்டுமே நீரானது பயன்படுத்தப்படுகின்றது. எங்கள் நீர்த் தேவையானது பிரதானமாக நகரசபை நீர்க் குழாய்களினால் பூர்த்திசெய்யப்படுகின்றது. கம்பனியின் நீர் நுகர்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வலுச் சக்தி மூலம் | ஒரு அலகுக்கான அளவீடு | 2019இல் நுகர்வு | 2018இல் நுகர்வு |
|---|---|---|---|
| மாநகர நீர் விநியோகம் | KL | 299 | 333 |

# இயற்கை மூலதனம்

### கனியங்கள்

இலங்கை உயிர்ச்சுவடுகளில் இருந்து எரிபொருட்களை உற்பத்தி செய்வதில்லை. பிரதானமான மூலப்பொருளான பெற்றோலிய அடிப்படை எரிபொருள் வெளிநாட்டு தரப்பினரிடமிருந்து பெறப்படுகின்றது.

### உமிழ்வுகள், கழிவுகள் மற்றும் தொழிற்பாட்டுக் கழிவுகள்

அனைத்து பெற்றோலியப் பொருட்களும் கொதிக்கும் தன்மையுடையவை என்பதனால் அவை ஆவியாவதனால் சூழல் மாசடையக்கூடும். அதனால் சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவன வளாகத்தினுள் சுவாசிக்கும் காற்றின் தரத்தின் அளவை உறுதிப்படுத்துவதற்காக காற்றின் தரம் அளவிடப்படுகின்றது. அதன் பெறுபேறுகளுக்கு அமைவாக அனைத்து பெறுபேறுகளும் விதிக்கப்பட்ட நியம அளவிற்கு குறைவாகவே உள்ளன.

நீரில் பெற்றோலியப் பண்டங்களின் தடயம் வெளிப்படக்கூடும். இதற்கான பிரதான காரணம் தாங்கிகளில் இருந்து பாதைத் தாங்கிகள் மற்றும் ரெயில் வெகன்கள் நிரப்பும் செயற்பாடுகளின் போது தற்செயலாக ஏற்படும் சிந்துதலாகும். அத்துடன், கடல் நீரிலும் பெற்றோலியப் பொருட்களின் தடயம் காணப்படக்கூடும். இந்த எண்ணெய் நீரை அகற்றுவதற்கு நிறுவனம் இன்டர்கெப்டர் தாங்கி முறைமை எனும் முறைமையைப் பயன்படுத்துகின்றது. எண்ணெய் நீர் அனைத்து தாங்கிகளும் காப்பு செய்யப்பட்ட தாங்கிப் பண்ணை அமைந்துள்ள இடைநிலைத் தடையின் ஊடாக செல்கின்றது. இங்கு அடர்த்தி வேறுபாட்டின் காரணமாக எண்ணெய் தண்ணீரில் இருந்து பிரிக்கப்படுகின்றது. வேறாக்கப்பட்ட எண்ணெய் காலத்திற்கு காலம் காலி பவுசரினால் சேகரிக்கப்படுகின்றதுடன், சுத்தமான எண்ணெயற்ற எண்ணெய் ஒருமுக குளத்திற்கு மேலும் தயார்செய்யப்படுவதற்காக கடத்தப்படுகின்றது. நீரின் தரம் வழக்கம் போல் சோதிக்கப்படுகின்றது.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தாங்கிகளில் உருவாக்கப்பட்ட படிவுகள் இன்னொரு அரைத்திரவ கழிவாகும். இது வெளி வாடிக்கையாளர்களுக்கு சுத்திகரிப்பு அட்டவணைக்கு அமைவாகவும் சேகரிக்கப்பட்ட படிவுகளின் அளவுக்கு அமைவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது. கராஜில் சேகரிக்கப்படும் கழிவு எஞ்சின் எண்ணெயும் டெண்டர் முறையின் ஊடாக வெளிநபர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் கீழ்வரும் மேம்படுத்தல்கள் சூழலைக் காப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது.

- ஒரு தற்செயல் தேவைக்கு அமைவாக HSE அலகின் கீழ் உறிஞ்சாத எண்ணெய் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த அதிகரிப்பு விபத்து எண்ணெய் கசிவுகளுக்கு பயன்படுத்தப்பட்டதுடன் சிந்திய எண்ணெய்களை மீட்பதற்கான வினைத்திறனை அதிகரித்தது.

- சிற்றுண்டிச்சாலையில் உருவாகும் சேதன கழிவுகளை மாற்றுவதற்காக உயிரியல் வாயு பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டது. இது பக்றீரியாவின் அனுசேப செயற்பாட்டை வலுச்சக்தியாக மாற்றும்.

### பண்டங்களின் போக்குவரத்து

பெற்றோலியப் பண்டங்களின் போக்குவரத்தின் போது ஏற்படும் எண்ணெய்க் கசிவுகள்/ஒழுக்குகள்/ விபத்துகள் என்பவற்றினால் ஏற்படும் சூழல் மாசடைதலானது நிலம் மற்றும் நீர் இரண்டையும் பாதிக்கின்றது. திட்டமிடப்படாத நிகழ்வுகளைக் கையாளுவதற்கு பயிற்றப்பட்ட போக்குவரத்து குழாமின் ஊடாக பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறுவனம் மேற்கொண்டுள்ளது. நாங்கள் எண்ணெய்க் கசிவுகள்/ஒழுக்குகளின் போது நியமமுறையில் மற்றும் உடனடியாக செயற்படும் முறை தொடர்பாக போக்குவரத்து மேற்கொள்ளும் குழாத்திற்கு தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றோம். எங்கள் முன்னெடுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

போய்/ஜெட்டிகளில் ஏதேனும் எண்ணெய் கசிவுகள் ஏற்படுவதிலிருந்து தடுப்பதற்கு தாங்கிகளில் இருந்து கப்பல் போக்குவரத்துக்கான சாதனத்தைத் துண்டித்தல். தாங்கிகளுக்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் தாங்கிகளில் இருந்து அகற்றல் இரு நடவடிக்கைகளின் போதும் குழாய்களில் சேதங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவதற்கு அழுத்தப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

- ஏதேனும் எண்ணெய் கசிவுகள் ஏற்பட்டால், எண்ணெய்களை உறிஞ்சி எடுப்பதற்கான வாகனங்கள் தயாராக உள்ளதனால், இது சிறிய எண்ணெய் கசிவுகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

- ஏதேனும் எண்ணெய் சிந்துதல்கள், எண்ணெய் இரசாயனங்களின் சிதறல்கள் ஏற்படும் போது, எண்ணெய் சிந்துதல்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு எண்ணெய்களை அகத்துறிஞ்சும் கப்கள் (எண்ணைய் உறிசல்கள்) அவ்விடத்தில் கிடைக்கப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- ஏதேனும் பொது மக்கள் பொறுப்புகள், பண்டப் பொறுப்புகள் மற்றும் மாசுறல் பொறுப்புகள் என்பவற்றுக்கு மூன்றாம் தரப்பு காப்புறுதி.

# ஆளுகை மற்றும் இணக்கம்

# கூட்டிணைந்த ஆளுகை

**சபையின் பிரகடனம்**

சபையின் சார்பாக, சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் கம்பனி முழுவதிலும் கூட்டிணைந்த ஆளுகை கொள்கைகள் பிரயோகிக்கப்படுகின்றது என்பதைக் கண்காணிப்பதில் உறுதியான அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதுடன் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கை கம்பனியினுள் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகளின் நியாயமான கணக்கினையும் வழங்குகின்றது என்பதையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அதற்கமைவாக, பிரயோகிக்கப்பட வேண்டிய ஒழுங்குமுறைகள் மற்றும் நியதிச்சட்ட முறைகள் என்பவற்றுடன் இணங்குவதற்கு அனைத்து நபர்களும் செயற்படுகின்றார்கள் என்பதை நான் பிரகடனப்படுத்துகின்றேன்.

திரு. எம். உவைஸ் மொஹமட்
தலைவர்



"சிறந்த கூட்டிணைந்த ஆளுகை என்பது நிறுவனத்தின் அனைத்து பங்குதாரர்களின் பெறுமதிகளையும் மேம்படுத்துவதுடன் நீண்ட கால நிலைபேறான வளர்ச்சியை நிர்ணயிக்கும் வகையில் கம்பனியை சிறந்த முறையில் நிர்வகிப்பதை உறுதி செய்தலே அடிப்படை என நாங்கள் நம்புகின்றோம்."

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனமானது சிறந்த ஆளுகைக்கு அர்ப்பணித்துள்ளது. இது சபையினதும் முகாமைத்துவத்தினதும் பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைதன்மை, அனைத்து பரிமாற்றங்களிலும் நியாயம் என்பவற்றை வலுப்படுத்துவதுடன், நிறுவனத்தின் மீதான பொது மக்கள் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கு உதவுகின்றது. சிறந்த ஆளுகையின் நோக்கமானது, கம்பனியின் நீண்டகால வெற்றியினை தரக்கூடிய செயல்திறன் மிக்க தொழில்முயற்சி சார்ந்த மற்றும் முன்மாதிரியுடைய முகாமைத்துவத்தினை வசதிப்படுத்துவதாகும்.

- எவ்வாறு தொலைநோக்கு, செயற்பணி, குறிக்கோள் மற்றும் உபாயமார்க்கங்கள் வடிவமைக்கப்பட்டு தொடர்பு கொள்ளப்படுகின்றது
- எவ்வாறு பெறுமதிகள் இணங்கப்படுகின்றன
- எவ்வாறு இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது
- எவ்வாறு வெளிப்படைத்தன்மை ஊக்குவிக்கப்படுகின்றது
- எவ்வாறு நிலையான முறையில் தொழிற்பாடுகள் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது
- எவ்வாறு எதிர்காலத் தலைவர்கள் ஊக்குவிக்கப்பட்டு மேம்படுத்துகின்றார்கள்
- எவ்வாறு கூட்டிணைந்த கலாச்சாரம் பங்குதாரர்களின் பெறுமதியை மேம்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது.

இலங்கையில் பெற்றோலிய உற்பத்திகளின் பிரதான வசதிப்படுத்துனராக நிறுவனமானது, நாட்டிலுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகார சபைகளினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கோவைகள் மற்றும் கம்பனியினால் உருவாக்கப்பட்ட உள்ளகக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு இணங்கும் வகையில் கூட்டுணைந்த ஆளுகைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துகின்றது என்பதை நிறுவனமானது உறுதிப்படுத்துகின்றது.

**கூட்டிணைந்த ஆளுகை கட்டமைப்பு**

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஆளுகைச் சட்டகத்தினால் பணிப்பாளர் சபை, அதன் உப குழுக்கள், சிரேஷ்ட முகாமைத்துவம், பங்குதாரர்கள், ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் மற்றும் ஏனைய நலன்விரும்பிகளுடனான அடிப்படை உறவுகள் வழிநடத்தப்படுகின்றது.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கூட்டிணைந்த ஆளுகைச் சட்டகத்தினை கீழ்வரும் மூன்று தூண்களின் கீழ் வெளிப்படுத்த முடியும்.

1. இணக்கம்
2. உள்ளக ஆளுகைக் கட்டமைப்பு
3. உத்தரவாதம் மற்றும் கட்டுப்பாடு




**இணக்கம்**

**வெளிவாரித் தேவைப்பாடுகள்**

2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிகள் சட்டம்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான கோவை

2003ம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டல்கள்

2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

**உள்ளகத் தேவைப்பாடுகள்**

சபையின் அமைப்பு விதிகள்

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் கம்பனி ஒழுங்குவிதிகள்

வியாபாரத்தை நடாத்துவதற்கான ஒழுக்கநெறி

இடர் முகாமைத்துவக் கொள்கை

# கூட்டிணைந்த ஆளுகை

## 01. இணக்கம்

கம்பனியின் கூட்டிணைந்த ஆளுகை நடைமுறைகள் கீழ்வரும் சட்டம், கோவைகள் மற்றும் தன்னார்வ பழக்கங்களின் சட்டகத்தைப் பின்பற்றுவதற்கான தேவைப்பாட்டுடன் இணங்குகின்றன.

- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான கோவை
- 2003ஆம் ஆண்டு நிதி அமைச்சின் பொது தொழில்முயற்சி திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான பொது தொழில்முயற்சி வழிகாட்டல்கள்
- 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- 2017ஆம் ஆண்டு 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்
- சபையின் அமைப்பு விதிகள்
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள்
- கம்பனி ஒழுங்குவிதிகள்
- வியாபாரத்தை நடாத்துவதற்கான ஒழுக்கநெறி
- பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் மற்றும் முகாமைத்துவக் குழுக்களுக்கான பட்டயம்

## 02. ஆளுகை கட்டமைப்பு

### சபைப் பணிப்பாளர்கள்

கம்பனியின் அனைத்து செயற்பாடுகளிலும் கூட்டிணைந்த ஆளுகையின் உயர் நியமத்தைப் பராமரிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. கூட்டிணைந்த ஆளுகையின் நோக்கம், நீண்ட கால பங்குதாரர் பெறுதியை வினைத்திறனானதும் முன்மாதிரியானதுமான முகாமைத்துவத்தின் ஊடாக உருவாக்குதல் ஆகும். சபையின் பிரதான பணிகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- **பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்**

பணிப்பாளர் சபையின் பிரதான பொறுப்புகள் பின்வருமாறு,

◇ நிறுவனத்தின் நீண்ட கால வெற்றியை ஊக்குவிக்கும் நோக்குடன் அவசியமான உபாயமார்க்கங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டலையும் பணிப்புரையையும் வழங்குதல்.

◇ கம்பனியின் செயலாற்றுகை நோக்கம் மற்றும் கூட்டிணைந்த உபாயமார்க்கத்திற்கு உபாயமார்க்க வழிகாட்டலை வழங்குவதுடன் மதிப்பீடு செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.

◇ வருடாந்த திட்டங்களையும் நீண்ட கால வியாபாரத் திட்டங்களையும் மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.

◇ ஆளுகை மற்றும் இணக்க முறைமையை கண்காணித்தல்.

◇ கம்பனியினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் மற்றும் ஏனைய அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு அனுமதியளித்தல் மற்றும் கண்காணித்தல்.

◇ பிரதான கைகொள்ளல்கள், அகற்றல்கள் மற்றம் மூலதன செலவுகளை மீளாய்வு செய்தல் மற்றும் அனுமதியளித்தல்.

◇ சபையிலிருந்து நிறைவேற்றுதர மட்டம் வரை வழங்கப்பட்ட சாட்டுதல்களில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதை தீர்மானித்தல்.

◇ உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறை முறைமைகளைக் கண்காணித்தல்.

- **சபையின் கட்டமைப்பு**

31 டிசம்பர் 2019ஆம் திகதியின் பணிப்பாளர் சபையின் கட்டமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 01. | திரு. எம்.ஆர்.எம். ஆப்டீன் | - பிரதி தலைவர் முகாமைத்துவப் பணிப்பாளர் |
| 02. | திருமதி. கே.டி.ஆர்.ஒல்கா | - பணிப்பாளர் |
| 03. | திரு. நிமல் ஜயசுந்தர | - நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| 04. | திரு. சுராஜ் பட்னாக் | - பணிப்பாளர் |
| 05. | திரு. பிரமோத் ஜெயின் | - பணிப்பாளர் |
| 06. | திரு. ஷாமல் செனரத் | - பணிப்பாளர் |
| 07. | திரு. ஆனந்த பாலித | - பணிப்பாளர் |
| 08. | திரு. மனோஜ் குமார் குப்தா | - பணிப்பாளர் |

2019ஆம் திகதியில் மாற்றங்கள்

| | பணிப்பாளரின் பெயர் | சபைக்கு நியமிக்கப்பட்ட திகதி | சபையில் இருந்து இராஜினாமா செய்த திகதி | பதவி |
|---|---|---|---|---|
| 1 | திரு. தம்மிக்க ரனதுங்க | 01 ஜூன் 2017 | 30 ஜனவரி 2019 | தலைவர் |
| 2 | திரு. ஜி.எஸ். விதானகே | 30 ஜனவரி 2019 | 12 செப்டெம்பர் 2019 | தலைவர் |
| 3 | திரு. சஞ்சீவ விஜேரத்ன | 01 ஜூன் 2017 | 30 ஜனவரி 2019 | முகாமைத்துவ பணிப்பாளர் |
| 4 | திரு. எம்.ஆர்.எம். ஆப்டீன் | 30 ஜனவரி 2019 | | முகாமைத்துவ பணிப்பாளர் |
| 5 | திரு. கே.டி.ஆர். ஒல்கா | 14 ஒக்டோபர் 2015 | | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |
| 6 | திரு. ஷியாம் போரா | 14 ஒக்டோபர் 2015 | 14 மே 2019 | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |
| 7 | திரு. நிமல் ஜயசுந்தர | 01 ஜூன் 2017 | | நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளர் |
| 8 | திரு. யு.என். குணவர்தன | 01 ஜூன் 2017 | 30 ஜனவரி 2019 | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |
| 9 | திரு. சுராஜ் பட்நாக் | 30 மே 2018 | | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர |
| 10 | திரு. பிரமோத் ஜெயின் | 16 ஒகஸ்ட் 2018 | | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |
| 11 | திரு. ஷாமல் செனரத் | 30 ஜனவரி 2019 | | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |
| 12 | திரு. ஆனந்த பாலித | 14 மே 2019 | | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |
| 13 | திரு. மனோஜ் குமார் குப்தா | 20 மே 2019 | | நிறைவேற்றுத் தரம் அல்லாத பணிப்பாளர் |

தற்போதுள்ள ஒவ்வொரு பணிப்பாளரினதும் சுயவிபரக் குறிப்புகள் வருடாந்த அறிக்கையின் பக்கம் 10இல் இருந்து பக்கம் 13 வரை அவர்களின் அனுபவத்தின் பெறுமதி மற்றும் கம்பனிக்கு உபாயமார்க்கம், செயலாற்றுகை மற்றும் வளங்கள் மற்றும் வியாபார நடைமுறைகளை வழங்குவதற்கான சுயாதீன நியாயத்தன்மையை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# கூட்டிணைந்த ஆளுகை

**● சபையின் கட்டமைப்பு மற்றும் சபையின் சமத்தன்மை**

கூட்டிணைந்த ஆளுகைச் சட்டகத்தின் பிரதான ஆக்கக்கூறாக பணிப்பாளர் சபை உள்ளது. வினைத்திறன் மிக்க தீர்மானத்தை எடுப்பதற்கும், திறமையான குழாம் மற்றும் வளங்களின் சிறந்த பகிர்ந்தளிப்புக்கும் சபையின் வேறுபட்ட திறன்கள், அறிவு, அனுபவம், தொழில்சார் தகைமைகள், பால், வயது, தேசியம் அவசியமாகும்.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2019இல், வேறுபட்ட துறைகளில் உச்சளவான திறன்கள், அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டிக்கும் பணிப்பாளர் சபை இரண்டு நிறைவேற்றுத்தரமுள்ள உறுப்பினர்களையும் ஆறு நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களையும் உள்ளடக்கி எட்டுப் பணிப்பாளர்களை சபை கொண்டுள்ளது.

| பணிப்பாளர் | பணிப்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளர்கள் |  |
| நிறைவேற்றுத் தரமில்லாப் பணிப்பாளர்கள் |  |

நிறைவேற்று/ நிறைவேற்றுத் தரமில்லாப் பணிப்பாளர்கள்







**● பணிப்பாளர்களின் நியமனம்**

சபையின் அமைப்பு விதிகளின் ஊடாக வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஊடாக பணிப்பாளர்கள் சபைக்கு நியமிக்கப்படுகின்றனர். பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கும் பொழுது சபை ஏனைய அவசியமான காரணிகளுடன் அனுபவம், வியாபாரத்தையும் நிதியியல் பிரச்சினையையும் விளங்கிக்கொள்ளல், தீர்மானங்களை எடுப்பதற்கான அனுபவம், பல்திறன், தலைமைத்துவம் மற்றும் வியாபாரத்தையும் கைத்தொழிற்துறையையும் பாதிக்கும் அடைவுகள் மற்றும் அனுபவங்கள் என்பனவும் ஏனைய விடயங்களும் கவனத்தில் கொள்கின்றது.

**● பொறுப்புகளின் பங்கீடு**

01 ஜூன் 2017 இல் இருந்து தலைவரினதும் முகாமைத்துவப் பணிப்பாளரினதும் வகிபாகங்கள், சபையின் செயற்பாட்டுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் அதிகாரம் மற்றும் வியாபாரத்தை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரம் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவர்களுக்கிடையிலான பொறுப்புகளுக்கிடையில் தெளிவான வேறுபாடுகளுடன் வேறாக காணப்படுகின்றது.

திரு தம்மிக்க ரனதுங்க, தலைவராகவும் திரு. சஞ்சீவ விஜேரத்ன கம்பனியின் முகாமைத்துப் பணிப்பாளராகவும் 01 ஜூன் 2017 இருந்து 30 ஜனவரி 2019 வரை செயற்பட்டனர். அதன் பின்னர் திரு. ஜி.எஸ். விதானகே புதிய தலைவராகவும் திரு.எம்.ஆர்.எம்.ஆப்டீன் கம்பனியின் புதிய பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டனர்.

சபையின் செயற்பாடுகளை நடாத்துவதற்கும் வினைத்திறனான நிறுவனத்திற்கும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களுக்கும் நிறைவேற்றுத் தரமுள்ள பணிப்பாளருக்கும் இடையில் ஒருங்கிணைந்த வினைத்திறனான உறவுமுறையை உறுதிப்படுத்துவதற்கான தலைமைத்துவத்தை வழங்குவது தலைவரின் வகிபாகமாகும். முகாமைத்துவப் பணிப்பாளர், சபையினால் காலத்திற்கு காலம் அனுமதி வழங்கப்படும் உபாயமார்க்க பணிப்புரை, கொள்கை உருவாக்கல் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்றார்.

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தொழிற்பாடுகள் கொலொன்னாவை நிறுவல் தொழிற்பாடுகள், முத்துராஜவெல முனையத் தொழிற்பாடுகள், கொழும்பு துறைமுக எண்ணெய் வசதிக் காரியாலயம் மற்றும் நாடு முழுவதிலும் உள்ள லங்கா மொத்தக் கிடங்குகளின் தொழிற்பாடு என உப வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முத்துராஜவெல முனையத்தின் தொழிற்பாடுகள் முனைய முகாமையாளர் (முத்துராஜவெல), தொழிற்பாட்டு முகாமையாளர் (கரைகடந்த தொழிற்பாடுகள்) கொழும்பு துறைமுக எண்ணெய் வசதிக் காரியாலயம், நாடு முழுவதிலும் உள்ள லங்கா மொத்தக் கிடங்குகளின் தொழிற்பாடு பிரதிப் பொது முகாமையாளரின் (தொழிற்பாடுகள்) மேற்பார்வையின் கீழ் கிடங்கு அத்தியட்சர்களினால் கையாளப்படுகின்றது.

முகாமைத்துவப் பணிப்பாளர், திரு. எம்.ஆர்.எம். ஆப்டீன் அவர்கள், திரு. ஜி.எஸ். விதானகே இராஜினாமா செய்ததையடுத்து 12 செப்டெம்பர் 2019ஆம் திகதி தலைவர் பதவி வெற்றிடமாகியதில் இருந்து பிரதி ஆணையாளராக பதில் கடமையாற்றி வருகின்றார்

**● சபைக் கூட்டங்கள் மற்றும் வரவுகள்**

வழமையான அடிப்படையில் மாதாந்தக் கூட்டங்கள் நடைபெறுவதுடன், அவசியமாயின் விசேட கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. அழைப்பின் பேரில் சிரேஸ்ட முகாமையாளர்கள் கூட்டங்களில் பங்குபற்றுகின்றனர்.

சபைக் கூட்டங்களானது வழமையான நிகழ்ச்சிநிரலின் அடிப்படையில் நடாத்தப்படுவதுடன். கூட்டத்திற்கு முன்னர் பணிப்பாளர்கள் விரிவான முறையில் உரிய பின்புலத் தகவல்களை வழங்குகின்றனர். 2019ஆம் ஆண்டு 10 சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கீழ்வரும் அட்டவணையில் பணிப்பாளர்களின் கூட்டத்திற்கான வருகை காட்டப்பட்டுள்ளது.

# கூட்டிணைந்த ஆளுகை

| | பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கான வருகைகள் |
|---|---|---|
| 1 | திரு. தம்மிக்க ரணதுங்க | - |
| 2 | திரு. ஜி.எஸ். விதானகே | 09/09 |
| 3 | திரு. சஞ்சீவ விஜேரத்ன | - |
| 4 | திரு. எம்.ஆர்.எம். ஆப்டீன் | 10/10 |
| 5 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா | 09/10 |
| 6 | திரு. ஷியாம் போரா | 06/06 |
| 7 | திரு. நிமல் ஜயசுந்தர | 09/10 |
| 8 | திரு. யு.என். குணவர்தன | - |
| 9 | திரு. சுரேஸ் பட்நாக் | 08/10 |
| 10 | திரு. பிதமோத் ஜெயின் | 10/10 |
| 11 | திரு. ஷாமல் செனரத் | 10/10 |
| 12 | திரு. ஆனந்த பாலித | 05/05 |
| 13 | திரு. மனோஜ் குமார் குப்தா | 04/04 |

* திரு தம்மிக்க ரணதுங்க இராஜினாமா செய்ததுடன் 30 ஜனவரி 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் திரு. ஜி.எஸ். விதானகே தலைவராக நியமிக்கப்பட்டார்.
* திரு சஞ்சீவ விஜேரத்ன இராஜினாமா செய்ததுடன் 30 ஜனவரி 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் திரு.எம். ஆர்.எம். ஆப்டீன் முகாமைத்துவப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
* திரு.யு.என். குணவர்தன பணிப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததுடன் 30 ஜனவரி 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் திரு. ஷாமல் செனரத் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
* திரு. ஷியாம் போரா பணிப்பாளர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததுடன் 14 மே 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் திரு. ஆனந்த பாலித பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
* திரு. மனோஜ் குமார் குப்தா 20 மே 2019ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
* திரு. ஜி.எஸ். விதானகே தலைவர் பதவியில் இருந்து 12 செப்டெம்பர் 2019ஆம் திகதியில் இருந்து இராஜினாமா செய்தார்.

**● அதிகார பகிர்ந்தளிப்பு மற்றும் குழுக்கள்**

ஏனைய விடயங்களை சபை தன்னுடன் வைத்துக்கொண்டு, குழுக்களுக்கும் முகாமைத்துவத்திற்கும் சபையானது அதிகாரங்களை பகிர்ந்தளிப்பு செய்துள்ளது.

சில குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகளுடன் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட கீழ்வரும் குழுக்களினால், சபைக்கு உறுதுணை வழங்கப்படுகின்றது

**ஆ. கையிருப்பு மீளாய்வுக் குழு**

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்களினதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் பிரதிநிதிகளினதும் பங்குபற்றலுடன் வாராந்தம் கையிருப்பு மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படும். முன்திட்டமிட்டவாறு அடுத்த மூன்று மாத காலத்திற்கான தேவைப்பாடுகளுக்கு அமைவாக கையிருப்பு நிலைமை மீளாய்வு செய்யப்படும். நாட்டில் காணப்படும் தேவையையும் சுத்தப்படுத்தல் தயாரிப்பு இயலுமை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதி என்பவற்றின் எதிர்வுகூறலையும் கருத்தில் கொண்டபின்னர், இறக்குமதி செய்ய வேண்டிய அளவு அடையாளம் காணப்படும். நெருக்கமான கண்காணிப்பு, நாட்டினுள் தடையின்றிய விநியோகத்தினை சாத்தியமாக்குகின்றது..

**ஆ. கையிருப்பு மீளாய்வுக் குழு**

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்களினதும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியின் பிரதிநிதிகளினதும் பங்குபற்றலுடன் வாராந்தம் கையிருப்பு மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்படும். முன்திட்டமிட்டவாறு அடுத்த மூன்று மாத காலத்திற்கான தேவைப்பாடுகளுக்கு அமைவாக கையிருப்பு நிலைமை மீளாய்வு செய்யப்படும். நாட்டில் காணப்படும் தேவையையும் சுத்தப்படுத்தல் தயாரிப்பு இயலுமை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதி என்பவற்றின் எதிர்வுகூறலையும் கருத்தில் கொண்டபின்னர், இறக்குமதி செய்ய வேண்டிய அளவு அடையாளம் காணப்படும். நெருக்கமான கண்காணிப்பு, நாட்டினுள் தடையின்றிய விநியோகத்தினை சாத்தியமாக்குகின்றது.

**இ. திணைக்களம் சார் பெறுகைக் குழு**

பொருட்கள், பண்டங்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்வதற்காக தேசிய பெறுகை முகவராண்மை வழிகாட்டல் தொகுதியொன்றினை வெளியிட்டுள்ளது. வெளிப்படைத்தன்மை, தாமதங்களைக் குறைத்தல் மற்றும் நிதியியல் ரீதியாக மிகவும் அனுகூலமானவொன்றைக் பெற்றுக்கொள்ளுதல், தரமிக்கதான சிறந்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளுதல், கம்பனிக்கான வழங்கல்கள் போன்றவற்றினை உறுதி செய்வதற்கு தேசிய பெறுகை முகவராண்மையினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் திணைக்களம் சார் பெறுகைக் குழு என்பன தொழிற்படுகின்றன.

இக்குழுவிற்கு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் தலைவர்/முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமை வகிப்பதுடன் பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்) மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி ஆகியோரை குழு உள்ளடக்கியுள்ள

**● தகவல்கள் மற்றும் வளங்களை சபை அனுகுதல்**

பணிப்பாளர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு முகாமைத்துவ மற்றும் நிறுவனத் தகவல்களையும், அவசியமான வளங்களையும் பெற்றுக்கொள்வதற்கு வரையறையற்ற அணுகலைக் கொண்டுள்ளனர். செயற்பாட்டுத் திட்டங்களுக்கு எதிரான வியாபார செயலாற்றுகை, உபாயமார்க்கம், நிதியியல் முகாமைத்துவம், ஆகுசெலவு, சொத்து முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம், இணக்கப்பாடு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கி நிறைவேற்றுத்தர முகாமைத்துவம் காட்சிப்படுத்தல்களை மேற்கொள்ளுகின்றது. தனிப்பட்ட நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் தகவல்கள் என்பன அவசியமாயின் பணிப்பாளர்களுக்கு அவை கம்பனி செலவில் பெற்றுக்கொடுக்கப்படும்.

**● கம்பனி செயலாளர்கள்**

சபையின் கடமைகளையும் பொறுப்புகளையும் ஆற்றுவதற்கும் கூட்டிணைந்த ஆளுமையில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் சபையின் செயலாளராக எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செக்கட்டரியல் சேர்விஸ் பிரைவட் லிமிடட் நிறுவனம் செயற்படுகின்றது. அனைத்து பணிப்பாளர்களும் கம்பனி செயலாளரை அனுக முடியும். கம்பனியின்

# கூட்டிணைந்த ஆளுகை

செயலாளர் சபைக் கூட்டங்களையும் உபசபைக்கூட்டங்களையும் அட்டவணைப்படுத்துவதுடன் கூட்டக்குறிப்புகள் மற்றும் உரிய பதிவேடுகளை பேணுகின்றது

## 03. உத்தரவாதம் மற்றும் கட்டுப்பாடு

- **நிதியியல் வெளிப்படுத்தல்கள்**

நிதியியல் கூற்றுக்களை உண்மையாகவும் நியாயமாகவும் எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். நிதியியல் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இரண்டினதும் இணைந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்து வெளியிடுவதற்கு முன்னர் இலங்கை கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் முக்கிய தீர்மான கருமங்களில் பொருத்தமான தன்மை மற்றும் மாற்றங்கள் நியமங்களுடனான இணங்குவித்தல் என்ற அடிப்படையில் முகாமைத்துவத்தினதும் வெளிவாரி கணக்காளர்களுடனும் கலந்துரையாடப்பட்டது

- **வெளிப்படைத்தன்மை மற்றும் இணக்கம்**

பணிப்பாளர் சபையானது அதன் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களின் போதும் வெளிப்படைத்தன்மையை பாராமரிப்பதற்கும் மற்றும் ஒழுக்கநெறி நியமங்கள், தொழில் மற்றும் மனிதவள உரிமைகள் மற்றும் கம்பனிக் கொள்கைகள் என்பவற்றை பாதுகாக்கும் அதேவேளையில் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கடுமையாக இணங்குவதற்கு பொறுப்பாக உள்ளது.

- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1961ஆம் ஆண்டு 28ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது..
- 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் நிறுவனத்தின் வெளிவாரிக் கணக்காய்வு கணக்காய்வாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன் நிதிக்கூற்றுகள் வருடாந்தம் வெளிப்படுத்துவதுடன் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படும்.
- நிறுவனத்தின் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துவதற்காக புதிய இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஏனைய உரிய ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படுகின்றன.

- **உள்ளகக் கட்டுப்பாடுகள்**

உள்ளகக் கட்டுப்பாடுகள் தொழிற்பாடுகளின் செயற்திறன் மற்றும் வினைத்திறனை அடைந்து கொள்ளுதல் நிதியறிக்கையின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுதல் என்பன தொடர்பில் நியாயமான உத்தரவாதம் ஒன்றினை வழங்குவதற்கு கம்பனியானது ஆற்றல் மிக்கதும் செயற்திறன் மிக்கதுமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றினை உறுதி செய்கின்றது. இது தொழிற்பாட்டு மற்றும் இலாபத்தன்மை இலக்குகளை நிறைவுசெய்கின்றதுடன் நிதியியல் கணக்கீட்டுத் தகவல்களின் ஒருமைப்பாட்டினை உறுதி செய்கின்றதுடன் நிறுவனம் முழுவதிலும் முகாமைத்துவ கொள்கைகளை பரிமாற்றம் செய்கின்றது. ஏதேனும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது நியாயமான உத்தரவாதம் ஒன்றினை மாத்திரம் உறுதி செய்யக்கூடியதுடன் நியாயமான காலப்பகுதி ஒன்றினுள் தவறுகள் அல்லது ஒழுங்கீனங்கள் முன்வைக்கப்படும் என்ற மிகச் சரியாக உத்தரவாதமளிக்கின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவானது சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு முறைமைத் தொகுதியினுள் நிறுவனம் வினைத்திறன் மிக்கவாறு தொழிற்படுவதனை உறுதிசெய்கின்றது.

- **உள்ளகக் கணக்காய்வு**

சுயாதீன முகாமைத்துவத்துடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளக கணக்காய்வின் குறிக்கோளாக நிறுவனத்தின் செயற்பாடுகளின் கண்காணிப்பு கட்டுப்பாட்டினை மேற்கொள்ளல் அமைந்துள்ளது. நிறுவனத்தின் நடைமுறைகள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டதிற்கு இணங்க நிறுவனத்தினுள் கட்டுப்பாட்டு முறையொன்று பேணப்படும் பொருட்டு மதிப்பிடுதல் மற்றும் அறிக்கையிடுதல் குறிக்கோளுடன் தொழிற்படுகின்றது.

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் நோக்கெல்லை பின்வறுமாறு:

- ◇ தற்போது காணப்படுகின்ற விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் முறையாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளதென்பதை உறுதி செய்தல்.
- ◇ முறைமை பிரயோக பொதி மற்றும் முறைமை பதிவேடுகளில் உள்ள அனைத்துக் கணக்கீட்டுத் தகவல்களும் செம்மையாகப பேணப்படுகின்றது என்றும் தொடர்புடைய புள்ளி விபரங்கள் மற்றும் கட்டுப்பாட்டுத் தகவல்கள் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்கு முறையாக வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதையும் உறுதிசெய்தல்.
- ◇ நிதியியல் கணக்கீட்டுக் கூற்றுகள் வியாபார முயற்சியின் அந்தஸ்து பற்றி உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினை வெளிப்படுத்துகின்றன என்பதனை உறுதி செய்தல்.
- ◇ தொழிற்பாட்டில் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனைக் கணித்தல்.
- ◇ தொழிற்பாட்டில் உள்ள கட்டுப்பாட்டு முறைமைகளின் வினைத்திறனை அணுகுதல்.

  - கொள்கை குறிக்கோள்களை எய்துவதில் திணைக்களத் தினால் இயக்கப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய தொழிற்பாடுகள் வெற்றிகரமானவை என்ற அடிப்படையில் அளவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்படுகின்றவை உள்ளடங்கலாக திணைக் களத்தின் தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து முறைகளினையும் நடைமுறைகளினையும் (நிதியியல், முகாமைத்துவம் சார் போன்ற) வடிவமைத்து தொழிற்படுத்தல்.
  - குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கம் மற்றும் ஏனைய தேவைப்படுத்தல்கள் அத்துடன் முகாமைத்துவத்திட்டங்கள் நடைமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகின்ற அளவு.
  - மோசடி, துர்நடத்தை மற்றும் ஒழுங்கீனம் போன்றவற்றிலிருந்து தோன்றுகின்றவை உள்ளடங்கலாக இழப்புகளிலிருந்து சொத்துக்களையும் நலன்களையும் பாதுகாக்கின்ற கையகப்படுத்தல் மற்றும் சொத்துக்களை கையுதிர்த்தல்.
  - வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் பயன்படுத்தவதற்கும் வீண் விரயத்தினை தவிர்ப்பதற்குமான ஒழுங்கமைப்புகள்.
  - தீர்மானம் எடுத்தலுக்காக மற்றும் பொறுப்புக்கூறலுக்காக அத்துடன் இத்தகவல்கள் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படையில் வழங்கப்படுகின்ற தகவல்களின் போதுமை, நம்பகத்தன்மை மற்றும் ஒருமைப்பாடு.

# கூட்டிணைந்த ஆளுகை

**இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவையுடன் இணங்கல்**

| கோவை உசாவல் | தேவைப்பாடுகள் | வெளிப்படுத்தல் | இணக்கம் |
|---|---|---|---|
| **A** | **பணிப்பாளர்கள்** | | |
| A.1 | சபை | உபாயமார்க்க வழிகாட்டலை உருவாக்குவதற்கும் கம்பனியின் வெற்றிகரமான தொழிற்பாட்டுக்கு பலம் வாய்ந்த கட்டுப்பாட்டு சட்டகத்தை உருவாக்குவதற்கும் பணிப்பாளர் சபை தலைமைத்துவத்தை வழங்கும். | இணங்கியது |
| A1.1 | வழமையான பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் | ◇ பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதாந்தம் நடாத்தப்பட்டதுடன், அவசியமான வேளையில் விசேட கூட்டங்கள் நடாத்தப்பட்டது.<br>◇ பணிப்பாளர் சபைக்கான கூட்டத்திற்கு வருகை தந்தவர்களின் விபரங்கள் 37ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. | இணங்கியது |
| A1.2 | பணிப்பாளர் சபையின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் | சபை கீழ்வருவனவற்றுக்கான பொறுப்புகளை எடுத்துக்கொள்வதன் ஊடாக தொழில்முயற்சி தலைமைத்துவத்தை வழங்குகின்றது<br>◇ உபாயமார்க்க வடிவமைப்பு மற்றும் அமுல்படுத்தல்<br>◇ பிரதான முகாமைத்துவ நபர்களின் திறன்கள் மற்றும் ஆட்சேர்ப்பு<br>◇ தகவல், உள்ளக கட்டுப்பாடுகள், வியாபார தொடர்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவத்திற்கான கட்டுறுதி<br>◇ சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நெறிமுறை நியமங்களுடனான இணக்கம்.<br>◇ தீர்மானம் எடுத்தலின் போது அனைத்து பங்குதாரர்களின் நன்மைகள் தொடர்பாக கவனமெடுத்தல்.<br>◇ நிலையான வியாபார அபிவிருத்தி.<br>◇ பொருத்தமான கணக்கியல் கொள்கைகளை இணைத்துக்கொள்ளல் மற்றும் நிதியியல் ஒழுங்குவிதிகளுடன் இணங்குதல் | |
| A1.3 | நாட்டின் சட்டங்களுக்கு அமைவாக இணங்கியொழுகுதல் வேண்டும் | அனைத்து பிரயோகிக்கக்கூடிய விதிகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கம்பனி இணங்கியொழுகுபவரை பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தும். | இணங்கியது |
| A1.4 | சபை மற்றும் கம்பனி விடயங்கள் தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பணிப்பாளரும் அர்ப்பணிப்பை மேற்கொள்ள போதிய நேரத்தை ஒதுக்குதல் | ◇ ஏக்கவுண்டிங் சிஸ்டம் செக்ட்டேரியல் சேர்விஸ் (பிறைவட்) லிமிட்ட் பணிப்பாளர் சபையின் செயலாளர்களாக தொழிற்படுவதுடன், கூட்டிணைந்த ஆளுகையில் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதுடன் பணிப்பாளர் சபை அதன் கடமைகள் மற்றும் பெறுப்புகளை வெளிப்படுத்துவதற்கு வழிகாட்டும்.<br>◇ அத்துடன் செயலாளர் முன்னோக்கிச் செல்வதற்கு அவசியமான பணிப்பாளர் சபைக்கு புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றி அறிவிப்பார். | இணங்கியது |
| A1.5 | சுயாதீனமான தீர்மானம் | சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களின் கண்ணோட்டத்தை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான சமமான சந்தர்ப்பம் பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது.. | இணங்கியது |
| A1.6 | சபை மற்றும் கம்பனி விடயங்கள் தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு பணிப்பாளரும் அர்ப்பணிப்பை மேற்கொள்ள போதிய நேரத்தை ஒதுக்குதல். | அனைத்துப் பணிப்பாளர்களுக்கும், அவர்கள் அறிவித்தல், நிகழ்ச்சிநிரல் மற்றும் சபைப் பத்திரங்கள் என்பவற்றை போதியளவு நேரம் எடுத்து மீளாய்வு செய்து, மேலதிக தகவல்களை அல்லது விளக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக, அவை முன்கூட்டியே பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. | இணங்கியது |
| A1.7 | அவசியமாயின், கம்பனியின் நலனுக்காக மூன்றில் ஒரு பணிப்பாளர்கள் வாக்கெடுப்பினை கோரி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியும் | | பொருத்தமற்றது |
| A1.8 | பணிப்பாளர் சபை அறிமுகம் மற்றும் பயிற்சி | உள்ளக மற்றும் வெளிவாரி சூழல் தொடர்பாக உரிய தகவல்களை தலைவர், முகாமைத்துவப் பணிப்பாளர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவம் தொடர்ச்சியாக பணிப்பாளர்களை இற்றைப்படுத்துகின்றது. | இணங்கியது |

# கூட்டிணைந்த ஆளுகை

| கோவை உசாவல் | தேவைப்பாடுகள் | வெளிப்படுத்தல் | இணக்கம் |
|---|---|---|---|
| A.2 | தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர் இருவருக்கும் இடையிலான பொறுப்புகளின் பிரிப்பு | ◇ 01 ஜூன் 2017 இருந்து தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் இருவரினதும் வகிபாகங்கள் தெளிவாக வேறாக்கப்பட்டுள்ளன.<br>◇ தலைவரின் வகிபாகம் பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதாகும்.<br>◇ முகாமைத்துவப் பணிப்பாளர், சபையினால் காலத்திற்கு காலம் அனுமதி வழங்கப்படும் உபாயமார்க்க பணிப்புரை, கொள்கை உருவாக்கல் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்கின்றார். | இணங்கியது |
| A.2.1 | தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலர் ஒரு நபராக இருக்கும் பட்சத்தில் இணைக்கப்பட்ட வகிபாகங்களின் நியாயத்தன்மை | 12 செப்டெம்பர் 2019இற்குப் பின்னர் தலைவர் பதவி வெற்றிடமானதுடன் திரு. எம்.ஆர்.எம்.ஆப்டீன், முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதித் தலைவராக பணியாற்றுகின்றார் | இணங்கியது |
| A.3 | தலைவரின் வகிபாகம் சிறந்த கூட்டிணைந்த ஆளுகையைப் பாதுகாப்பதாகும் | தலைவர் பணிப்பாளர் சபைக்கு தலைமைத்துவத்தை வழங்குவதுடன் கீழ்வருவனவற்றை உறுதிசெய்தல்,<br>◇ பணிப்பாளர்களின் வினைத்திறனான பங்களிப்பு மற்றும் பங்குபற்றல்<br>◇ நிறைவேற்றுத்தர மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்களுக்கு இடையிலான சமநிலை<br>◇ பரிசீலனையில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக பணிப்பாளர்களின் கருத்துகள் அறுதியிட்டப்பட்டவை<br>◇ கம்பனி விவகாரங்கள் தொடர்பாக கம்பனி பூரணக் கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதுடன் அனைத்து பங்காளர்களுக்கும் அதன் கடமைகள் தொடர்பாக எச்சரிக்கை செய்கின்றது. வேண்டுகோள்கள் தொடர்பாக விழிப்புடன் இருத்தல். | இணங்கியது |
| A.4 | நிதிசார் புத்திஜீவிகளின் கிடைப்பனவு | பணிப்பாளர் சபையில் கம்பனியின் நிதியியல் விவகாரங்களைக் கையாளுவதற்கும் அவசியமான நிதியியல் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் மூன்று நிதிசார் தொழிற்சார் நிபுணர்கள் உள்ளனர்<br>◇ திரு.நிமல் ஜயசுந்தர பணிப்பாளர் சபையின் ஒரு நிறைவேற்றுத்தரமுள்ள பணிப்பாளராவார். இவருக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முழுமையான நிதியியல் செயற்பாடுகள் தொடர்பாக 38 வருடகால அனுபவம் உள்ளது.<br>◇ திரு.பிரமோத் ஜெயின் இந்தியாவின் பட்டயக் கணக்காளர் நிறுவனம், இந்தியாவின் ஆகுசெலவு மற்றும் முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் என்பவற்றின் ஒரு அங்கத்தவராக இருப்பதுடன் டெல்லி பல்கலைக்கழகத்தில் வணிகம் தொடர்பாக கௌரவ இளநிலைப் பட்டத்தைக் கொண்டுள்ளார்.<br>◇ திருமதி. கே.ஆர்.டி.ஒல்கா அரச நிதித் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரியின் பணிப்பாளர் நாயகமாவார். இவருக்கு அரச நிதி முகாமைத்துவம் தொடர்பாக பரந்த அறிவு உள்ளது. | |
| A.6 | உரிய நேரத்தில் சரியான தகவல்களை முகாமைத்துவம் சபைக்கு வழங்குதல் வேண்டும். | சபைப் பத்திரங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல் என்பன பணிப்பாளர்கள் போதியளவு வாசிப்பதற்கும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வசதியாக அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்திற்கு முன்னர் வழங்கப்படும். | இணங்கியது |
| A.7 | பணிப்பாளர் சபைக்கான நியமனங்கள் | அமைப்பு அக விதிகளுக்கு அமைவாக பணிப்பாளர்கள் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் ஊடாக நியமிக்கப்படுதல் வேண்டும்.<br>2019ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையின் மாற்றங்கள் 35ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது | இணங்கியது |

# கூட்டிணைந்த ஆளுகை

| கோவை உசாவல் | தேவைப்பாடுகள் | வெளிப்படுத்தல் | இணக்கம் |
|---|---|---|---|
| **B** | **பணிப்பாளர்களின் ஊதியம்** | | |
| B.1 | நிறைவேற்றுத் தரத்தினருக்கும் பணிப்பாளர்களுக்குமான ஊதியம் மீது அபிவிருத்திக்கான கொள்கையொன்றுக்கான செயன்முறையொன்றை நிறுவல். | | இணங்கியது |
| B.2 | ஊதிய மட்டம் மற்றும் எல்லை | | இணங்கியது |
| B.3 | கொடுப்பனவு செய்யப்பட்ட சபைக்கான ஊதியத்தின் வெளிப்படுத்தல் | நிதியியல் தகவல் - விரிவான வருமானக்கூற்று | இணங்கியது |
| **C** | **பங்குதாரர்களுடனான உறவுமுறை** | | |
| C.1 | வருடாந்த பொதுக் கூட்டத்தின் ஆக்கபூர்வமான பயன்பாடு மற்றும் பொதுக்கூட்டங்களை நடாத்துதல் | | இணங்கியது |
| C.2 | பங்குதாரர்களுடனான தொடர்பு | உரிய தகவல்களை வழங்குவதற்கு எங்கள் இரு பங்குதாரர்களுக்கும் உரிய ஊடகத்தை கம்பனி கொண்டுள்ளது. | இணங்கியது |
| C.3 | தொடர்புடைய நபர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடங்கலாக அனைத்து முக்கியமான கொடுக்கல் வாங்கல்களையும் பணிப்பாளர்கள் வெளிப்படுத்தல் வேண்டும். | | இணங்கியது |
| **D** | **பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வு** | | |
| D.1 | நிதியியல் அறிக்கையிடல் | ◇ வருடாந்த அறிக்கையில் நிதியியல் நிலமை, செயலாற்றுகை, வியாபார மாதிரி, ஆளுகைக் கட்டமைப்பு, இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள், சவால்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பான நடுநிலையான மீளாய்வினை வெளிப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>◇ வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி தயாரிக்கும் போது கம்பனிக்கு பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியுள்ளது.<br>◇ கோவையில் குறிப்பிட்டவாறு வருடாந்த அறிக்கையில் கீழ்வருவன வெளிப்படுத்தப்பட்டுள்ளது.<br>i. 19இல் இருந்து 32ஆம் பக்கம் வரை முகாமைத்துவ கலந்துரையாடல்கள் மற்றும் பகுப்பாய்வுகள்<br>ii. 50இல் இருந்து 51ஆம் பக்கம் வரை பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை.<br>iii. 61ஆம் பக்கத்தில் கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று<br>iv. 50ஆம் பக்கத்தில் தொடர்ந்து செல்லல் தொடர்பான கூற்று<br>v. 28ஆம் பக்கத்தில் உள்ளக கட்டுப்பாடுகள் தொடர்பான பணிப்பாளரின் கூற்று.<br>vi. 55இல் இருந்து 60ஆம் பக்கம் வரை சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை.<br>vii. 08இல் இருந்து 09ஆம் பக்கம் வரை தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர்களின் பொறுப்புகளின் கூற்று<br>viii. நிதியியல் சுற்றுகளின் குறிப்பு 19இல் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன<br>ix. வரவழைக்கத்தக்க மூலதனத்தில் கடுமையான இழப்பு இல்லை<br>◇ அரச சுற்றுநிருபங்களுக்கு அமைவாக அமைச்சினால் கோரப்படும் ஏனைய இடைக்கால அறிக்கைகளை கம்பனி சமர்ப்பித்துள்ளது | |

# கூட்டிணைந்த ஆளுகை

| கோவை உசாவல் | தேவைப்பாடுகள் | வெளிப்படுத்தல் | இணக்கம் |
|---|---|---|---|
| D.2 | இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு | கம்பனிக் கொள்கைகளுக்கு அமைவாக பலமான இடர் முகாமைத்துவ சட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் வழிகாட்டலுடனும் உதவியுடனும் உள்ளக கட்டுப்பாடுகள் பருவ கால கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான விபரங்கள் வருடாந்த அறிக்கையில் இடர் முகாமைத்துவப் பிரிவு தொடர்பான 42ஆம் பக்கத்திலும். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கையின் 52ஆம் பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது | இணங்கியது |
| D.3 | கணக்காய்வுக் குழு | கணக்காய்வுக் குழு மூன்று பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட சுயாதீன நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. இதற்கு உள்ளக கணக்காய்வுப் பிரிவு துணைபுரிகின்றது. கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த அறிக்கையின் 52ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கியது |
| **E** | **நிறுவன முதலீட்டாளர்கள்** | | |
| | பங்குதாரர் வாக்கெடுப்பு | அனைத்து நிறுவனத்தின் பங்குதாரர்களும் பங்குதாரர் கூட்டத்தில் பங்கெடுப்பதற்கும் அனைத்து விடயங்கள் தொடர்பாக அவர்களுடைய கருத்தினை வழங்குவதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். | இணங்கியது |
| | ஆளுகை வெளிப்படுத்துகை தொடர்பான மதிப்பீடு | வருடாந்த அறிக்கை கூட்டிணைந்த ஆளுகை செயன்முறையை வெளிப்படுத்துகின்றது. | இணங்கியது |
| **G** | **இணையதளம் மற்றும் சைபர் பாதுகாப்பு** | | |
| | சைபர் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் நிறுவன வலையமைப்புக்கு கம்பனியின் உள்ளேயும் வெளியேயும் தகவல் தொழில்நுட்ப கருவிகள் இணைக்கப்படுவதற்குரிய செயன்முறையையும் பணிப்பாளர் சபை கொண்டிருத்தல் வேண்டும் | ◇ முழுமையான தொழிற்படுத்தப்பட்ட இடர் மீட்பு முகாமைத்துவ நிலையம்<br>◇ வலையமைப்புப் பாதுகாப்பு, தரவு இழப்பு, சைபர் ஸ்புவிங், விநியோகிக்கப்பட்ட சேவை தாக்குதல், மொபைல் டிவைஸ் மற்றும் கண்காணிப்பு சந்தேகத்திற்கிடமான சைபர் நடவடிக்கைகள் என்பவற்றுடன் கூடிய வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்ப அமுல்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அன்றாட பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தல்<br>◇ காப்பு சேவையகம் மற்றும் மீட்பு சேவையகம்<br>மேலதிக விபரங்கள் 47ஆம் பக்கத்தில் உள்ள இடர் முகாமைத்துவ அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது | இணங்கியது |
| **H** | **சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகைகளை அறிக்கையிடல்** | | |
| H.1 | சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகை அறிக்கையிடல் செயலாற்றுகை தொடர்பாக போதிய வெளிப்படுத்துகைகளை வழங்குதல் | வருடாந்த அறிக்கை முழுமையான மீளாய்வினை வழங்குகின்றது. அறிக்கையின் வேறுபட்ட பகுதிகளில் குழுக்களினால் பயன்படுத்தப்பட்ட பல்வேறுபட்ட மூலதனங்களின் செயலாற்றுகை வழங்கப்பட்டுள்ளது.. | இணங்கியது |
| H.2 | சூழல் மற்றும் சமூகக் காரணி ஆளுகை | இயற்கை மூலதனப் பிரிவைப் 31 ஆம் பக்கத்தில் பார்வையிடவும் | இணங்கியது |

# இடர் முகாமைத்துவம்

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் நீண்டகால வளர்ச்சிக்கு உரிய முறையிலான இடர் முகாமைத்துவ நடைமுறைகள் அவசியம் என உறுதியாக நம்புகின்றது. நிறுவனத்தின் நோக்கம் என்னவென்றால், நிறுவனத்தின் நடைமுறைத் தொழிற்பாடுகளையும் மறைமுகமாகப் பாதிக்கும் அனைத்து பக்கங்களிலுமுள்ள அனைத்து உத்தேசக் காரணிகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதன் ஊடாக அதிகபட்ச நிலையான மதிப்பைச் சேர்ப்பதாகும். இடர் முகாமைத்துவம் என்பது தொடர்ச்சியான மற்றும் வளரும் ஓர் செயன்முறையாவதுடன், இது கூட்டிணைந்த உபாயமார்க்கம் மற்றும் அதன் அமுல்படுத்தலில் முக்கிய பங்கு வகிக்கின்றது.



நிறுவனத்தில் நிர்வாக முகாமைத்துவம், முகாமைத்துவ முடிவுகள் மற்றும் வியாபார செயன்முறைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக இடர் முகாமைத்துவம் உள்ளது. மேலிருந்து கீழாக செயற்பாடுகள் திறம்பட செயற்பட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவம் அவசியமாகும். இடர் முகாமைத்துவ முன் முயற்சிகளை, வியாபார திட்டமிடல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறை ஆகியவற்றில் ஈடுபடுத்துவது திட்டமிடல் அறிக்கையிடல், கணக்காய்வு மற்றும் தகவல்களை முகாமைத்துவம் செய்தல் இடையே ஒரு பயனுள்ள ஒருங்கிணைப்பை வழங்கும்.

கம்பனியின் வியாபார இடர்கள், கம்பனியின் கட்டுப்பாட்டிற்குள் அமையாத பல்வேறு காரணிகளினால் தாக்கத்திற்குள்ளாகின்றன. கம்பனியின் இடர் முகாமைத்துவ செயன்முறையின் ஒரு பகுதியாக கூட்டிணைந்த மதிப்பு, பாதுகாப்பு, சூழல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள், பண்டத்தின் தரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பொதுவான வியாபார இடர் வெளிப்படுத்தல்களுடன் வெளிவாரி சவால்கள் இணைந்துள்ளன.

இடர் முகாமைத்துவம் என்பது கம்பனியினுள் முக்கியமான உபாயமார்க்கமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், வியாபாரத்திற்கு பெறுமதிகளை வழங்குவதற்கு முக்கியமானது எனக் கருதப்படுகின்றது. சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனம் இடர் முகாமைத்துவ இயலுமையையும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வளர்ச்சித்திட்டங்களை கம்பனி வழங்குவதற்கு உதவும் வகையில் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையையும் கட்டியெழுப்புவதைத் தொடர்கின்றது.

### இடர் ஆளுகை

உபாயமார்க்க வழிகாட்டல்கள் மற்றும் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான முழுப் பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். அவர்கள் இடர்களின் தெளிவான பொறுப்புக்கூறலுடன் இடர்களை உரிய நேரத்தில் அடையாளம் காண்பதற்கு இடர் ஆளுகை சட்டகத்தை ஒரு இடத்துக்கு கொண்டு வருகின்றார்கள். பணிப்பாளர் சபை, கணக்காய்வுக் குழு மற்றும் உள்ளக கணக்காய்வுத் திணைக்களம் என்பன கம்பனியின் முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வழிகாட்டி உதவுதன் ஊடாக இடர் முகாமைத்துவ செயன்முறைக்கு வழிகாட்டுகின்றன.

**பணிப்பாளர் சபை**

வினைத்திறனான இடர்களின் முகாமைத்துவத்திற்கு இடர் சகிப்பளவைத் தீர்மானித்தல், இடர் உபாயமார்க்கத்தை தெரிவித்தல் மற்றும் கொள்கைகளை அங்கீகரித்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்..

**கணக்காய்வுக் குழு**

உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்வதன் ஊடாகவும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் செயலாற்றுகை மற்றும் சுயாதீனத்தை மதிப்பீடு செய்வதன் ஊடாகவும் உள்ளக கட்டுப்பாடுகளின் போதுமை குறித்து குழு மீளாய்வு செய்கின்றது. அத்துடன் குழு ஒவ்வொரு திணைக்களத்தினாலும் அறிக்கையிடப்பட்ட இடர்களை மீளாய்வு செய்கின்றதுடன் அவ்வாறான இடர்களினால் எழும் தாக்கங்களை முகாமைத்துவம் செய்வதற்கும் இல்லாதொழிப்பதற்கும் கம்பனி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குகின்றது..

**தொழிற்பாட்டுத் தலைவர்கள்**

ஒவ்வொரு திணைக்களத்தினுள் எழும் இடர்களை முகாமைத்துவம் செய்வதும் கம்பனியின் இடர் முகாமைத்துவ நியமங்கள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் என்பவற்றுடன் இணங்குவதற்கு பொருத்தமான இடர் அகற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தல் என்பவற்றுக்கான ஆரம்ப பொறுப்பு தொழிற்பாட்டுத் தலைவர்களுடையதாகும்.

**உள்ளக மற்றும் வெளியக கணக்காய்வுகள்**

உள்ளக கணக்காய்வின் வகிபாகமாக, நிறுவனத்தின் இடர் முகாமைத்துவம், ஆளுகை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை என்பன வினைத்திறனுடன் செயற்படுகின்றன எனும் சுயாதீன உத்தரவாதத்தை வழங்குகின்றது. வெளியக கணக்காய்வாளர்கள் கம்பனியின் நிதியியல் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதுடன் கம்பனியின் நிதியியல் நிலைமை மற்றும் செயலாற்றுகையின் வெளிப்படுத்துகை நியாயமானதாகவும் உண்மையானதாகவும் அமைந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை வகிக்கின்றனர்.

# இடர் முகாமைத்துவம்

### இடர் முகாமைத்துவ செயன்முறை

இடர் முகாமைத்துவம் என்பது தொடர்ச்சியான ஓர் செயன்முறையாவதுடன், கம்பனியின் செயலாற்றுகை மீளாய்வு மற்றும் தீர்மானம் எடுத்தலுடன் ஒருங்கிணைந்துள்ளது. இடர் முகாமைத்துவத்தின் நோக்கம், இடர்கள் நிகழ்வதற்கு முன்னர் உத்தேச பிரச்சினைகளை அடையாளம் காணுதல் வேண்டும் என்பதாகும், அதற்கு அந்த இடர் கையாளல் நடவடிக்கைகளானது திட்டமிட்டவையாகவும் குறிக்கோளை அடைவதன் மீது மறுதலையான தாக்கங்களை இல்லாதொழிப்பதற்கு அவற்றை உய்த்தறிதல் வேண்டும்.

இடர் முகாமைத்துவ செயன்முறை கீழ்வரும் நான்கு படிகளைக் கொண்டுள்ளது.

**01. இடர் முகாமைத்துவம்**

வியாபாரத்திற்கு உள்ளக மற்றும் வெளியக சூழலில் இருந்து வரும் தற்போதைய, எதிர்கால மற்றும் உத்தேச இடர்களை அடையாளம் காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தலாகும்.

**02. இடர் நிவாரணம்/ இடர் இல்லாதொழித்தல்**

இடர் நிவாரணம் என்பது இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகும். அதாவது கம்பனி இடர்களை தவிர்த்தல், இடம்மாற்றுதல், குறைத்தல் அல்லது ஏற்றுக்கொள்ளல். இது இடரை மதிப்பிடுதல் மற்றும் அதன் தன்மையில் தங்கியுள்ளது.

**03. கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்**

இடர் கண்காணிப்பு என்பது, தற்போதுள்ள முகாமைத்துவ உபாயமார்கங்களில் அவசியமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான அவசியத்தை அடையாளம் காணும் நடைமுறையிலுள்ள அல்லது தொடர்ச்சியான செயன்முறையாகும்.

**04. தொடர்பாடல் மற்றும் ஆலோசனை**

தொடர்பாடல் மற்றும் ஆலோசனை என்பது இடர் முகாமைத்துவத்தில் ஓர் கட்டமல்ல, அது முழுச் செயன்முறையிலும் இயங்குகின்றது. நிறுவன ஒழுங்கமைப்பு, அதன் ஊழியர்கள், அவர்களுடைய வகிபாகத்திற்கு அமைவாக, நிறுவனத்தின் இடர் உபாயமார்க்கத்தை, இடர் முக்கியத்துவத்தை மற்றும் பொறுப்புக்கூறலை அறிந்துள்ளனர் என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். ஏனையவற்றுடன் பலமான உள்ளக தகவல் மற்றும் தொடர்பாடல் செயன்முறை உள்ளதென்பதை உறுதிப்படுத்தல் மற்றும் இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளக கட்டுப்பாடு மீது வெளிவாரி பரப்பல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளல் சபையின் பொறுப்புகளாகும். இடரை அடையாளம் காணுதல் இடர் பகுப்பாய்வு இடர் மதிப்பீடு உள்ளடக்கத்தை நிறுவுதல் தொடர்பாடல் மற்றும் ஆலோசனைகள் கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் இடர் நிவாரணமளித்தல்



# இடர் முகாமைத்துவம்

### இடர் முகாமைத்துவம் தொடர்பான கம்பனியின் அனுகுமுறை

கம்பனி இடர்களை அடையாளம் காண்பதற்கு, முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் இடர்களை இல்லாது செய்வதற்கு கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்ட இரு வரி தற்காப்பு மாதிரியை இணைத்துக் கொண்டுள்ளது.

| முதலாவது வரி பாதுகாப்பு |
|---|
| **தொழிற்பாட்டு தலைவர்கள்** |
| தொழிற்பாட்டுத் தலைவர்கள் அவர்களுடைய தொழிற்பாடுகளுக்கு உரிய இடர்களை அடையாளம் காணுதல், அளவிடுதல், கண்காணித்தல், அறிக்கையிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு பொறுப்பாக உள்ளனர்.<br>கம்பனி உள்ளக கட்டுப்பாடுகளுக்கான விரிவான முறைமையை வடிவமைத்துள்ளது. இது பிரிவுத் தலைவர்கள் இடர்களுடன் தொடர்புடையவற்றை அடையாளம் காண்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்கும் தடுப்பதற்குமான அனைத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கியுள்ளது. |
| **இரண்டாம் வரிப் பாதுகாப்பு** |
| **உள்ளக கட்டுப்பாடு மற்றும் வெளிவாரி கணக்காய்வு** |
| உள்ளக கணக்காய்வுகள் முழுமையான இடர் முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு சட்டகம் மற்றும் கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடல் சுயாதீனத்தின் வினைத்திறன் மற்றும் போதுமை பற்றிய சுயாதீன மதிப்பீட்டை வழங்குகின்றது.<br>வெளிவாரி கணக்காய்வாளர்கள் சுயாதீன தரப்பினராவர் மற்றும் அவர்கள் கம்பனியின் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதுடன், நியாயமான உத்தரவாதத்தை வழங்குதல் அவர்களுடைய பொறுப்பாகும். |

### கம்பனியைப் பாதிக்கும் பிரதான இடர்களின் கண்ணோட்டம்

| இடர் | பிரதான ஓட்டிகள் | அகற்றல் உபாயமார்க்கம் |
|---|---|---|
| **இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எதிர்பாராதவை** | | |
| எங்கள் தொழிற்பாடுகள் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் எங்களின் கட்டுப்பாட்டுக்குள் அமையாத நிகழ்வுகளினால் தாக்கமடையக்கூடும்  | ◊ வெள்ளங்கள், நிலச்சரிவுகள், கடுமையான புயல் போன்றவற்றினால் தடைப்படக்கூடும். | ◊ அடையாளம் காணப்பட்ட சில இடர்களுக்கு எதிராக காப்புறுதிக் காப்பீடு பெறப்பட்டுள்ளது. |
| **பயங்கரவாதத் தாக்குதல்கள்** | | |
| 2009 ஆண்டு சிவில் யுத்தம் முடிவடைந்தும் உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு வெடிப்பின் அதிர்ச்சியினால் மோசமான பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் இலங்கை உள்ளது  | | ◊ இலங்கைப் பொருளாதாரத்தின் பிரதான நாடியாக கம்பனி இருப்பதனால், உயர் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. |

# இடர் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| **தொழிற்பாட்டு இடர்கள்** | | |
| தொழிற்பாட்டுடன் தொடர்புடைய ஆபத்துகள் கம்பனியைப் பாதிக்கும்  | ◊ தேவையில்லாத தடங்கல்களை ஏற்படுத்தும்.<br>◊ விநியோக உட்கட்டமைப்பு அல்லது போக்குவரத்தில் ஏற்படும் தடங்கல்கள்<br>◊ விபத்துகள்<br>◊ பாரியளவிலான தீ | ◊ தொடர்ச்சியான சேவையளிப்பு மற்றும் பராமரிப்பு மூலம் பைப் லைன்களில் ஏற்படும் ஒழுக்குகளையும் சேதங்களையும் குறைத்தல்.<br>◊ எந்தவொரு ஆபத்தான தாக்கத்தையும் குறைத்துக் கொள்வதற்கு ஊழியர்களை போதியளவில் பயிற்றுதல்.<br>◊ CPSTL அர்ப்பணிப்புள்ள தீ அணைப்பு அலகைக் கொண்டுள்ளது |
| **போட்டியாளர் இடர்** | | |
| ஏனைய முனையத் தொழில் கம்பனிகளில் இருந்து வரும் போட்டி. இவை வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் சௌகரியமான களஞ்சிய வசதிகளை வழங்குவதனால் இது எங்கள் நிதி நிலைமையையும் தொழிற்பாடுகளின் பெறுபேறுகளையும் எதிர்மறையாக தாக்குகின்றது. | ◊ நாங்கள் CPSTL இன் இரு பங்குதாரர்களான (CPC & LIOC ஏனைய முனையக் கம்பனிகளிடமிருந்து போட்டியைச் சந்திக்கின்றோம். | ◊ பவுசர் கப்பற்தொகுதிகளினை அதிகரித்தல்.<br>◊ களஞ்சிய இயலளவை அதிகரித்தல் அல்லது வேறுவகையில் தற்போதுள்ள முனையங்களை விரிவுபடுத்தல்.<br>◊ சரியான முறையில் ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் பயிற்றுவித்தல் என்பவற்றில் உயர் சேவை நியமங்களை பராமரித்தல்.<br>◊ எங்கள் போட்டியாளர்களுடன் முன்னேறுவதற்கு புதிய தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதன் ஊடாக மாறும் வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் ஊடாகப் புத்தாக்கம் |
| **சட்ட இடர்** | | |
| எங்கள் தொழிற்பாடுகள் பண்ட தர விபரக்குறிப்புகள் தொடர்பான சட்டம் மற்றும் இலங்கை சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டவை. அத்துடன் நாங்கள் விநியோகிக்கும் பண்டங்கள் சில குறித்துரைக்கப்பட்ட தரத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது எங்கள் விநியோகத்தர்களினால் வழங்கப்படும் பண்டங்களின் தோல்வியின் பெறுபேறாக சேதங்களுக்கு கோரிக்கைகள் விடுக்கப்பட முடியும். | ◊ ஆவியாதல் அழுத்தம், சல்பூரிக் அளவு, எதனோல் அளவு மற்றும் டீசல் அளவு உள்ளடங்கலாக பண்ட தர அமைப்புக் குறியீடுகள் அல்லது கலவை தேவைப்பாடுகள் மீது சட்டத் தேவை.<br>◊ எங்கள் தொழிற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யும் பண்டத்தரச் சட்டத்தை மீறுதல் குறிப்பிட்ட தண்டங்கள் மற்றும் அபராதங்களுக்கு உட்படுவதுடன் எதிர்மறை பிரச்சாரத்தையும் ஏற்படுத்தும்<br>◊ உப நியமங்கள் பொது மக்களின் பயன்பாட்டுக்கு விநியோகிகப்படும் பண்டங்களின் விளைவாக ஏற்படும் எஞ்சினின் மோசமாக செயலாற்றுகை அல்லது எஞ்சினின் சேதம் போன்றன இழப்புகளுக்கான கோரிக்கைகளை வழங்குவதுடன் எதிர்மறையான பிரச்சாரத்தையும் ஏற்படுத்தும். | ◊ CPSTL எந்தவொரு பெற்றோலிய எரிபொருளையும் பரிசோதனை செய்வதற்கான நவீன பரிசோதனைக்கூடத்தைக் கொண்டுள்ளது. அத்துடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சான்றுபடுத்தலுடன் இணங்கும் வகையில் தரக் கட்டுப்பாட்டு முறைமை பின்பற்றப்படுகின்றது.  |

# இடர் முகாமைத்துவம்

| சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் இடர் | | |
|---|---|---|
| சிக்கலானதும் அடிக்கடி மாறும் சுற்றாடல், சுகாதாரம், பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு கம்பனி குறிப்பிடத்தக்களவு ஆகுசெலவுகளையும் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்கின்றது. | ◇ கம்பனியினால் உயர் தீப் பற்றக்கூடிய பிரதான பண்டங்கள் கையாளப்படுவதனால் தொழிற்பாட்டு செயற்பாடுகள் உயர் இடர் வகையீட்டினுள் வருகின்றன. சிறிய தவறு பாரிய தீயினை ஏற்படுத்தக்கூடும். இது கம்பனியினதும் நாட்டின் பொருளாதாரத்தினதும் தொழிற்பாடுகளில் பாரிய தாக்கத்தை உருவாக்கும்.<br><br>◇ பெற்றோலியப் பண்டங்களின் களஞ்சியப்படுத்தல், கையாளுகை மற்றும் போக்குவரத்து என்பன சுற்றாடலுக்கு அபாயமான பதார்த்தங்கள் மற்றும் வாயுக்களையும் புகையையும் வெளியிடக்கூடும்.<br><br>◇ எங்கள் வியாபாரம் இயல்பாகவே பொருள் தற்செயலான கசிவுகள், கசிவுகள், வெளியேற்றங்கள், பெற்றோலிய அல்லது அபாயகரமான சம்பவங்கள் சூழலுக்குள் மற்றும் அண்டைய பிரதேசங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும், இவை கணிசமான பொறுப்பினை உருவாக்குவதனால் அதனை விசாரித்து தீர்வினைக் காணுதல் வேண்டும். .<br><br>◇ சுற்றாடல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை காரணமாக நிர்வாக, சிவில் அல்லது குற்றவியல் தண்டங்கள், அனுமதி இரத்துச் செய்தல் மற்றும் அனைத்து அல்லது சில தொழிற்பாடுகளை வரையறுத்தல் அல்லது தடைசெய்தல் உள்ளடங்கலாக பொருளாதார தடை மதிப்பீடுகளை பெறுதல் | ◇ CPSTL அர்ப்பணிப்புள்ள உள்ளக தீ அணைப்பு அலகு, முதலுதவி பயிற்சி, தீயணைப்பு படை, பாதுகாப்புப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. தீயணைப்பு உபகரணங்கள் தொடர்ச்சியாக பரிசோதனை செய்யப்பட்டு அவை நல்ல நிலைமையில் உள்ளன என உறுதிப்படுத்தப்படுகின்றன. அதாவது தீயணைப்பு அலாரம் நாள்தோறும் பரிசீலிக்கப்படுகின்றது. அலுவலக உபரகணங்கள், ஹோர்ஸ் பைப்புகள் நாள்தோறும் பரிசோதிக்கப்படுகின்றது<br><br>◇ எண்ணெய்ப் படிவுகளை உரிய கேள்விப்பத்திர முறை ஊடாக காலத்திற்கு காலம் அகற்றப்படுகின்றதுடன், அது சுற்றாடலில் எவ்வித சேதத்தையும் உருவாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.<br><br>◇ தேவைப்படுத்தப்பட்ட நியமத்தில் கழிவுநீரை வைத்திருப்பதற்கான கழிவுநீர் அகற்றல் முறைமையை ஒழுங்குமுறைப்படுத்தல்.<br><br>◇ உரிய முறையிலான கழிவு வேறாக்கல் மற்றும் அகற்றல் முறைமை அமுல்படுத்தப்பட்டது.<br><br>◇ பைப் லைன் மற்றும் கரைகடந்த ஒழுக்குகளை கையாளுவதற்கு ஊழியர்கள் உரிய முறையில் பயிற்றப்பட்டுள்ளனர் |

| சைபர் இடர் | | |
|---|---|---|
| நாங்கள் எங்கள் சொத்துக்களை தொழிற்படுத்துவதற்கும் எங்கள் வியாபாரத்தை முகாமைத்துவம் செய்வதற்கும் தொழில்நுட்பவியல் முறையைப் பயன்படுத்துகின்றோம். எங்கள் தகவல் தொழில்நுட்ப முறைமை மீதான சைபர் தாக்குதல்கள் அல்லது ஏனைய பாதுகாப்பு மீறல்கள் பாரிய தொழிற்பாட்டு அல்லது நிதியியல் கட்டுப்பாடு என்பவற்றை மீறி எங்கள் தொழிற்பாடுகள், வர்த்தக நடவடிக்கைகள் அல்லது நிதியில் செயன்முறையில் தடையினை ஏற்படுத்தக்கூடும்.<br><br> | ◇ இலக்கு வைக்கப்பட்ட ஹக்கர்களின் தாக்குதல்கள், இலக்கு வைக்கப்படாத ஒருங்கிணைக்கப்பட்ட சேதங்கள், உள்ளக தாக்குதல்கள், விபத்தான சைபர் நிகழ்வுகள் அல்லது ஏதேனும் இணைந்த நிகழ்வுகள் என்பன தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். | ◇ முழுமையான தொழிற்படுத்தப்பட்ட இடர் மீட்பு முகாமைத்துவ நிலையம்<br><br>◇ வலையமைப்பு பாதுகாப்பு, தரவு இழப்பு, சைபர் ஸ்புவிங், விநியோகிக்கப்பட்ட சேவை தாக்குதல், மொபைல் டிவைஸ் மற்றும் கண்காணிப்பு சந்தேகத்திற்கிடமான சைபர் நடவடிக்கைகள் என்பவற்றுடன் கூடிய வலையமைப்பு பாதுகாப்பு தொழில்நுட்ப அமுல்படுத்தல் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அன்றாட பரிசோதனை மற்றும் உறுதிப்படுத்தல்.<br><br>◇ காப்பு சேவையகம் மற்றும் மீட்பு சேவையகம் |

# இடர் முகாமைத்துவம்

| ஊழியர்களை தக்கவைத்தல் | | |
|---|---|---|
| எங்களின் எதிர்கால வெற்றி எங்கள் நிறைவேற்றத்தர அலுவலர்களினதும் ஏனைய பிரதான நபர்களினதும் தொடர்ச்சியான சேவையில் தங்கியுள்ளது. நாங்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிறைவேற்றத்தர அலுவலர்களினதும் ஏனைய பிரதான நபர்களினதும் சேவையை நாங்கள் இழந்தோம் எனில் அதன் விளைவாக எங்கள் வியாபரத்தின் தொழிற்பாட்டு பெறுபேறுகள் மற்றும் நிதியியல் நிலமைகள் தாக்கமடையக்கூடும் | ◇ தற்போதைய பதவியுயர்வு மற்றும் நடைமுறைகள் தொடர்பாக ஊழியர்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.<br>◇ தொழில் அபிவிருத்திக்கு போதிய சந்தர்ப்பமின்மை<br>◇ உணர்ச்சிகள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது.<br>◇ வலுவற்ற தலைமைத்துவம் நெகிழ்வற்ற தன்மை<br>◇ நெகிழ்வற்ற தன்மை | ◇ ஊழியர்களை அங்கீகரித்தல், பாராட்டுதல்கள் மற்றும் பதவியுயர்வுகள் போன்ற பலமான பெறுமதி ஊக்குவிப்பின் ஊடாக ஊழியர்களை பராமரித்தல்.<br>◇ பதவியை மேம்படுத்தவதற்கான சந்தர்ப்பங்கள்<br>◇ தொடர்ச்சியாக ஈடுபடுதல் மற்றும் சமூக மற்றும் நலன்புரி நிகழ்வுகளை நடாத்துதல்<br>◇ பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் தொடர்ச்சியான முதலீடு மற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்.<br> |

| பொருளாதார இடர் | | |
|---|---|---|
| எங்கள் நிதியில் பெறுபேறுகள் எங்கள் முனையங்களில் நாங்கள் தொழிற்படுத்தும் இலகு சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள், கனரக சுத்திகரிக்கப்பட்ட பண்டங்கள், மசகு எண்ணெய் மற்றும் ஏனைய சேவைகளுக்கான கேள்வியில் தங்கியுள்ளது. நிலையான காலத்திற்கு அந்த பண்டங்களுக்கு காணப்படும் குறைந்த கேள்வியின் பெறுபேறாக பொதுவான பொருளாதார வீழ்ச்சி ஏற்படலாம். இது எங்கள் முனையங்களில் களஞ்சியப்படுத்தலில் குறிப்பிட்டளவு வீழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். இது எங்கள் காசுப் பாய்ச்சலினையும் எங்கள் பங்குதார நிறுவனங்களுக்கான விநியோக இயலுமையையும் குறைக்கும். | ◇ விலையிடல் சூத்திரத்தின் அமுல்படுத்தல். உலகச் சந்தையில் ஒரு பரலுக்கான மசகு எண்ணெயின் விலைக்கு ஏற்ப எரிபொருள் விலை மாற்றமடையும்.<br>◇ எரிபொருள் மீதான கேள்வி மீது அரசாங்க கொள்கைகள் மீதான தீர்வைகள்/ வரிகள், வட்டி வீதங்கள், பண வீக்கம், வலுச்சக்தி விலை என்பன நேரடித் தாக்கத்தை உருவாக்குகின்றன. | ◇ எதிர்மறையான பொருளாதார காரணிகள் காரணமான நியியல் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு குறுங்கால மற்றும் நீண்ட கால நிதியியல் கருவிகளில் முதலீடுகள்.<br>◇ 1 ஆய்வுகூட பரிசோதனைக் கட்டணங்கள், தனியார் பவுசர்/ போர்டர் கட்டணங்கள், தீ அணைப்பு சேவைகள், ஒப்பரவுக் கட்டணங்கள், வாடகை வருமானம் போன்ற ஏனைய வருமானங்களை மேம்படுத்தல். |

| கையிருப்பு, ஆதனம் மற்றும் உபகரணங்களின் இடர்கள் | | |
|---|---|---|
| களஞ்சியப்படுத்தல் பண்டங்களின் தீப்பற்றும் நிலை காரணமாக போதியளவு கையிருப்பில்லை மற்றும் காப்புறுதியில் காணப்படும் தெளிவின்மை காரணமாக காப்புறுதி கோரிக்கைகள் காப்புறுதி கம்பனிகளினால் நிராகரிக்கப்படலாம். | | ◇ இலங்கை காப்புறுதி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளில் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளல் .<br>◇ CPSTL தீ மற்றும் வணிக காப்புறுதி, ஹல் (கரைகடந்த குழாய்கள்), பண்டக் காப்புறுதி, வாகனக் காப்புறுதி, களஞ்சிய தாங்கிகள் மற்றும் உபகரணங்களுக்கு காப்புறுதி பூட்கைகளை பெற்றுக்கொண்டுள்ளது. |

# இடர் முகாமைத்துவம்

| | | |
|---|---|---|
| **ஊழியர் உறவுமுறை** | | |
| 99 % வீதமான எங்கள் ஊழியர்கள் தொழிற்சங்கத்தில் இணைந்துள்ளனர். இதனை நாங்கள் சங்கங்களுடன் இணைவதற்கான சுதந்திரம் என அங்கீகரிக்கின்றோம். | ◇ தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தம் தேவையற்ற தடங்கல்களுக்கு காரணமாகின்றது. | ◇ எந்தவொரு விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கு ஊழியர்களுக்கு திறந்த கதவுக் கொள்கை பின்பற்றப்படுகின்றது.<br>◇ அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளை தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் ஒழுங்குமுறையாக கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் மேற்கொள்ளல்.<br>◇ அவர்களுடைய பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு ஊழியர்களுக்கு திறந்த கதவுக் கொள்கை பின்பற்றப்படுகின்றது. |
| **எண்ணெய் முனைய கைத்தொழிலுக்கு குறித்துரைக்கப்பட்ட பணியுடன் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் கிடைக்கப்பெறாமை -வரையறுக்கப்பட்ட கிடைப்பனவு** | | |
| செயல்படுத்தும் வேகத்தைப் பாதிக்கும் வேகம் மற்றும் பணியின் உயர் ஆகுசெலவு | | ◇ உள்;ர் தரப்பினர்களுக்கு பணிகளை வழங்குதன் ஊடாக அபிவிருத்தி செய்யப்படுகின்றது உள்நாட்டு தரப்பினருடன் இணைந்து வெளிநாட்டுத் தரப்பினர் பங்குபற்ற முடியும் |
| உள்ளூர் சமூக உறவுகள் | | |
| கம்பனியின் விம்பத்தை கட்டியெழுப்புவதற்கு நாங்கள் செயற்படும் சமூகத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வலுவூட்டல் மற்றும் பங்களிப்பு செய்தல்.<br>உதாரணம்: கொழும்பில் இருந்து கொலொன்னாவை வரையிலான புதிய குழாய் இணைப்புக்கு கிராம மக்கள் மற்றும் வதிவிடதாரருடன் ஏற்படும் முரண்பாடுகள்.<br> | | ◇ உயர் மட்ட சமூக ஈடுபாடு மற்றும் எங்கள் சமூகத்துடன் உண்மையான உறவுகளை பலப்படுத்தல்.<br>◇ நடைமுறைப்படுத்தும் சமூக அபிவிருத்தி கருத்திட்டங்களில் முதலீடு செய்தல்<br> |
| **மோசடி மற்றும் சட்டவிரோதச் சட்டங்கள்** | | |
| முகாமைத்துவ மோசடி, ஊழியர் மோசடி மற்றும் ஏனைய சட்டவிரோத சட்டங்களின் இடர் | | ◇ உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை மீதி சுயாதீன உத்தரவாதத்தை வழங்குவதற்கு CPSTL தனியானதொரு உள்ளக கணக்காய்வு அலகினைக் கொண்டுள்ளது..<br>◇ ஒவ்வொரு பிரிவின் தலைமையின் மேற்பார்வையின் கீழ் அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.<br>◇ வெளிவாரி கணக்காய்வாளர்களினால் நிதியில் கூற்றின் நேர்மை மதிப்பீடு செய்யப்படுகின்றது. |

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கம்பனியின் விவகாரங்கள் பற்றிய 2019 டிசம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இந்த அறிக்கை 02 பெப்ரவரி 2020ஆம் திகதி பணிப்பாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டது.

### முதன்மை நடவடிக்கை

கம்பனியின் முதன்மை நடவடிக்கையானது, இலங்கையில் பெற்றோலிய களஞ்சிய மற்றும் விநியோக நடவடிக்கைகளை வசதிப்படுத்தல் மற்றும் எண்ணெய் முனையங்கள், களஞ்சிய வசதிகள், குழாய்த் தொகுதிகள் மற்றும் பவுசர் தொகுதி ஆகியவற்றை உள்ளடக்குகின்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய மற்றும் விநியோக உட்கட்டமைப்பை உரித்தாகக் கொள்ளுதல், தொழிற்படுதல் 2003 ஒக்டோபர் 13ஆம் திகதி வெளியிடப்பட்ட 1310-8 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட அரச வர்த்தமானியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியம் மற்றும் கொலொன்னாவை, முத்துராஜவெல நாடு முழுவதிலும் உள்ள மொத்தக் கிடங்குகள் மற்றும் தொடர்புடைய வசதிகள் மற்றும் முத்துராஜவெல எண்ணெய் நிலையத்திற்கான தனி நிலைய நங்கூர மிதவை கொழும்பு துறைமுகம் முதல் கொலொன்னாவை நிலையம் வரை மற்றும் வாடிக்கையாளர் சேகரிப்பு எல்லைகள் வரை அவற்றின் கிளைகள், காலி துறைமுகம் தொடக்கம் மாகல்ல வரை மொத்தக் கிடங்குகள் மற்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட நிலையங்கள் மொத்தச் சாலைகளிலுள்ள குழாய்த் தொகுதி போன்றன தொடர்பில் பயன்படுத்தவதற்கான உரிமை அத்துடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் அனுபவிக்கப்படும் குத்தகை உரித்து உரிமையுடன் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாட்டாளர் வசதியாகும்.

### தொழிற்பாடுகள் மற்றும் நிதி முனைவுறுத்தல்கள் பற்றிய மீளாய்வு

தொழிற்பாடு ரூபா 1.7 பில்லியன் தேறிய இலாபத்துடன் ரூபா 15.3 பில்லியன் வருவாய் ஒன்றினைக் காட்டியுள்ளது.

| விபரங்கள் | 31.12.2019<br>ரூபா | 31.12.2018<br>ரூபா |
|---|---:|---:|
| புரள்வு | 15,339,875,966 | 13,130,224,803 |
| வரிக்கு முன்னரான உழைப்பு | 2,927,856,033 | 1,522,230,109 |
| பின்னர் இலாபம்/ (நட்டம்) | 1,765,326,987 | 197,317,904 |

### குறிப்பிடப்பட்ட மூலதனம்

31 டிசம்பர் 2019ஆம் திகதியில் உள்ளவாறு குறிக்கப்பட்ட மூலதனம் ரூபா 7,500,000,000 ஆகும். பங்குரிமை விநியோகம் பின்வருமாறு

| | சாதாரண பங்குகள் |
|---|---|
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 500,000,000 |
| இலங்கை இந்தியன் ஒயில் கம்பனி லிமிடட் | 250,000,000 |

### ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

இவ் ஆண்டின் போது ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் அசைவுகள் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 10 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### பங்கிலாபம்

31 டிசம்பர் 2019 உடன் முடிவுற்ற ஆண்டுக்கான பங்கொன்று ரூபா 0.48 இடைக்கால பங்குலாபம் ஒன்றினை பணிப்பாளர்கள் பரிந்துரைத்தனர்

### நிறுவன அன்பளிப்புகள்

ஆண்டின் போது கம்பனி ரூபா 3,781,450 தொகையை நன்கொடைகள் மற்றும் அனுசரணைக் கொடுப்பனவுகளாக வழங்கியது.

### 31 டிசம்பர் 2019 ஆம் திகதியில் உள்ளவாறு பணிப்பாளர்கள்

31 டிசம்பர் 2018ஆம் திகதியில் உள்ளவாறு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் பணிபாளர் சபை பின்வருமாறு,

திரு. எம்.ஆர்.எம். ஆப்டீன்
திருமதி. கே.டி.ஆர. ஒல்கா
திரு. நிமல் ஜயசுந்தர
திரு. சுராஜ் பட்நாக்
திரு. ஷியாமல் செனரத்
திரு. ஆனந்த பாலித
திரு. மனோஜ் குமார் குப்தா

### பணிப்பாளர்களின் வேதனாதிகள்

பணிப்பாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற வேதனாதிகள் நிதிக்கூற்றக்கான வருமானக் கூற்றில் விபரமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### நலன்கள் பற்றிய பதிவேடு

கம்பனியானது 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கு அமைவாக நலன்கள் பற்றிய பதிவேடு ஒன்றினைப் பேணுகின்ற போது 2017 இன் 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 192 (2)இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அனைத்துப் பணிப்பாளர்களும் பிரகடனங்களை மேற்கொள்ள வேண்டும். தொடர்புடைய பதிவுகள் மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் போது நலன்கள் பற்றிய பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டன.

### நியதிச் சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசாங்கத்துடன் தொடர்புடைய மற்றும் ஊழியர்களுக்கான அனைத்து நியதிச் சட்ட கொடுப்பனவுகளுக்கும் உரிய திகதியில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன அல்லது கம்பனியின் ஏடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றனர்.

# பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை

### தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

வியாபார தொழிற்பாடுகளை தொடர்வதற்கு கம்பனி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர்கள் நம்புகின்றனர். அதற்கமைய நிதி கூற்றுகளை தயாரிக்கையில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவினை பின்பற்றுவது பொருத்தமானது என பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

### ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 22இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர பணிப்பாளர்கள் சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டிய சரிப்படுத்தல்களை வேண்டுகின்ற கம்பனி மீதான ஏதேனும் முக்கிய தாக்கத்தை கொண்டிருக்கக்கூடிய ஐந்தொகை திகதிக்கு பிந்தி நிகழ்ந்துள்ள முக்கிய நிகழ்வுகள் ஏதும் காணப்படவில்லை.

### கணக்காய்வாளர்கள்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்த நியதிகளுக்கு அமைய கம்பனியின் கணக்காய்வாளராக பணிப்பாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினை அல்லது அவர் பெயர் குறிப்பிட்டவரை நியமிப்பதற்கு கம்பனி வேண்டப்பட்டுள்ளது.

31 டிசம்பர் 2019ஆம் ஆண்டு முடிவடைந்த நிதியாண்டுக்கான கணக்காய்வு தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. கணக்காய்வாளருக்கு செலுத்தப்பட்ட கட்டணங்கள் நிதியியல் கூற்றுக்களுக்கான விபரிக்கப்பட்ட வருமானக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் அறிந்தவரையில் மேலே வெளியிடப்பட்டவை தவிர கணக்காய்வாளர்கள் கம்பனியுடன் ஏதேனும் உறவினை (கணக்காய்வாளர் ஒருவராகத் தவிர) கொண்டிருக்கவில்லை. கணக்காய்வாளர்கள் கம்பனியில் அல்லது அதன் குழுமக் கம்பனிகளில் ஏதேனும் நலனையும் கொண்டிருக்கவில்லை. இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்கநெறிக் கோவைகளுக்கு அமைவாக அவர்கள் சுயாதீனமானவர்கள் என்பதை உறுதிசெய்கின்றனர்

பணிப்பாளர் சபை சார்பாக

எம்.உவைஸ் மொஹமட்
**பணிப்பாளர்/ முகாமைத்துவப் பணிப்பாளர்**

ஈ.ஏ. ரத்னவீல
**பணிப்பாளர்**

சபையின் கட்டளைக்கு அமைவாக

எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்கட்டேரியல் சேர்விஸஸ் (பிறைவட்) லிமிடட்
**கம்பனி செயலாளர்கள்**

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

### தொகுப்பு

சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள் மூவரை உள்ளடக்குகின்றது

- திருமதி. கே.டி.ஆர். ஒல்கா - தலைவர்
- திரு. பிரமோத் ஜெயின் - அங்கத்தவர்
- திரு. ஆனந்த பாலித - அங்கத்தவர்

அரசாங்க வர்த்தக தொழில் முயற்சிகளில் கணக்காய்வு குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்ட திறைசேரி சுற்றறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்ட பொறுப்புகள், அதிகாரங்கள் மற்றும் குறித்துரைத்த கடமைகளின் நோக்கெல்லையினை உள்ளடக்கி கணக்காய்வுக் குழுவின் பொறுப்பாணை தயாரிக்கப்பட்டுள்ளது.

### கணக்காய்வுக் குழுவின் பணிகள்

குழு சிலோன் பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் நிறுவனத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயன்முறை உள்ளக கணக்காய்வு செயன்முறை, உள்ளக கட்டுப்பாடுகள் முறைமை என்பவற்றை மேற்பார்வை செய்வதுடன் கம்பனியின் தொழிற்பாடுகள் மீதான சாத்தியமான தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் இதனூடாக நிதியியில் கூற்றுக்களில் தாக்கத்தினை புரிந்துகொள்வதற்கும் வெளிவாரி கணக்காய்வாளர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவு அத்துடன் அண்மைய தொழில்சார் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிவுறுத்தல்கள் மூலம் எழுப்பப்படும் முக்கிய கணக்கீட்டு மற்றும் அறிக்கையிடல் பிரச்சினைகளை மீளாய்வு செய்கின்றது. இதற்கு புறம்பாக குழுவானது கம்பனி ஆட்பட்டுள்ள இடர் இடரினை தணிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் செயற்திறனை மீளாய்வு செய்கின்றது.

### உள்ளக கணக்காய்வுகள்

குழு நிதியியல் கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள் மற்றும் தயாரிப்புகள் வரை நிதியியல் அறிக்கையிடல் முறைமை அது சொத்துக்களைப் பாதுகாக்கின்றதுடன், பணிப்பாளர்களுக்கு நியாயமான உத்தரவாதத்தை வழங்குகின்ற வகையில் வடிவமைக்கப்பட்ட, வினைத்திறனான நிதியியல் கட்டுப்பாடுகளை அணுகக்கூடிய கணக்கியல் முறைமை மற்றும் உள்ளக கணக்காய்வு முறையின் நோக்கெல்லை மற்றும் பூர்த்திசெய்தல்கள் அமைந்துள்ளதை மீளாய்வு செய்கின்றது. உள்ளக கணக்காய்வு செயற்பாடு கம்பனியுள் நிறுவப்பட்டுள்ளது. பின்னூட்டல் மீளாய்வுகள் அட்டவணைப்படுத்தப்பட்டு கணக்காய்வு விதப்புரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிசெய்கின்றது.

### நியதிச்சட்ட கணக்காய்வுகள்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின்படி கணக்காய்வின் தன்மை, அணுகுமுறை மற்றும் நோக்கம் ஆகியவற்றை மீளாய்வு செய்ய இலங்கையின் சட்ட கணக்காய்வாளர்கள், தேசிய கணக்காய்வு அலுவலகம் ஆகியவற்றுடன் குழு விவாதிக்கின்றது. எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு பதிலளிக்கும் விதமாக நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் இடத்தில் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் ஆகியவை கலந்துரையாடப்படுகின்றன.

### கூட்டங்கள்

மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டின் போது மேலே குறிப்பிட்டவாறு குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளை செயலாற்றுவதற்காக 8 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

ஆண்டின் போது கூட்டங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| தொடர் இல | திகதி | குழுவின் பலம் | பங்குபற்றிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை | அங்கத்தவர்களின் பெயர் |
|---|---|---|---|---|
| 01. | 08.02.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |
| 02. | 14.02.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |
| 03. | 22.03.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |
| 04. | 09.05.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |
| 05. | 03.06.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |
| 06. | 15.08.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |
| 07. | 19.09.2019 | 03 | 03 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின்<br>திரு ஆனந்த பாலித |
| 08. | 25.11.2019 | 02 | 02 | திருமதி. கே.டி.ஆர். ஒல்கா<br>திரு. பிரமோத் ஜெயின் |

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு வகிபாகம்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு பல தீர்மானங்களையும் விதப்புரைகளையும் உபாயமார்க்க பிரச்சினைகள் மீது வழங்கியது.

- முகாமைத்துவம் கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர்களுடன் இணைந்து உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு செய்தல்.

- வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான எடுத்துரைப்பினை உறுதி செய்வதற்கு நிதியியல் அறிக்கையினை மேற்பார்வை செய்தல்.

- நட்டங்களை உருவாக்கும் அலகுகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக விதப்புரைகளை முன்மொழிவதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நட்டங்களுக்கான காரணங்கள் மற்றும் தாக்கங்களை அடையாளம் காணுதல் மற்றும் விரிவான பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் கற்கைசெய்தல்.

- வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் மற்றும் செயற்பாட்டு திட்டத்தை மீளாய்வு செய்தல்.

- உயர் மட்டத்தின் தொனியிலிருந்து வெளிக்கொணருகின்ற வலுவான மற்றும் செயற்திறன் மிக்க உள்ளக கட்டுப்பாடுகளுக்காக நிறுவனம் முழுவதும் கடமைப் பொறுப்பொன்றினை உருவாக்குதல்.

- சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள், ஒழுக்கநெறிகள், ஆர்வமுரண்பாடு போன்றவற்றுடனான இணங்குவித்தல் தொடர்பில் நிறுவனக்கொள்கைகளை மீளாய்வு செய்தல்.

- நிலமைகள், முன்னேற்றங்கள், புதிய அபிவிருத்திகள், பிரச்சினை மிக்க விடயப் பரப்புகள் தொடர்பில் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் தொடர்ச்சியான தொடர்பினை ஏற்படுத்துதல்.

**முடிவுரை**

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளது. நிதியியல் கூற்றுகள் வரலாற்று ஆகுசெலவு மாற்றீட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு, கம்பனியின் விவகாரங்கள் அதன் கொள்கைகளுக்கு அமைவாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக கம்பனியின் சொத்துக்கள் உரிய முறையில் கணக்கு வைக்கப்பட்டு போதிய பாதுகாப்பளிப்பதற்கு கம்பனியின் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு போதியளவான உத்தரவாதத்தை வழங்கியுள்ளது என்பது தொடர்பாக திருப்தியடைகின்றது.

கே.டி.ஆர். ஒல்கா

**தலைவி**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

# நிதியியல்

# தகவல்கள்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தலைவர்

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட்

**2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் 2019 திசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடன் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகள் மீதான கணக்காய்வாரள் அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் டேமினலஸ் (கம்பனி) கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் வழங்கப்படுகின்றது

கம்பனியின் இணைந்த நிதிக் கூற்றுக்களின் மீதான எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை. ஏனெனில் எனது அறிக்கையின் பிரிவில் உள்ள கலந்துரையாடப்பட்ட முக்கியமான விடயங்கள் உரிமை மறுப்பு அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்நிதிக் கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை பெறமுடியாதிருந்தது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 51ஆம் பந்திக்கு (இகநி 16) அமைவாக, ஒவ்வொரு நிதியியல் ஆண்டுக்கு ஒரு முறையேனும் சொத்துக்களின் பயன்படு ஆயுட் காலம் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், கடந்த ஆண்டின் எதிர்பார்ப்புக்களுடன் வேறுபடுமாயின் இகநி 08ற்கு இணங்கும் வகையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். எனினும் முழுமையான தேய்மானம் வழங்கப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுள் காலம் தொடர்ச்சியாக ரூபா 6.074 மில்லியனாக குறிப்பிடப்படுவதுடன், அது கம்பனியினால் மீளாய்வு செய்யப்படவும் இல்லை கணக்கீடு செய்யப்படவும் இல்லை. 2003ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டதில் இருந்து கம்பனியின் ஆதனங்கள் மீள் மதிப்பீடு செய்யப்படவில்லை.

(ஆ) கீழ்வரும் காரணங்களினால், சிலோன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி என்பவற்றுக்கு இடையிலான கம்பனிகளுக்கு இடையிலான மீதிகளின் செம்மை, உளதாம் தன்மை, மதிப்பீடு மற்றும் பூணைப்படுத்தல்கள் கணக்காய்வின் போது உத்தரவாதப்படுத்தப்படவில்லை.

(i) கணக்காய்வுக்கு கிடைத்த தகவலின்படி, 2018ஆம் ஆண்டு எஸ்ம் வங்கியின் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட மூலப்பொருள் கட்டணமான ஒரு லீற்றருக்கு 13 சதத்திற்கான கடன் வட்டியினை இல்லாது செய்வதற்கு கடன் தீர்ப்பனவைக் கவனத்தில் கொண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 1,173 மில்லியனை கணக்கில் இருந்து நீக்குவதற்கு தாய்க் கம்பனியான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவர்களின் கணக்கில் இருந்து பதிவழிப்பு செய்துள்ளது. எனினும், இன்றுவரை கம்பனியால் இது தொடர்பாக ஏதேனும் கழிப்பனவு ஏற்பாடுகள் அல்லது முடிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை. அதனால் இந்த மீட்க வேண்டிய கிடைக்கவேண்டிய தொகை கணக்காய்வின் போது பாரதூரமான சந்தேகத்தை உருவாக்குகின்றது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

(ii) கம்பனியின் நிதிக் கூற்றுக்கு அமைவாக, மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை இ.ரூபா 6,248.87 மில்லியன் ஆகும். எனினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றின்படி, மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனிக்கு (ரூபா 1,029.45 மில்லியன் வழியில்காசை கழிப்பதற்கு முன்னர்) கொடுக்க வேண்டிய தொகை ரூபா 4,625.74 மில்லியன் ஆகும். அதனால் இரண்டு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடான ரூ.1,623.13 மில்லியன் இணக்கம் செய்யப்படாமை அவதானிக்கப்பட்டது.

(iii) லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிடம் இருந்து கிடைக்கப்பெற்ற மீதி உறுதிப்படுத்தலுக்கு அமைவாக, கம்பனிக்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூ.370.9 மில்லியன் ஆகவும், நிதிக்கூற்றில் கம்பனியின் தொடர்பாடல் தொகை ரூ.376.0 மில்லியனாகவும காணப்படுகின்றது. அதனால் இரண்டு மீதிகளுக்கும் இடையிலான வேறுபாடான ரூ.5.1 மில்லியன் இணக்கம் செய்யப்படாமை அவதானிக்கப்பட்டது.

(இ) கம்பனியின் முயற்சிவள திட்டமிடல் முறைமையில் (ஈஆர்பி) பாரிய தொகையுடன் கூடிய 1,300 ற்கும் மேலான வகையான இருப்புத் தொகுதிகள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நீண்ட காலமாக இந்த இருப்பு தொகுதிகளின் பெறுமதி கம்பனியினடைய SAP முறைமைகளில் பதிவுசெய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதனால், மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் திகதியில் முடிவடைந்த கையிருப்பு பண்டங்களின் பெறுமதியின் செம்மை, பெறுமதி மற்றும் பூரணப்படுத்தல் ரூபா 676 மில்லியனாக காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வில் நம்பத்தகுந்தவாறில்லை.

(ஈ) இ.க.நி 08ற்கு முரணாக, 2010 இருந்து 2014ஆம் ஆண்டுகளுக்குரிய ரூ.62.5 மில்லியனையும் 2014 இருந்து 2018ஆம் ஆண்டுகளுக்குரிய ரூ.225.15 மில்லியனையும் 2018ஆம் ஆண்டுக்குரிய ரூ.70.1 மில்லியனையும் உள்ளடக்கி மற்றும் இழுபறிப் படகுக் கட்டணமாக ரூ.357.7 மில்லியனையும் மற்றும் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுக்குரிய புகையிரதப் பாதை பாரமரிப்புக் கட்டணமான ரூ.1.91 மில்லியனையும் மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் செலவாக கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் முடிவில் 2018 மற்றும் 2019இல் கொள்வனவு செய்யப்பட்ட 11 உருப்படிகளை உள்ளடக்கி ரூபா 82.62 மில்லியன் கணக்கில் காட்டப்படாததுடன் முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) **வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள்**

(i) மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், அரசாங்க வழங்கல்கள், பெறுகை வழங்கல்கள், பொது பற்றுச்சீட்டு வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து விற்பனையாளர்கள் உள்ளக்கி ரூ 38.96 மில்லியன் வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுக்கான பற்று மீதிகள் அவதானிக்கப்பட்டது. இதில் 2010 அல்லது அதற்கு முன்னர் இருந்தான 14 விற்பனையாளர்களின் மொத்தத் தொகையான ரூ. 2.98 மில்லியனையும், 05 வருடயங்களுக்கு மேற்பட்ட 10 வருடங்களுக்குட்பட்ட 03 விற்பனையாளர்களின் ரூ.0.55 மில்லியனையும் 01 வருடத்திற்கு மேற்பட்டதும் 05 வருடத்திற்கு உட்பட்ட 31 கடன் நிலுவைகளான ரூபா 35.42 மில்லியனையும் உள்ளடக்கி நிலுவைகள் தீர்க்கப்படாதுள்ளது. வரவு நிலுவைகளைக் கொண்டுள்ள தற்போதுள்ள வரவு நிலுகைகளைத் தீர்க்காத விற்பனையாளர்களுடன் கம்பனி தொடர்ந்தும், கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது அவதானிக்கப்பட்டது. அதனால் அந்த வரவின் உளதாம் தன்மை, துல்லியம் மற்றும் மதிப்பீடு, போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் இல்லாததனால் கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

(ii) 2010 இல் இருந்து அல்லது அதற்கு முன்னர் 81 தரப்பினரிடமிருந்தான வர்த்தகக் கொடுப்பனவு செய்ய வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 7.18 மில்லியன், 05 வருடங்களுக்கு மேற்பட்ட 10 வருடங்களுக்கு உட்பட்ட 310 கொடுப்பனவு செய்ய வேண்டிய மொத்த நிலுவை ரூபா 40.18 மில்லியன், 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு உட்பட்ட 18 கொடுப்பனவு செய்ய வேண்டிய மொத்த நிலுவை ரூபா 39.45 மில்லியன் என்பன மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் தீர்க்கப்படாமல் இருந்தது. அதனால் அந்த மீதிகள் இருப்பு, துல்லியம் மற்றும் மதிப்பீடு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் இல்லாததனால் கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை.

(எ) ஏனைய பெறவேண்டியவைகளின் மொத்தத் தொகையான ரூ.8.8 மில்லியன் தொடர்நதும் 05 வருடங்களுக்கு மேல் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் பெற்றுக்கொள்ளப்படாமல் இருந்தது. ஆகவே போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றின்மையால் இந்த தொகையை மீளப்பெற்றுக்கொள்வது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படாதிருந்தது.

(ஏ) மீளாய்வு ஆண்டின் முடிவில் கம்பனியின் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள மொத்த செலுத்தப்பட வேண்டிய வருமான வரி, செலுத்தப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT), செலுத்தப்பட வேண்டிய பிடித்துவைத்தல் வரி, உழைக்கும் போதே வருமான வரி (PAYE) மற்றும் பொருளாதார சேவைக் கட்டணம் (ESC) ஆகியவற்றுக்கும் அது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பராமரிக்கப்படும் பதிவுகளில் உள்ள தொகைக்கும் இடையில் ரூபா 437.53 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**1.3 முகாமைத்துவத்தினதும் நிதி கூற்றுக்களின் நிர்வாகத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டோரினதும் பொறுப்புக்களும்**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறுமாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

2018 ஆம் ஆண்டின 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) இன் பிரகாரம் கம்பனியானது, கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறப்புக்ளுக்கான முறையான ஏடுகளையும் பதிவுகளையும் பராமரித்தல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் மீது கணக்காய்வு செய்து கணக்காய்வு அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவின் அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால், இந்த நிதிக் கூற்றுக்களில் ஓர் கணக்காய்வு அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கான போதியளவு பொருத்தப்பாடுடைய கணக்காய்வு சான்றுகள் எனக்கு கிடைக்கப்பெறவில்லை.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- கணக்காய்வின் தேவைப்பாட்டிற்கான அனைத்து தகவல்களும் விளக்கங்களும் எனக்கு கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் கம்பனிகள் சட்டத்தின் 163 (1) (ஈ) ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டடத்தின் 12 (அ) ஆம் பிரிவின் தேவைபாடுகளுக்கு அமைய கம்பனியானது முறையான கணக்கீட்டுப் பதிவுகளை வைத்திருந்ததா என என்னால் தீர்மானிக்க முடியாதுள்ளது.

- மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர்த்து, கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 அம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க காணப்படுகின்றன.

- சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கடந்த வருடத்துடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது.

- இவ் அறிக்கையின் 1.2(a), 1.2(b), 1.2 (c) மற்றும் 1.2.(h) ஆம் பந்திகளின் விபரிக்கப்பட்ட விடயங்கள் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக கடந்த ஆண்டுகளின் என்னால் செய்யப்பட்ட அனைத்து பரிந்துரைகளையும் உள்ளடக்கியுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் அடிப்படையிலும் பொருன்மையான விடயங்கள வரையறுக்கப்பட்டதனால், எனது கவனத்திற்கு எதுவும் காணப்படவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

- கம்பனியின் ஆளுகைக் குழுவின் எந்தவொரு அங்கத்தவரும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ச) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய வியாபாரத்தின் சாதாரன காரணங்களினல் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களில் நேரடியான அல்லது நேரடியற்ற ஆர்வம் காணப்படுகின்றதா என கூறுவதற்கு
- பின்வருவனவற்றைத் தவிர்த்து 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு அமைய கம்பனியானது ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்து மூல சட்டங்கள், கம்பனியின் ஆளுகைக் குழுவினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விசேட வழகாட்டல்களுக் ஓழுகவில்லை என குறிப்பிடுவதற்கு.

| | சட்டங்கள்/வழிகாட்டல்கள் குறிப்பு | விளக்கம் |
|---|---|---|
| (அ) | 2003 ஜுன் 2 இன் PED/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை - விபரங்கள் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள் | |
| (i) | வழிகாட்டி 5.1.3 | வழிகாட்டியில் கூறப்பட்டவாறு கம்பனி 3 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்கவில்லை மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கவில்லை |
| (ii) | வழிகாட்டி 5.2.2(b) | ரூபா 10 மில்லியனுக்கு மேற்பட்ட மூலதனச் செலவுகளுக்கு பொதுத் திறைசேரியில் உள்ள அரச தொழில்முயற்சி திணைக்களத்திலும் அமைச்சிலும் அனுமதி பெறப்படவில்லை. |
| (iii) | வழிகாட்டி 5.2.2 | ரூபா 6,981 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட முப்பத்தியெட்டு (38) மூலதனக் கருத்திட்டங்கள் உரிய முறையிலான சாத்தியக் கூறு கற்கையின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (iv) | வழிகாட்டிe 9.2 | கம்பனியானது திறைசேரியில் உள்ள பொது தொழில்முயற்சித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடனான பதிவு செய்யப்பட்ட நிறுவன அட்டவணையை கொண்டிருக்கவில்லை. |
| (v) | வழிகாட்டி 9.3 | கம்பனியானது திறைசேரியில் உள்ள பொது தொழில் முயற்சித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வுத் திட்டங்களைக் கொண்டிருக்கவில்லை. |
| (vi) | வழிகாட்டி 9.10 | இப் பிரிவின் பிரகாரம் ஒப்பந்த, அமைய அல்லது வேறு ஏதேனும் விதத்தில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு திரைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டும். ஒப்பந்த ஊழியர்களின் நியமனத்துக்கு கம்பனியானது அத்தகைய அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் முடிவின் போது 29 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் காணப்பட்டனர். |
| (vii) | வழிகாட்டி 9.12 | கம்பனியால் பயன்படுத்தப்படும் பொதுத் திறைசேரியின் அரச தொழில்முயற்சித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நலன்புரித் திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் கம்பனி ரூ.239.29 மில்லியனை ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளிற்கு செலவழித்தும் உள்ளது. |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| | | |
|---|---|---|
| (b) | அரச பெறுகைகள் வழிகாட்டி - 2006 | வெளியிலிருந்தான போக்குவரத்தைப் (பவுசர்கள்) பெற்றுக்கொள்வதற்கு கேள்வி மனு கோரப்படவில்லை என்பதுடன் சபையின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை |
| (c) | 2013 நவம்பர் 04 ஆம் திகதிய FP/06/35/02/01 ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்பிரல் 29 ஆம் திகதிய PED03/2016 ஆம் இலக்க பொது தொழில் முயற்சித் திணைக்களத்தின் சுற்றறிக்கை. | மீளாய்வு ஆண்டின் போது ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிக்காது கம்பனியானது ரூபா 162.2 மில்லியன் தொகையை உழைக்கும் போதான செலுத்தும் வரியாக செலுத்தியுள்ளது. |
| (d) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | வெற்றிடமாகவுள்ள பதவி ஒன்றுக்கு பதில் கடமைகள் 03 மாதங்களுக்கு ஆயினும், 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு 27 உத்தயோகத்தர்கள் பதில் கடமை ஆற்றியுள்ளனர். மீளாய்வாண்டின் இறுதியில் இது சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு முரணானது. |

**(உ) ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவனத்தின் வளங்கள்**

குறிப்பாக, பொது தொழில்முயற்சிகளுக்கான சிறந்த ஆளுகைக்கான 2003 ஜூன் 02 வெளியிடப்பட்ட பொது தொழில்முயற்சிகள் சுற்றுநிருபம் இலக்கம் PED/12, அதி மேதகு ஜனாதிபதியால் 2006 ஜனவரி 04 வெளியிடப்பட்ட இலக்கம் CSA/PI/40 மற்றும் 2010 மே 14 வெளியிடப்பட்ட இலக்கம் CS/1/17/1 க் கொண்ட கடிதங்கள் மற்றும் 2004 ஜனவரி 04 வெளியிடப்பட்ட 20ம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றுக்கு முரணாக 2018ம் ஆண்டு நான்கு நபர்களையும் ஒரு ஊழியரையும் வேறு நிறுவனத்திற்கு விடுவித்ததுடன், அதற்காக ரூபா 1.19 மில்லியனை விடுவிக்கப்பட்ட நபர்களுக்கு ஊழியமாகவும் ஏனைய கொடுப்பனவாகவும் மற்றும் வாகனத்திற்கான எரிபொருள் மற்றும் பராமரிப்புக்கான செலவுகளை ஏற்றுக்கொண்டமை காரணமாக முரண்பாடாக செயற்பட்டமை.

- 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (g) யின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக கம்பனி அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளுக்கு அமைவாக செயற்படவில்லை எனத் தெரிவிப்பது தவிர,

**(அ) தீர்வு ஒப்பந்தத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக முறையான மேற்பார்வை செயற்பாட்டு முறைமை காணப்படாமை**

எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டவாறு, இலங்கை அரசாங்கம் மற்றும் இந்தியன் ஒயில் கம்பனி பிஎ்சி நிறுவனம் என்பவற்றுக்கிடையிலான 2007 ஜனவரி 05ம் திகதியிடப்பட்ட தீர்ப்பனவு ஒப்பந்தத்தின் பிரிவு 03ற்கு அமைவாக, இலங்கை இந்தியன் ஒயில் கம்பனியினால் அதன் சைனா பேய் நிறுவலில் இருந்து நாட்டின் பெற்றோலியப் பொருட்களின் உற்பத்தியில் உச்சளவாக 5 வீதத்திற்கும் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அதன் சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிறுவலில் இருந்து தவிர்த்து விநியோகம் உச்சளவாக 5 வீதத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் மேற்குறிப்பட்ட நிபந்தனைகள் தொடர்பாக தொடர்ச்சியான கண்காணிப்புக்கான முறைமை காணப்படவில்லை. அதன் விளைவாக, கம்பனியின் உற்பத்தி வருமானத்தில் இழப்புகள் காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

**(ஆ) பொதுப் பயன்பாட்டு வசதிகளுக்கான பங்குதாரர்கள் உடன்படிக்கை மற்றும் பங்கு விற்பனைக் கொள்வனவு ஒப்பந்தம் என்பன காலாவதியானதன் காரணமாக விலைச் சூத்திரத்தை மீளமைத்தல்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்தியன் ஒயில் கம்பனி பிஎல்சி நிறுவனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் நிறுவனம் என்பவற்றக்கிடையிலான பொதுப் பயன்பாட்டு வசதிகளுக்கான பங்குதாரர்கள் உடன்படிக்கை மற்றும் பங்கு விற்பனைக் கொள்வனவு ஒப்பந்தம் 31 டிசம்பர் 2008ம் திகதி காலாவதியாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் புதிய ஒப்பந்தத்திறகு வர வேண்டும் இல்லை எனில் அதனை நீடித்தல் வேண்டும். அதனால் உற்பத்திக் கட்டணங்கள், படி மீட்டெடுப்புகள் உள்ளடங்களாக போக்குவரத்து வருமானங்களைத் தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட விலைச் சூத்திரம் 2011ம் ஆண்டிலிருந்து திருத்தப்படவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

**(இ) பொது பயன்பாட்டாளர் வசதி**

13 மே 2019இல் லங்கா இந்தியன் ஒயில் கோப்பிரேசன் இன்றி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கம்பனி பொது பயன்பாட்டாளர் வசதிக்கான ஒப்பந்தத்திற்கு வந்துள்ளது. இந்த உடன்பாட்டிற்கு அமைவாக பெற்றோலியப் பண்டங்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து செய்தல் மற்றும் உற்பத்தியினை தீர்மானிக்கும் முறை என்பன தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் கம்பனியும் உடன்பட்டுள்ளன. எனினும், 2003ஆம் ஆண்டுக்கு பொது பயன்பாட்டாளர் வசதிகள் பங்குதாரர் ஒப்பந்தத்தில் உள்ள பிரதான பயன்பாட்டாளர் மற்றும் தரப்பாக உள்ள லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன் அதே நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளதால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதா என்பது தொடர்பாக கணக்காய்வில் தெளிவில்லாதுள்ளது. கம்பனி லங்கா இந்தியன் ஒயில் கோப்பரேசன், கம்பனியும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை மறுக்கின்றதனால், சாதகமற்ற நிலைமையும் ஆகுசெலவையும் கம்பனி ஏற்க நேரிடும் என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஈ)** 2019 திசம்பர் 31 அன்று கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3,249 ஆகக் காணப்பட்ட போதும் 343 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. இவற்றுள் பிரதி பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்), பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியயல் மற்றும் ...), பிரதான தகவல் அலுவலர், முகாமையாளர் (தீ மற்றும் பாதுகாப்பு) மற்றும் முகாமையாளர் (உள்ளக கணக்காய்வு) போன்றவை அடங்கலாக 44 பதவிகள் சிரேஷ்ட ஆளனியினருக்கான வெற்றிடங்களாகும். ஆயினும், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருள் 833 நபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.

- கம்பனியின் வளங்கள் கேள்விமனு கோரி, சிக்கனமாக, வினைத்திறனுடனும் வினைத்திறனுடனும் உரிய நேர கட்டத்திலும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பொருத்தப்பாடுடைய சட்டங்களுக்கு அமைய நடைபெறவில்லை என்பதை குறிப்பிடுவதற்கு.

**டபில்யூ.பி.சி.விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் நாயகம்

# வருமானக் கூற்று

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | குறிப்பு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துகள்** | | | |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | **16,014,759,551** | 16,046,854,744 |
| அருவச் சொத்துகள் | 11 | **101,433,160** | 127,341,560 |
| எனைய நிதியியல் | 14.1 | **1,640,163,452** | 1,138,830,704 |
| | | **17,756,356,163** | 17,313,027,008 |
| **நடைமுறை சொத்துகள்** | | | |
| பொருட்பதிவேடு | 12 | **675,841,555** | 657,620,365 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 13 | **8,247,643,666** | 7,679,235,133 |
| ஏனைய நிதியியல் சொத்துகள் | 14.2 | **1,525,800,944** | 1,523,439,398 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 15 | **3,999,712,050** | 3,148,644,883 |
| | | **14,448,998,215** | 13,008,939,779 |
| **மொத்த சொத்துகள்** | | **32,205,354,378** | 30,321,966,787 |
| **பங்குரிமையும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகளும்** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 16 | **7,500,000,000** | 7,500,000,000 |
| மூலதன ஒதுக்குகள் | 16.1 | **979,000,000** | 979,000,000 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | | **17,729,810,194** | 16,287,261,312 |
| மொத்தப் பங்குரிமை | | **26,208,810,194** | 24,766,261,312 |
| **நடைமுறையற்ற பொறுப்புகள்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு | 17 | **1,706,098,260** | 1,451,971,373 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 8.1 | **2,085,914,526** | 1,997,626,173 |
| | | **3,792,012,786** | 3,449,597,546 |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு | 18 | **1,064,779,767** | 1,815,024,740 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய வருமான வரி | | **1,139,751,631** | 291,083,189 |
| **மொத்த பொறுப்புகள்** | | **2,204,531,398** | 2,106,107,929 |
| **மொத்த பங்குரிமையும் பொறுப்புகளும்** | | **32,205,354,378** | 30,321,966,787 |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இந் திதியியல் கூற்றுகள் இணங்குகின்றன என சான்றுபடுத்துகின்றேன்.

**திரு.ஜே.ஏ.யு.ஆர்.கே.ஜயலத்**
தலைவர் - நிதி

இந்நிதியில் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்புடமையாகும். பணிப்பாளர் சபைக்காக அதன் சார்பில் ஒப்பமிட்டது.

**ஈ. ஏ. ரத்னவீல**
பணிப்பாளர்

**எம். உவைஸ் மொஹமட்**
தலைவர்

65 தொடக்கம் 92 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதி கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்.

02 மாச்சு 2020
கொழும்பு

# அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | குறிப்பு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 3 | 15,339,875,966 | 13,130,224,803 |
| நேரடிச் செலவுகள் | | (8,580,154,080) | (7,903,351,446) |
| **மொத்த இலாபம்** | | 6,759,721,886 | 5,226,873,357 |
| ஏனைய தொழிற்படுதல் வருமானம் | 4 | 852,348,796 | 704,333,113 |
| ஏனைய தொழிற்படுதல் செலவுகள் | 4.1 | (70,222,231) | - |
| நிருவாகச் செலவுகள் | | (4,937,022,268) | (4,526,853,560) |
| **தொழிற்படுத்தல் இலாபம்** | | 2,604,826,183 | 1,404,352,910 |
| நிதி வருமானம் | 5 | 323,029,850 | 117,877,199 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | 6 | 2,927,856,033 | 1,522,230,109 |
| வருமான வரிச் செலவு | 7.1 | (1,162,529,046) | (1,324,912,205) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | 1,765,326,987 | 197,317,904 |
| **அதனை தொடர்ந்த காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | | |
| வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள் மீதான காப்பு கணிப்பீட்டு இலாபம் | 17 | (135,802,924) | 75,079,946 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் மீதான வரி | 8.1 | 38,024,819 | (18,334,523) |
| ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | | (97,778,105) | 56,745,424 |
| **ஆண்டுக்கான வரியினைக் கழித்து மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | | 1,667,548,882 | 254,063,327 |
| **பங்கொன்றுக்கான உழைப்பு** | 9.2 | 2.35 | 0.26 |

65 தொடக்கம் 92 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதி கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்

# உரிமைப்பங்கு மாற்றங்களின் கூற்று

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | குறிக்கப்பட்ட மூலதனம் ரூபா | மூலதன ஒதுக்கு ரூபா | பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **2018 சனவரி 01இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 16,684,197,985 | **25,163,197,985** |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 197,317,904 | **197,317,904** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 56,745,423 | **56,745,423** |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 254,063,327 | **254,063,326** |
| கொடுப்பனவு செய்யப்பட் பங்கிலாபம் | - | - | (651,000,000) | **(651,000,000)** |
| **2018 டிசம்பர் 31இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 16,287,261,312 | **24,766,261,310** |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | 1,765,326,987 | **1,765,326,987** |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | (97,778,105) | **(97,778,105)** |
| மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | - | - | 1,667,548,882 | **1,667,548,882** |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம் | - | - | (225,000,000) | **(225,000,000)** |
| **2018 டிசம்பர் 31இல் மீதி** | 7,500,000,000 | 979,000,000 | 17,729,810,194 | **26,208,810,193** |

65 தொடக்கம் 92 ஆம் பக்கங்கள் மீதுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதி கூற்றுகளை முழுமையாக்கும் பாகம் ஒன்றாகும்

# காசுப்பாய்ச்சல் கூற்று

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | குறிப்பு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளில் இருந்து/பயன்படுத்தப்பட்ட** | | | |
| வருமான வரிக்கு முன்னர் இலாபம் | | **2,927,856,033** | 1,522,230,109 |
| **சீர்படுத்தல்கள்** | | | |
| நிதி வருமானம் | 5 | **(323,029,850)** | (117,877,199) |
| ஊழியர் கடன் மதிப்பு குறைவிற்கான ஒதுக்கீடு | | **-** | - |
| பொருட்பதிவேடு மற்றும் ஏனைய வர்த்தக பெறத்தக்கவை மதிப்பு குறைப்பிற்கான ஒதுக்கீடு | | **11,978,285** | (301,901,997) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண விற்பனை மீதான நட்டம்/(இலாபம்) | 4 | **(29,445,300)** | (26,421,610) |
| வரையறை செய்யப்பட்ட ஏற்பாடு | | **265,146,147** | 226,725,802 |
| பெறுமானத் தேய்வு | 10.2 | **1,003,171,663** | 953,409,624 |
| அருவச் சொத்து பெறுமதிக் குறைப்பு | 11.2 | **25,908,400** | 2,478,236 |
| **பணியாற்று மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படுத்தல்** | | **3,881,585,378** | 2,258,642,965 |
| பதிவேட்டுப் பொருட்களில் (அதிகரிப்பு)/குறைவு | | **(30,199,472)** | (122,887,775) |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு)/குறைவு | | **(568,408,533)** | 1,567,002,316 |
| ஏனைய நிதியியல் சொத்துகளில் (அதிகரிப்பு)/குறைவு | | **(503,694,294)** | (379,041,297) |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு/(குறைவு) | | **(750,244,973)** | (30,559,793) |
| **தொழிற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) காசு** | | **2,029,038,106** | 3,293,156,416 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | **(187,547,432)** | (563,208,064) |
| செலுத்தப்பட்ட வரையறை செய்யப்பட்ட நலன் | 17 | **(146,822,184)** | (173,664,381) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)** | | **1,694,668,490** | 2,556,283,971 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கையகப்படுத்தல் | 10.1 | **(980,846,563)** | (375,230,766) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மூலம் கிடைத்த வருமானம் | | **39,215,390** | 26,594,468 |
| நிதி வருமானம் | 5 | **323,029,850** | 117,877,199 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல்)** | | **(618,601,323)** | (230,759,099) |
| **நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்கள்** | | | |
| கடன்பாடுகளை மீளச் செலுத்தல் | | - | - |
| செலுத்தப்படட பங்கிலாபங்கள் | | **(225,000,000)** | (651,000,000) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஈட்டப்பட்ட/(பயன்படுத்தப்பட் தேறிய காசுப் பாய்ச்சல்)** | | **(225,000,000)** | (651,000,000) |
| **காசு மற்றும் காசுக்கு சகமானவற்றில் தேறிய அதிகரிப்பு / (குறைவு)** | | **851,067,167** | 1,674,524,872 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 15 | **3,148,644,883** | 1,474,120,011 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | 15 | **3,999,712,050** | 3,148,644,883 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

**1. நிறுவனத் தகவல்**

**1.1 தகவல்**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் கம்பனி நிறுவனமானது 2007இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 2003 ஒக்டோபர் 8 ஆம் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்றாவதுடன் இலங்கையில் வாழிடத்தைக் கொண்டுள்ளது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட் எரிபொருள் நிலையம் கொலன்னாவ என்ற முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

**1.2 முதன்மைச் செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்**

மீளாய்வுஆண்டின்போது கம்பனியின் முதன்மைச் செயற்பாடுகளானவை பெற்றோலியப் பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் ஆகியனவாயிருந்தன.

**1.3 தாய்க்கம்பனியும் இறுதியாக கட்டுப்படுத்துகின்ற தரப்பும்**

பணிப்பாளர்களின் அபிப்பிராயத்தின்படி கம்பனியின் பொறுப்பேற்கின்ற தாய்க் கம்பனி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமாகும்.

**1.4 வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதி**

2017 டிசம்பர் 31இல் ஆண்டுக்கான சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் ரேமினல்ஸ் லிமிடட்டின் நிதியியல் கூற்றுகள் 2018 செப்ரெம்பர் 7ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானமொன்றுக்கு அமைவாக வெளியிடுவதற்காக அங்கீகாரமளிக்கப்பட்டது.

**2. தயாரித்தல் அடிப்படை**

**2.1 இணங்குவித்தல் கூற்று**

நிதியியல் நிலைக்கூற்று அனைத்துமடங்கிய வருமானக்கூற்றுபங்குரிமை மாற்றக்கூற்று காசுப்பாய்ச்சல்கள் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற கம்பனியின் நிதியியற் கூற்றுகள் இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தரநியமங்கள் (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) இற்கமைவாகவும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**2.1.1 அளவீட்டு அடிப்படை**

கம்பனியின் நிதியியற் கூற்றுக்களானவை நிதியியல் நிலைக்கூற்றின் உள்ள பின்வரும் விடயங்களுக்கானவை தவிர வரலாற்றுக் கிரய அடிப்படை மீது தயாரிக்கப்பட்டுள்ளன.

- வரையறுக்கப்பட்ட நலக்கடப்பாடுகளுக்கான பொறுப்பானது காப்பீட்டு கணிப்பீட்டு அடிப்படையில் விலைமதிப்பீடு செய்யப்பட்டு தற்போதைய பெறுமதியில் இணங்காணப்பட்டுள்ளது

**2.1.2 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு**

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றுடன் தொடருவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய மதிப்பீடொன்றினைப் பணிப்பாளர்கள் மேற்கொண்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்திற்காக தொழிலினைத் தொடருவதற்கு கம்பனி மூலவளங்களைக் கொண்டுள்ளது என திருப்தியடைகின்றனர். கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமை மீது ஏதேனும் குறிப்பிடத்தக்க சந்தேகத்தினை தோற்றுவிக்கக்கூடிய ஏதேனும் முக்கிய நிச்சயமின்மைகள் பற்றி சபை அறிந்திருக்கவில்லை. அத்துடன் கம்பனித் தொழிற்பாடுகளை தீர்த்துக்கட்டுவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அவர்கள் உத்தேசிக்கவில்லை. எனவே நிதியியல் கூற்றுகள் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயம்**

நிதியியல் கூற்றுகள், இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும்.

**2.3 ஒப்பீட்டுத் தகவல்கள்**

கணக்கீட்டுக் கொள்கைகள் கம்பனியினால் ஒரேமாதிரியாக பிரயோகிக்ககப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்டவற்றுக்கு இசைவானதாகும். முன்னைய ஆண்டின் தொகைகளும் சொற்றொடர்களும் நடைமுறை எடுத்துரைப்புக்கு இணங்குவதற்கு அவசியப்படுகின்ற போது மீள் ஒழுங்கு செய்யயப்பட்டுள்ள விவரங்கள் நிதியியல் 24 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

**2.4 முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்**

இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக கம்பனியின் நிதியியல் கூற்றுகளின் எடுத்துரைப்பானது கணக்கீட்டுக் கொள்கை பிரயோகத்தினையும் சொத்துகளின் பொறுப்புகளின் வருமானத்தின் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்ற தீர்வுகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை ஆக்குவதற்கு முகாமைத்துவத்தினைத் தேவைப்படுத்துகின்றது. இவ்வூகங்கள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமின்மைகள் எதிர்காலங்களில் சொத்துகளினது அல்லது பொறுப்புகளினது கொண்டுசெல்லும் தொகைக்கு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற முக்கிய சீராக்கமொன்றினை வேண்டுகின்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மதிப்பீடுகளும் ஊகங்களும் முன்னெடுக்கப்படும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீட்டுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடு திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் பாதிக்கப்படும் ஏதேனும் எதிர்காலத்திலும் இனங்காணப்படுகின்றன.

கம்பனியின் நிதியியல் கூற்றுகளில் தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளைப் பிரயோகிப்பதில் மதிப்பீடுகள், நிச்சயமின்மை மற்றும் முக்கிய தீர்வுகள் பற்றிய மிக முக்கிய விடயப்பரப்புக்கள் பின்வருவாறு .தரப்பட்டுள்ளன.

**(அ) ஊழியர் நலப்பொறுப்பு**

வரையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள் - பணிக்கொடையின் செலவும் அதேபோன்று தற்காலப் பெறுமதியும் காப்பு கணிப்பீட்டு விலைமதிப்பீடுகளைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றன. காப்பு கணிப்பீட்டு பெறுமதிப்பீடானது கழிவு வீதங்கள், எதிர்காலச் சம்பள அதிகரிப்புகள் மற்றும் ஏனைய முக்கிய தொடர்புடைய தரவுகள் பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது. ஊழியர் நலன்களின் நீண்டகாலத் தன்மையின் விளைவாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயயிமின்மைக்கு உட்படுத்துகின்றன. மேற்குறித்த முக்கிய ஊகங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினால் கொண்டு நடாத்தப்பட்டவாறான அவற்றின் உணர்வுத்தன்மை பகுப்பாய்வுடன் சேர்த்து ஊகங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் உணர்வு

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

பகுப்பாய்வுகளின் பெறுபேறுகள் என்பன 17.2 ஆம் மற்றும் 17.4 ஆம் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

**(ஆ) வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவைகளின் மதிப்பிழப்பு**

வர்த்தக கிடைக்கப்பெறத்தக்கவை பெறுமதி இழந்துள்ளன என்ற பொருமையான சான்றுவுள்ளதா என்பது பற்றி நிதியில் நிலைக்கூற்றுத் திகதியில் கம்பனி மதிப்பீடு செய்கின்றது. தற்போதுள்ள கிடைக்கப்பெறத்தக்கவைகளின் நடைமுறை நிலைமை மற்றும் வரலாற்று ரீதியான சேகரிப்பு அனுபவம் என்பவற்றின் மீளாய்வொன்றின் அடிப்படையில் மதிப்பிழப்பு நட்டங்கள் கணிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் உள்ளபடியான மதிப்பிழப்புகளை பிரதிபலிக்கும்படியாக அத்தகைய ஏற்பாடுகள் காலமுறையாக சீர்செய்யப்படுகின்றன. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை மீதான மதிப்பிழப்பு நட்டம் 2.5.11 மற்றும் 13 ஆம் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(இ) வருமான வரியும் பிற்போடப்பட்ட வரியும்**

கம்பனி, வருமான வரிக்குட்பட்டதாகும். வருமான வரிக்கான ஏற்பாடுகளைத் நிர்ணயிப்பதில் முக்கிய தீர்வு தேவைப்படுகின்றது. இறுதி வரி நிர்ணயம் நிச்சயமற்றதாகவுள்ள பல கொடுக்கல்வாங்கல்களும் கணிப்புக்களும் காணப்படுகின்றன. மேலதிக வரிகள் செலுத்தப்பட வேண்டலாம் என்ற மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்க்கப்பட்ட வரி தொடர்பிலான பொறுப்புக்களை நிறுவனம் இனங்காண்கின்றது.

**2.5 முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சாராம்சம்**

**2.5.1 வெளிநாட்டு நாணய மாற்றங்கள்**

நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இது கம்பனியின் தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைப்பு நாணயமாகும். வெளிநாட்டு நாணயத்திலான கொடுக்கல்வாங்கல்கள், கொடுக்கல்வாங்கல்கள் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய வீதத்தில் ஆரம்பத்தில் பதிவு செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயத்தில் மாற்றம் செய்யப்பட்ட நாணயச் சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் நிலவுகின்ற தொழிற்பாட்டு நாணய மாற்றுவீதத்தில் மீள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அனைத்து வேறுபாடுகளும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமான கூற்றில் எடுக்கப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் வரலாற்று கிரய நியதிகளில் அளவிடப்படுகின்ற நாணயமல்லாத விடயங்கள், ஆரம்ப கொடுக்கல்வாங்கல் திகதியன்று உள்ளவாறான நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்படுகின்றன. வெளிநாட்டு நாணயமொன்றில் நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நாணயமல்லாத விடயங்கள் நியாயப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து நாணய மாற்று வீதங்களைப் பயன்படுத்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

**2.5.2 வருமானத்தினை இனங்காணுதல்**

பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உட்பாயும் மற்றும் வருமானம் நம்பகமாக அளவிடப்படக்கூடியதாகவிருக்கும் என்ற நிகழ்வுள்ளது என்ற ரீதியில் வருமானம் இனங்காணப்படுகின்றது. வருமானமானது கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கப்பெறத்தக்க பிரதிபலன்களின் வர்த்தக கழிவுகள் மீளளித்தல்கள், தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகள் (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேச நிர்மாண வரி ஆகியவற்றை கழித்து நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்தினுள் பாயும் அத்துடன் கீழே விவரிக்கப்பட்டவாறு கம்பனியின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் குறித்துரைத்த மூலப்பிரமாணம் நிறைவுசெய்யப்படுகின்ற நிகழ்வுள்ளது என்ற அடிப்படையில் வருமானம் நம்பகமான அளவிடப்படக்கூடியதாகவுள்ளபோது கம்பனி வருமானத்தினை இனங்காணுகின்றது. விற்பனையுடன் தொடர்புடைய அனைத்து எதிர்பாராச் செலவுகளும் தீர்க்கப்படும் வரை வருமானம் நம்பத்தகுந்தவாறு அளவிடத்தக்கதாக கருதப்படவில்லை.

**அ) சேவைகளை வழங்குதல்**

சேவைகளை வழங்குவதில் இருந்தான வருமானமானது சேவைகள் வழங்கப்படுகின்ற அல்லது செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக் காலத்தில் இனங்காணப்படுகின்றது.

**முனையக் கட்டணம்**

2003 இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி மற்றும் திறைசேரித் திணைக்களம் என்பனவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டு அதனைத்தொடர்ந்து 2011 மற்றும் 2019 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட பொது பயன்பாட்டாளர் உடன்படிக்கைக்கு அமைவாக சந்தைப்படுத்தும் கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படுகின்ற தொழிற்படுத்தல் செலவுகளை இது உள்ளடக்குகின்றது. இது, அவர்களுக்கு உரித்தான பெற்றோலிய உற்பத்திகளை மாற்றல் செய்கின்றபோது இனங்காணப்படுகின்றது. முனைய கட்டணமானது விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக அளவிடப்படுகின்றது.

**தொழிற்படுத்தல் இலாபம்**

தொழிற்படுத்தல் இலாபமானது விலைகுறித்தல் முன்கூட்டி நிர்ணயிக்கப்படுகின்ற வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்படுகின்றது. விற்பனை செய்யப்படும் பெற்றோலிய உற்பத்திகளின் லீட்டர் ஒன்றுக்காக தொழிற்படுத்தல் இலாபம் அளவிடப்படுகின்றது.

**போக்குவரத்து வருமானம்**

புகையிரத கொள்கலன், குழாய்த் தொகுதி பவுசர் வணிகர்கள் மீது ஏற்பட்ட போக்குவரத்து செலவினம் அறவிடுகின்றது. வருமானமானது லீட்டர் அளவு மற்றும் பயணம் செய்த தூரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

**ஆ) நிதி வருமானம்**

நிதி வருமானது விளைவு வட்டி முறையினை பயன்படுத்தி திரளுகின்ற வட்டியாக இனங்காணப்படுகின்றது.

**இ) ஏனையவை**

ஏனைய வருமானது திரளுகின்ற அடிப்படையொன்றில் இனங்காணப் படுகின்றது.

முதலீடுகள் உள்ளடங்கலாக ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் அத்துடன் ஏனைய நடைமுறையற்ற சொத்துகளின் விற்பனையில் இருந்து தோற்றுகின்ற தன்மையிலான வருமானம் ஒன்றின், தேறிய பெறுகைகள் அல்லது இழப்புகள் சொத்துகள் கொண்டுள்ள தொகை மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகளை விற்று அகற்றுவதன் மீதான பெறுகைகளில் இருந்து கழித்து வருமானக்கூற்றில்

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

கணக்கிடப்படுகின்றது. பிரதானமாக வருமானம் ஈட்டுகின்ற செயற்பாடுகளுக்கு இடைநேர்விளைவான செயற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற அத்துடன் முக்கியத்துவம் அற்ற அதனை ஒத்த கொடுக்கல் வாங்கல்களில் குழுவொன்றில் இருந்து தோன்றுகின்ற பெறுகைகள் அல்லது இழப்புகள் ஒன்றுசேர்க்கப்பட்டு தேறிய அடிப்படை ஒன்றில் அறிக்கையிடப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.5.3 செலவினத்தை இனங்காணுதல்

வியாபாரத்தினை தொழிற்படுத்துவதில் அத்துடன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வினைத்திறன் மிக்க வீதத்தில் பேணுவதில் ஏற்படுகின்ற அனைத்து செலவினமும் காலத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றது.

### 2.5.4 வரி விதிப்பு

காலத்திற்கான வரிச்செலவானது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. வரியானது ஏனைய அனைத்தையம் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படும் விடயங்களுடன் அது தொடர்புபடுகின்றது என்ற அடிப்படையிலானவை தவிர ஆண்டுக்கான இலாபத்தில் இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில் வரியானது முறையே ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அல்லது நேரடியாக பங்குரிமையில் இனங்காணப்படுகின்றது.

#### நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் முன்னைய காலங்களுக்கான நடைமுறை வருமான வரிச் சொத்துகளும் பொறுப்புகளும் வரிவிதிப்பு அதிகாரிகளிடம் இருந்து அறவிடப்பட்ட அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் அளவிடப்படுகின்றது. தொகையினை கணிப்பதற்கு பயன்படுத்தப்படும் வரி வீதங்களுக்கு வரிச்சட்டங்களுக்கு அறிக்கையிடும் திகதியன்று இயற்றப்பட்ட அல்லது கணிசமான அளவு இயற்றப்பட்டுள்ளவையாகும்.

வருமான வரிக்கான ஏற்பாடானது நிதியியல் கூற்றில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான மற்றும் செலவின கூறுகளை அடிப்படையாக கொண்டதுடன் தொடர்புடைய வரிச்சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கணிக்கப்படுகின்றது.

பங்குரிமையில் நேரடியாக இனங்காணப்படுகின்ற விடயங்களுடன் தொடர்புடைய நடப்பு வரியானது பங்குரிமையில் இனங்காணப்படுவதுடன் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

#### பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

நிதியியல் அறிக்கையிடும் நோக்கங்களுக்காக சொத்துகள் மற்றும் பொறுப்புகளின் வரித்தளங்கள் மற்றும் நிதியியல் நோக்கங்களுக்காக அவை கொண்டுள்ள தொகை என்பவற்றிக்கிடையில் அறிக்கையிடும் திகதியில் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையினை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமான வரிப் பொறுப்புகளானவை வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் உள்ள சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற கொடுக்கல் வாங்கல் நேரத்தில் கணக்கிட்டு இலாபத்தினையோ அன்றில் வரி விதிக்கத்தக்க இலாபத்தினையோ அல்லது நட்டத்தினையோ பாதிக்காத பிற்போடப்பட்ட வருமானவரிப் பொறுப்பு உள்ளவை தவிர அனைத்து வரிவிதிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்குமென இனங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துக்களானவை கழிக்கத்தக்க வேறுபாடுகளுக்கு எதிராக வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வின் அடிப்படையில் இத்துடன் வியாபார இணைப்பொன்று அல்லாத கொடுக்கல் வாங்கல் ஒன்றில் சொத்து அல்லது பொறுப்பு ஒன்றின் ஆரம்ப இனங்காணுதலில் இருந்து தோன்றுகின்ற தற்காலிக வேறுபாட்டுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து காணப்படுகின்றவிடத்து அத்துடன் கொடுக்கல் வாங்கல் நேரத்தில் கணக்கீட்டு இலாபத்தினையோ அன்றி வரிவிதிக்கத்தக்க இலாபம் அல்லது நட்டத்தையோ பாதிக்காத பயன்படுத்தப்படாத வரி சொத்துக்களினதும் பயன்படுத்தப்படாத வரி இழப்புகளினதும் முன்கொண்டு செல்லும் தொகை பயன்படுத்த கூடியதாக உள்ளபோது அனைத்து கழிக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளுக்கும் இனங்காணப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்து ஒன்றின் கொண்டுசெல்லும் தொகையானது ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பிற்போடப்பட்ட வருமானவரிச் சொத்தின் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு போதிய வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்ற நிகழ்வு இனியேனும் இல்லையென்ற அடிப்படையில் குறைக்கப்படுகிறது.

பிற்போடப்பட்ட வருமானவரி சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்டுள்ள அல்லது பொருள்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களை (அத்துடன் வரிச் சட்டங்கள்) அடிப்படையாகக்கொண்டு சொத்து தேறுகின்றபோது அல்லது பொறுப்பு தீர்ப்பனவு செய்யப்படுகின்றபோது ஆண்டுக்காக பிரயோகிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற வரிவீதங்களில் அளவிடப்படுகின்றன.

விற்பனைகள் வரி (பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் தேச நிர்மாண வரியும்)

வருவாய்கள் செலவுகள் மற்றும் சொத்துகள் என்பன வரிவிதிப்பு அதிகாரிகளிடமிருந்து அறிவிடப்பட முடியாதுள்ள சொத்துகள் அல்லது சேவை கொள்வனவொன்றின் மீது ஏற்பட்ட விற்பனைகள் வரிகள் தவிர விற்பனை வரித்தொகையின் கழித்து இனங்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் விற்பனை வரியானது ஏற்புடையவாறு சொத்துச் செலவின் பாகமொன்றாக அல்லது செலவு விடையங்களின் பாகமொன்றாக அத்துடன் விற்பனை வரிகள் உள்ளடக்கப்படுகின்றது.

### 2.5.5 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப இனங்காணலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

#### 2.5.5.1 நிதியியல் சொத்துகள்

கம்பனியின் நிதிச்சொத்துக்கலானவை காசு மற்றும் குறுகியகால வைப்புகள் வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கத்தக்கவை அத்துடன் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து நிலுவைத் தொகை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கலையினுள் நிதியில் சொத்துக்கலானவை இலாபம் அல்லது நட்டமூடாக நிதிசார் பெறுமதியில் நிதியில் சொத்துகள் கடன்கள் மற்றும் கிடைக்கத்தக்கவை முதிர்விற்காக வைக்கப்பட்டுள்ள முதலீடுகள் விற்பனைக்கு கிடைக்கத்தக்க நிதியியல் சொத்துகள் அல்லது பொருத்தமான விதத்தில் விளைவுமிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக பெயர் குறிக்கப்பட்ட பெறுமதிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் சொத்துகளை வகைப்படுத்துவதனை ஆரம்ப இனங்காணுதலில் நிர்ணயிக்கின்றது.

பொருத்தமானதாக வினைத்திறனான ஹெட்ஜ் ஹெட்ஜிங் கருவியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் நிதியியல் சொத்துக்களை வகைப்படுத்தலை ஆரம்ப அடையாளம் காணுதலின் போது கம்பனி தீர்மானிக்கின்றது.

இலாபம் அல்லது நட்டமூடாக நியாயப்பெறுமதியில் அல்லாத சொத்துகள் தொடர்பில் நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல்களுடன் சேர்த்து அனைத்து நிதியியல் சொத்துகளும் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றது.

சந்தையில் (கிரமமான வணிக வழிமுறை) ஒழுங்குவிதியினால் அல்லது சமவாயத்தினால் நிறுவப்படுகின்ற காலச் சட்டகம் ஒன்றினுள் சொத்துகளின் ஒப்படைப்பினை தேவைப்படுத்துகின்ற நிதி.

### தொடர்கின்ற அளவீடுகள்

நிதியியல் சொத்துக்களின் வகைப்படுத்தல் மீது சார்ந்துள்ள அவற்றின் அதனை தொடர்ந்த அளவீடானது பின்வருமாறு:

**அ) கடன்களும் கிடைக்கத்தக்கவையும்**

கடன்களும் கிடைக்கத்தக்கவையும் செயற்பாடுமிக்க சந்தை ஒன்றில் விலைக்குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுமதி அல்லாத நிதியியல் சொத்துக்களாகும். அத்தகைய நிதியியல் சொத்துகள் ஆரம்ப அளவீட்டின் பின்னர் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி மதிப்பிழப்பினை கழித்து பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையகப்படுத்தல் மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீத முறையின் மிக முக்கிய பாகமொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு உள்ளடக்கப்படுகின்றது. மதிப்பிழப்பில் இருந்து தோன்றுகின்ற நட்டங்கள் நிதிச் செலவுகளில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

### இனங்காணாமை

நிதியியல் சொத்து ஒன்று (அல்லது பொருத்தமான விடத்து நிதியியல் சொத்தொன்றின் பாகமொன்று அல்லது அதனை ஒத்த நிதியியல் சொத்துகளின் குழும பாகம்) பின்வரும் சந்தர்ப்பங்களில் இனங்காணப்படுவதில்லை.

- சொத்தில் இருந்தான காசுப்பாய்ச்சல் கிடைப்பதற்கான உரிமைகள் காலாவதியாதல்
- கடந்துசெல்லல் ஒப்பந்தம் ஒன்றின் கீழ் முக்கிய தாமதம் இன்றி மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான சொத்தில் இருந்து காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கு அல்லது கிடைக்கப்பெற்ற காசுப்பாய்ச்சல்களை முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு ஒன்றினை ஊகித்துள்ள போது கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ளது. அத்துடன் ஒன்றில் (அ) சொத்தின் கணிசமாக அனைத்து இட நேர்வுகளையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி மாற்றம் செய்து இருக்கின்றது. (ஆ) சொத்தொன்றின் கணிசமாக அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் கம்பனி இடமாற்றவோ அன்றில் பிடித்துவைத்தில்லாமல் ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றம் செய்துள்ளது.

சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்ச்சலினைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி அதன் உரிமைகளை மாற்றம் செய்துள்ள போது அல்லது கடந்துசெல்லல் ஒழுங்கொன்றினை கைச்சாத்திட்டுள்ள போது அத்துடன் சொத்தினது கணிசமான அனைத்து இடர்களையும் அத்துடன் கைமாறுகளையும் மாற்றம் செய்தோ அன்றில் பிடித்து வைத்தோ அன்றி கட்டுப்படுத்தலினை மாற்றம் செய்தோ இல்லாத போது சொத்தானது கம்பனி அதில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது என்ற ரீதியில் இனம்காணப்படுகின்றது.

இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனியானது இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் இனங்காண்கின்றது. மாற்றம் செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் கம்பனி பிடித்துவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையொன்றில் அளவிடப்படுகின்றது.

மாற்றம் செய்யப்பட்ட சொத்தின் மீதான உத்தரவாதமொன்றின் வடிவினை பெற்றுக்கொள்கின்ற தொடர்ச்சியான ஈடுபாடானது சொத்தின் அடிப்படை கொண்டு செல்லும் தொகையின் குறைவான மட்டத்தில் அளவிடப்படுவதுடன் மீள்கொடுப்பனவிற்காக கம்பனி வேண்டப்படக்கூடிய ஆகக்கூடிய பிரதிபலன் தொகையிலும் அளவிடப்படுகின்றது.

### நிதியியல் சொத்துக்களின் மறுமதிப்பிழப்பு

நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்துகளின் குழுமமொன்று சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் இடம்பெற்ற ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக (ஏற்பட்ட இழப்பு) மற்றும் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச்சொத்தின் அல்லது நிதிச் சொத்துக்களின் குழுமத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல மீது அவ்விழப்பு நிகழ்வு தாக்கமொன்றினைக் கொண்டுள்ளது என பொருண்மையான மதிப்பிழப்புச் சான்று காணப்படுமெனில் அதன் போது மாத்திரம் மதிப்பிழந்ததாக கருதப்படுகின்றது.

மதிப்பிழப்பு சான்றானது கடன்படுநர் அல்லது கடன்படுநர் குழுமமொன்று குறிப்பிடத்தக்க நிதிக்கஸ்டத்தினை அனுபவிக்கின்ற தவணை தவறுகின்ற அல்லது வட்டியினை அல்லது முதன்மை கொடுப்பனவுகளை தவணை தவறுகின்ற அல்லது கடமை தவறுகின்ற அவர்கள் வங்குரோத்து அடைகின்ற அல்லது ஏதேனும் நிதியியல் மறுசீரமைப்பு நிலையடைகின்ற மாற்றம் அடைகின்ற குறிகாட்டிகளையும் தவணை தவறுவதன் ஒன்றுக்கொன்று தொடர்புள்ள நிலுவைகள் அல்லது பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் அளவிடப்பட்ட வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது என்ற அவதானிக்கத்தக்க தரவுக்குறிக்காட்டிகள் காணப்படுகின்றவற்றை உள்ளடக்கலாம்.

### பெறுமதி குறைப்பில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துகள்

பெறுமதி குறைப்புச் செலவில் கொண்டு செல்லப்படும் நிதியியல் சொத்துக்களுக்காக கம்பனியானது தனிப்பட்ட

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

ரீதியாக முக்கியத்துவமுடைய அல்லது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமற்ற நிதியியல் சொத்துக்களுக்கான கூட்டான மதிப்பிழப்பு காணப்படுவதற்கு மெய்யான சான்றிதழ் உள்ளதா என்பதனை முதலில் மதிப்பிடுகின்றது. தனிப்பட்ட ரீதியாக மதிப்பிட்ட சொத்தொன்றுக்காக முக்கியமானதோ அல்லது முக்கியமற்றதோ மதிப்பிழப்பு மெய்யான சான்றொன்று காணப்படவில்லை என கம்பனி நிர்ணயிக்குமாயின் அது சொத்தினை அதனையொத்த கடன்இடர் பண்புகளுடன் கூடிய நிதிச்சொத்துக்களின் குழுமமொன்று உள்ளடக்குவதுடன் மதிப்பிழப்பிற்காக அவற்றை கூட்டாக மதிப்பீடு செய்கின்றது. மதிப்பிழப்பிற்காக தனியாக மதிப்பிழக்கப்பட்ட சொத்து மற்றும் மதிப்பிழப்பு நட்டத்திற்காக தொடர்ச்சியாக இனங்காணப்பட வேண்டியவை மதிப்பிழப்பின் கூட்டான மதிப்பீடொன்றில் உள்ளடக்குவதில்லை.
மதிப்பிழப்பு நட்டமொன்று ஏற்பட்டு வருகின்றது என மெய்யான சான்றொன்று காணப்படுமாயின் நட்டத்தொகையானது சொத்துகள் கொண்டு செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான (இன்னமும் ஏற்பட்டிருக்காத எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்புகள் நீங்கலாக) வேறுபாடாக அளவிடப்படுகின்றது. மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிகள் நிதியியல் சொத்தின் அடிப்படை விளைவு வட்டி வீதத்தில் கழிவு செய்யப்படுகின்றன. கடனொன்று மாறுபடும் வட்டி வீதத்தினை கொண்டிருக்குமாயின் ஏதேனும் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடுவதற்கான கழிவுவீதமானது நடைமுறை விளைவு வட்டிவீதமாகவிருக்கும்.

சொத்தொன்று கொண்டு செல்லும் தொகையானது ஏற்புவரம்பு கணக்கொன்றினை பயன்படுத்துவதன் ஊடாக குறைக்கப்படுவதுடன் இழப்புத் தொகை வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. வட்டி வருமானமானது குறைக்கப்பட்ட கொண்டு செல்லும் தொகை மீது தொடர்ந்து திரட்டப்படுவதுடன் மதிப்பிழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களை கழிவுசெய்வதற்கு பயன்படுத்தப்படும் வட்டி வீதத்தினை பயன்படுத்தி திரட்டப்படுகின்றது. வட்டி வருமான நிதி வருமானத்தின் பாகமொன்றாக வருமானக்கூற்றில் தெரிவு செய்யப்படுகின்றது. எதிர்கால கடன் அறவீட்டுக்கு ஐயமற்ற எதிர்பார்க்கையொன்று காணப்படாத போது கம்பனிக்கான அனைத்து பிணை உறுதிகளும் தேறவுள்ள அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள போது கடன்கள் இணையப்பெற்ற ஏற்புவரம்புகளுடன் சொத்து பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. தொடர்ந்து வருகின்ற ஆண்டொன்றில் மதிப்பிழப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்கின்ற நிகழ்வின் காரணமாக மதிப்பிடப்பட்ட மதிப்பிழப்பு அதிகரித்தல் அல்லது குறைவடைதல் தொகை இருப்பின் முன்னர் இனங்காணப்பட்ட மதிப்பிழப்பு நட்டமானது ஏற்புவரம்புக் கணக்கினை சரிசெய்வதன் மூலம் அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்கால பதிவழிப்பொன்று பின்னர் மீள அறவிடப்படுமாயின் அறவீடானது வருமானக்கூற்றின் நிதிச்செலவுகளுக்கு வரவு வைக்கப்படுகின்றது.

### 2.5.5.2 நிதியியல் பொறுப்புகள்

கம்பனியின் நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை தொடர்புடைய தரப்பினருக்கான நிலுவை வங்கி மேலதிகப் பற்றுகள் மற்றும் வட்டியுடைய கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் ஆகியவற்றை உள்டக்குகின்றன.

#### ஆரம்ப இனங்காணலும் அளவீடும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கெல்லையினுள் நிதியியல் பொறுப்புகளானவை இலாபம் அல்லது நட்டம் ஊடாகப் நியாயப் பெறுமதியில் உள்ள நிதியியல் பொறுப்புகள் கடன் மற்றும் கடனாக்கங்கள் அல்லது பொருத்தமானவாறு செயல்திறன்மிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக நியமிக்கப்பட்ட பெறுமதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. கம்பனியானது அதன் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலினை அதன் ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் இனங்காணப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடனாக்கங்கள் தொடர்பில் பெறுமதிக் குறைப்புச் செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. இது நேரடியாக சாட்டத்தக்க செலவுகளை உள்ளடக்குகின்றது. ஆரம்ப நியாயப் பெறுமதிக்கும் உத்தேசத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு தொழிற்படுத்தல் வாடகை வருமானத்தின் கூறொன்றாக உள்ளடக்கப்படுவதுடன் ஏற்புடைய காலப்பகுதி மீது நேர்கோட்டு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

#### தொடர்கின்ற அளவீடு

நிதியியல் பொறுப்புகளின் அளவீடானது பின்வருமாறு இவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கிறது.

**அ) கடன்களும் கடனாக்கங்களும்**

ஆரம்ப இனங்காணலின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடனாக்கங்களும் விளைவு வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி பெறுமதி குறைப்புச் செலவில் தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுகைகளும் இழப்புகளும், பொறுப்புகள் இனங்காணாமையின்போது அத்துடன் விளைவு வட்டிவீத முறை பெறுமதி குறைப்புச் செயன்முறையினூடாகவும் வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பெறுமதி குறைக்கப்பட்ட செலவானது கையேற்பின் மீதான ஏதேனும் கழிவையும் அல்லது கட்டுப்பணத்தையும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றான கட்டங்கள் அல்லது செலவுகளை கருத்திற்கொண்டு கணிக்கப்படுகின்றது. விளைவு வட்டியின் பெறுமதி குறைத்தலானது வருமானக்கூற்றில் நிதிச் செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

#### இனங்காணாமை

பொறுப்பின் கீழுள்ள கடப்பாடு நிறைவேற்றப்படுகின்ற போது அல்லது இரத்துச் செய்கின்ற போது அல்லது காலாவதியாகின்ற போது நிதியியல் பொறுப்பொன்று இனங்காணப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்து பதிலீடு செய்யப்படுகின்ற போது அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக மாற்றியமைக்கின்ற போது அத்தகைய மாற்றம் அல்லது திருத்தம் மூல பொறுப்பின் இனங்காணாமையொன்றாகவும் புதிய பொறுப்பின் இனங்காணப்படுவதாகவும் கொள்ளப்படுவதுடன் தொடர்புடைய கொண்டு செல்லும் தொகைகளிலுள்ள வேறுபாடு வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

**2.5.6 நியாயப் பெறுமதி அளவீடு**

நியாயப் பெறுமதி என்பது அளவீட்டுத் திகதியன்று சந்தைப் பங்கேற்பாளர்களுக்கிடையிலான ஒழுங்கு முறையான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறுகின்ற அல்லது பொறுப்பொன்றின் மாற்றலுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற விலையாகும். நியாயப் பெறுமதி அளவீடானது பின்வருவனவொன்றில் இடம்பெறுகின்ற சொத்தினை விற்பனை செய்வதற்கான அல்லது பொறுப்பினை மாற்றுவதற்கான கொடுக்கல்வாங்கல் முன் ஊகத்தினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- சொத்துக்கான அல்லது பொறுப்பிற்கான முதன்மைச் சந்தை-
  அல்லது
- சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கான முதன்மைச் சந்தை இல்லாதவிடத்து மிகவும் அனுகூலமான சந்தை

முதன்மை அல்லது மிக அனுகூலமான சந்தையானது கம்பனி அணுகத்தக்கதாக இருக்க வேண்டும். சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் நியாயப் பெறுமதியானது தமது அதிகூடிய பொருளாதார நலனுக்காக சந்தைப் பங்கேற்பாளர்கள் செயற்படுகின்றனர் என்பதனை ஊகிக்கின்ற சொத்தினை அல்லது பொறுப்பினை விலை குறிக்கின்றபோது சந்தைப் பங்கேற்பாளர்கள் பயன்படுத்துகின்ற ஊகங்களைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிதியியல் அல்லாத சொத்தொன்றின் நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தினை அதன் அதிகூடிய மற்றும் சிறந்த பயன்பாட்டில் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு அதனை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளர்ரொருவரின் இயலுமையினைக் கருத்திற் கொள்ளத்தக்கது.

சூழ்நிலைக்கு பொருத்தமான விலைமதிப்பீட்டு நுட்பங்களை கம்பனி பயன்படுத்தப்படுவதுடன் இதற்காக நியாயப் பெறுமதியினை அளவிடுவதற்கு தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகள் பயன்பாட்டினை உச்சப்படுத்துகின்ற மற்றும் அவதானிக்க முடியாத உள்ளீடுகள் பயன்பாட்டை குறைக்கின்ற போதிய தரவுகள் கிடைக்கப் பெறுகின்றன.

நிதியியல் கூற்றுக்களில் நியாயப் பெறுமதி அளவிடப்பட்டுள்ள அல்லது வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து சொத்துக்களும் பொறுப்புகளும் மொத்தமாக நியாயப் பெறுமதி அளவீடுகளுக்கு முக்கியமாக விளங்குகின்ற குறைந்த மட்ட உள்ளீட்டினை அடிப்படையாகக் கொண்ட பின்வருமாறு விவரிக்கப்படும் நியாயப்பெறுமதி படிநிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- மட்டம் 1 - ஒரே மாதிரியான சொத்துகளுக்க அல்லது பொறுப்புகளுக்கு செயற்படுமிக்க சந்தைகளில் குறிக்கப்பட்ட (சீர்செய்யப்படாத) சந்தை விலைகள்
- மட்டம் 2 - நியாயப்பெறுமதி அளவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடு நேரடியாக அல்லது நேரடியற்று அவதானிக்கப்படுகின்ற விலைமதிப்பீட்டு நுட்டபங்கள்
- மட்டம் - 3 நியாயப்பெறுமதி அளிவீட்டுக்கு முக்கியமானதாக விளங்குகின்ற குறைந்தமட்ட உள்ளீடானது நியாயப்பெறுமதி வெளிப்படுத்தல் நோக்கத்திற்காக அவதானிக்க முடியாததாகவுள்ள விலைமதிப்பீட்டு நுட்பங்கள் சொத்தின் அல்லது பொறுப்பின் தன்மை பண்புகள் மற்றும் இடர்நேர்வுகள் மற்றும் மேலே விளக்கப்பட்டவாறு நியாயப் பெறுமதி ஒழுங்குமுறை என்பவற்றின் அடிப்படையில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வகுப்புகளை கம்பனி நிர்ணயிக்கின்றது.

**2.5.7 பதிவேட்டுப் பொருட்கள்**

பாவனைக்குதவாத மற்றும் மெதுவாக நகருகின்ற பொருட்களுக்கு உரிய ஒதுக்கீடுகளை மேற்கொண்டபின்னர் குறைந்த செலவிலும் நிகர தேறத்தக்க பெறுமதியிலும் விலைமதிப்பிடப்படுகின்றன. நிகரதேறத்தக்க பெறமதி என்பது நிறைவு செய்வதற்கு மதிப்பிட்ட செலவு மற்றும் விற்பனை செய்வதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவு என்பவற்றைக் கழித்து சாதாரண வியாபாரத்தில் பதிவேட்டு பொருட்களை விற்பனை செய்யக்கூடிய விலையாகும். பதிவேட்டுப் பொருட்களின் தற்போதைய அமைவிடத்திற்கு மற்றும் நிலைமைகளுக்கு அவற்றைக் கொண்டுவருவதற்கு ஏற்பட்ட செலவுகள் பின்வரும் செலவுச் சூத்திரத்தினைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகின்றன.

**2.5.8 ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நாளாந்த நன்நிலைப்படுத்தல் செலவுகள் ஒன்றுசேர்ந்த பெறுமானத் தேய்வினையும் பெறுமதியில் ஒன்றுசேர்ந்த மதிப்பிழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. அத்தகைய கிரயங்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பாகத்தினை மாற்றீடு செய்கின்றபோது ஏற்படுகின்ற செலவு இனங்காணுதல் மூலப்பிரமாணத்தினை நிறைவு செய்யுமாயின் உள்ளடக்கப்படுகின்றது.

முன்னெடுக்கப்படும் மூலதனப் பணியானது பொறுப்பேற்கப்பட்டுள்ள மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு இன்னும் பூர்த்தியடையாத நிலையிலுள்ள பணி மீது கொடுப்பனவு செய்யப்பட்ட அனைத்து தொகைகளையும் பிரதிநிதிப்படுத்துகின்றது.

காணியானது முடிவுறா ஆயுளை கொண்டிருப்பதாக கருதப்படு கின்றமையினால் பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை. தேய்மானமானது பயன்பாட்டுக்காக கிடைக்கப்பெறுகின்ற திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற அச்சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு ஒவ்வொரு சொத்தினதும் செலவினை ஒதுக்கீடு செய்வதற்காக நேர்கோட்டு முறை அடிப்படையில் கணிக்கப்படுகின்றது சொத்துக்கள் விற்பனை செய்யப்படுவதுடன் சொத்தானது இனங்காணப்படாத திகதியில் பெறுமானத் தேய்வு நிறுத்தப்படுகின்றது.

சொத்தினது எஞ்சியுள்ள பெறுமதிகள் பயன்பாடுமிக்க ஆயுட்காலங்கள் மற்றும் பெறமானத்தேய்வு முறை என்பன குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு ஏற்புடையதாயின் சீர்செய்யப்படும்.

சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட மீளஅறவிடத்தக்க தொகையினை விட அது கொண்டுள்ள தொகை பெரிதாகவிருப்பின் சொத்து கொண்டுள்ள தொகையானது உடனடியாக பெறுமதி குறைக்கப்படும். கொண்டுள்ள தொகையுடன் பெறுகைகளை ஒப்பிடுவதன் மூலம் விற்பனைகள் மீதான வருவாய்களும் இழப்புகளும் நிர்ணயிக்கப்படுவதுடன் வருமான கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

### 2.5.9 அருவச் சொத்துகள்

**அ) தொழில்முயற்சி வளத்திட்டமிடல் (ERP) முறைமையும் உரிமக் கட்டணங்களும்**

கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் பிரயோகங்களின் உரிமங்களுடன் தொடர்புடைய செலவுகளை உரிமக் கட்டணங்கள் உள்ளடக்குகின்றன. உரிமக் கட்டணங்கள் திரண்ட பெறுமதிக்குறைப்பினை கழித்து கிரயத்தில் கொண்டு செல்லப்படுகின்றன. பெறுமதி குறைத்தலானது 5 வருடங்கள் கொண்ட அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாடுமிக்க ஆயுட்காலங்களின் மீது உரிமங்களின் செலவினை ஒதுக்கீடு செய்வதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது

### 2.5.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையில் உள்ள காசு கேள்வி வைப்புக்கள் மற்றும் அறிந்த பணத்தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடருக்குட்படுகின்ற குறுகிய கால உயர் திரவத்தன்மை முதலீடுகள் என வரையறை செய்யப்பட்டவையாகும்.

காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக காசும் காசுக்கு சமமானவையும் கையுள்ள காசு நிலுவையாகவுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களைக் கழித்து வங்கியிலுள்ள வைப்புக்கள், ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. மூன்று மாதங்கள் அல்லது அதனைவிடக் குறைந்த அடிப்படை முதிர்ச்சிகளுடனான முதலீடுகளும் காசுக்கு சமமானவையாக கொள்ளப்படுகின்றது.

### 2.5.11 நிதியமல்லாத சொத்துக்களின் மதிப்பிழப்பு

வரையறையற்ற பயன்பாடுமிக்க ஆயுட்காலமொன்றினைக் கொண்டுள்ள சொத்துக்கள் பெறுமதி குறைப்புக்குட்படுவதில்லை என்பதுடன் பெறுமதி குறைப்புக்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றன. பெறுமதிக்குறைப்பிற்கு உட்படுகின்ற சொத்துக்கள் அளவு கொண்டு செல்கின்ற தொகை அறவிடப்பட முடியாமலிருக்கலாம் என குறித்துக் காட்டுகின்ற சூழ்நிலைகளில் நிகழுகின்றபோது மதிப்பழிக்கப்படுகின்றது.

### 2.5.12 ஏற்பாடுகள்

கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்குகின்ற வள வெளிப்பாய்ச்சலொன்று தேவைப்படும் என நிகழ்வு காணப்படுகின்றவிடத்து மற்றும் கடப்பாட்டின் தொகை பற்றி நம்பகத்தகுந்த மதிப்பீடொன்றினை மேற்கொள்ளக் கூடியதாவிடத்து கடந்தகாலத்தின் விளைவொன்றாக கம்பனியானது தற்கால கடப்பாடொன்றினை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) கொண்டுள்ளபோது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏற்பாடு சிலவற்றை அல்லது அனைத்தையும் மீள்நிரப்புவதற்கு கம்பனி எதிர்பார்க்கப்படுகின்றபோது மீள்நிரப்பலானது தனியான சொத்தொன்றாக இனங்காணப்படுகின்றது. ஆயினும் மீள்நிரப்பலானது தோற்றநிலையில் நிச்சயமானதாக இருக்கும்போது மாத்திரமாகும். ஏதேனும் ஏற்பாட்டுடன் தொடர்புடைய செலவானது ஏதேனும் மீள்நிரப்பலினை கழித்து வருமானக்கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பணத்தின் காலப்பெறுமதித் தாக்கம் முக்கியமானதாயின் பணத்தின் நடைமுறைச் சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கின்ற வரிக்கு முந்திய வீதமொன்றில் எதிர்பார்க்கப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சல்களை அத்துடன் பொருத்தமானவிடத்து பொறுப்பிற்கான குறித்துரைத்த இடர்நேர்வுகளையும் கழிப்பதன் மூலம் ஏற்பாடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கழிவுசெய்தல் பயன்படுத்துகின்றவிடத்து காலப்போக்கின் காரணமாக ஏற்பாட்டிலுள்ள அதிகரிப்பானது வட்டிச் செலவொன்றாக இனங்காணப்படுகின்றது.

### 2.6 ஊழியர் நலன்கள்

**அ) வரையறை செய்யப்படட ஊழியர் நலன்கள் - பணிக்கொடை**

கம்பனியானது ஒவ்வொரு ஆண்டும் எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை இணைப்பைப்பயன்படுத்தி கணிப்பீட்டாளரின் ஆலோசனையுடன் வரையறை செய்யப்பட்ட திட்டமொன்றான பணிக்கொடைக் கடப்பாட்டின் வாக்குறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய நலப்பெறுமதிகளை அளவிடுகின்றது. கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும் அதுதோன்றுகின்ற காலத்தில் ஏனைய அனைத்தையம் உள்ளடக்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

**கணிப்பீட்டு வருவாய்களையும் இழப்புகளையும் இனங்காணுதல்**

கணிப்பீட்டு வருவாய்களும் இழப்புகளும் அவை தோன்றுகின்ற வருடத்தில் ஏனைய அனைத்தையும் உள்ளடங்கிய வருமானக்கூற்றில் இனங்காணப்படுகின்றன.

**ஆ) வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்**

கம்பனியானது வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமொன்றினையும் தொழிற்படுத்துகின்றது. வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டமொன்றுக்கு செல்லத்தக்க பங்களிப்பானது ஊழியர்கள் மூலம் கம்பனிக்கு வழங்கப்படும் சேவைகளுக்கான பங்கொன்றாகவுள்ளதுடன் “ஆளணிச் செலவுகள்” இன் கீழ் செலவொன்றாக பதிவு செய்யப்படுகின்றது. கொடுப்பனவு செய்யப்படாத பங்களிப்புகள் பொறுப்பொன்றாகப் பதிவு செய்யப்படுகின்றன. கம்பனியானது பின்வரும் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றது.

**ஊழியர் சேமலாப நிதியம்**

கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரம் நீங்கலாக) முறையே 15% மற்றும் 10% இனை பங்களிக்கின்றன.

**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

கம்பனியும் ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர்களின் மாதாந்த மொத்த சம்பளத்தில் (மேலதிக நேரம் நீங்களாக) முறையே 15% மற்றும் 10% இனை பங்களிக்கின்றன.

**இ) மருத்துவ நன்மை திட்டம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியர் நிதியச் சபையினால் பேணப்படுகின்ற ஊழியரின் மாதாந்த மொத்த சம்பளத்தின் மேலதிக நேரம் நீங்கலாக 3% இனை கம்பனி பங்களிக்கின்றது.

ஊழியர் நம்பிக்கை நிதியச் சபையினால் நம்பிக்கை நிதியம் பராமரிக்கப்படுகின்றது

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

**2.7 வெளியிடப்பட்ட ஆனால் இன்னும் அமுல்படுத்தப்படாத இலங்கை**

2017 மார்ச்சு 31 அறிக்கையிடும் காலங்களுக்காக கட்டாயம் அல்லாத சில புதிய கணக்கீட்டு நியமங்களை தற்போது காணப்படுகின்ற நியமங்களுக்கான திருத்தங்களும் மேம்படுத்தல்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் எவையும் கம்பனியினால் முன்கூட்டியே பின்பற்றப்படவில்லை.

**இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 9 நிதியியல் சாதனங்கள்**

2014 டிசெம்பரில் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனமானது இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 9இன் இறுதியில் பதிப்பினை வெளியிட்டது. இது நிதியியல் சாதனங்கள் எதிர்வுகூறலின் அனைத்துக் கட்டங்களையும் பிரதிபலிப்பதுடன் இலங்கை அறிக்கையிடல் நியமம் 39 நிதியியல் சாதனங்கள் இனங்காணுதல் மற்றும் அளவீடுகளினை மாற்றீடு செய்கின்றது. நியாயமானது மதிப்பிழத்தலின் வகைப்படுத்தலுக்கான புதிய தேவைப்பாடுகளையும் அத்துடன் காப்பு கணக்கீட்டினையும் அறிமுகப்படுத்துகின்றது. கம்பனி அதன் நிதியியல் கூற்றுக்களில் ஏதேனும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கவில்லை.

**இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்**

இந்நியமத்தின் குறிக்கோள் வருமானத்தின் தன்மை, தொகை, காலம் மற்றும் நிச்சயமின்மை பற்றியும் வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தமொன்றிலிருந்து தோன்றுகின்ற காசுப்பாய்ச்சல் பற்றியும் நிதியியல் கூற்றுக்களைப் பயன்படுத்துவோருக்கு பயன்மிக்க தகவல்களை அறிக்கையிடுவதற்கு நிறுவனமொன்று பிரயோகிக்கின்ற கோட்பாடுகளைத் தாபிப்பதாகும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 2018 சனவரி 1 முதல் அமுலில் இருக்கும். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இலிருந்தான சாத்தியமான தாக்கத்தினை முகாமைத்துவம் இன்னும் அளவிடவில்லை.

**இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16 குத்தைகள்**

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் 2016 சனவரியில் குத்தகைகளுக்கான கணக்கீட்டுக்காக இ.நி.அ.நி. 16 குத்தகைகள் என்ற வழங்குநருக்கான குத்தகைகளுக்காக கணக்கீட்டினை பதிய நியமம் கணிசமாக மாற்றவில்லை. எவ்வாறாயினும் நேரொத்த பதிவழிப்பு சொத்துகளைப் பயன்படுத்தலுடன் குத்தகைப் பொறுப்புக்களாக தமது ஐந்தொகையில் அதிக குத்தகைகளை இனங்காண்பதற்கு குத்தகை எடுத்தவரை தேவைப்படுத்துவதில்லை. அனைத்து இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கும் குத்தகை எடுத்தவர்கள் தனி மாதிரியொன்றினை பிரயோகிகக்க வேண்டும். ஆனால் "குறுகிய கால" குத்தகைகளையும் "குறைந்த பெறுமதி" சொத்துக்கள் குத்தகைகளையும் இனங்காணாத தெரிவினை கொண்டிருப்பவர். பொதுவாக இனங்காணப்பட்ட குத்தகைகளுக்கான இலாப அல்லது நட்ட இனங்காணல் முறையானது இலாப அல்லது நட்டக் கூற்றில் வேறாக இனங்காணப்படுகின்ற வட்டி மற்றும் பெறுமானத் தேய்வுடன் இன்றைய நிதிக் குத்தகை கணக்கீட்டினை ஒத்ததாகவிருக்கும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16ஆனது 2019 சனவரி 1 அன்று அல்லது அதன்பின் ஆரம்பிக்கின்ற வருடாந்த காலங்களுக்கு செயற்பாடுடையதாகும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முன்னர் சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமம் 15இனை நிறுவனமொன்று பிரயோகிக்க வேண்டும். குத்தகைதாரரொருவர் முன்அன்று முழுமையான முன்தேயியிடப்பட்ட அல்லது திருத்தியமைக்கப்பட்ட முன்தேதியிடப்பட்ட அணுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி நியமத்தினை பிரயோகிப்பதனை தெரிவு செய்யலாம்.

தற்போது இலங்கை பெற்றோலிய ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடட் குத்தகைகளைக் கொண்டிருக்காததனால், எஸ்எல்எப்ஆர்எஸ் - 16 இல் இருந்தான குத்தகை மீதான தாக்கங்கள் ஏதுமில்லை

**இ.க.நி. 07 காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுக்கான திருத்தங்கள்**

2016 செம்டெம்பரில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் நிதியியல் செயற்பாடுகளின் வெளிப்படுத்தல்களை மேம்படுத்தப்படும் நோக்கத்துடனும் அறிக்கையிடும் நிறுவனத்தின் நிலைமையினை பயன்பாட்டாளர்கள் சிறப்பாக புரிந்து கொள்வதற்கு உதவுவதற்கும் இ.க.நி. 7 காசுப்பாய்ச்சல் கூற்றுக்கான திருத்தங்களை வெளியிட்டது. புதிய தேவைப்படுத்தல்களின் கீழ் காசுப்பாய்ச்சல் மற்றும் காசல்லா விடயங்களிலிருந்தான மாற்றங்கள் போன்ற நிதியிடல் செயற்பாடுகளின் (உதாரணம் வெளிநாட்டு நாணய அசைவுகளின் காரணமாக வருவாய்கள் மற்றும் இழப்புகள்) விளைவொன்றாக தமது நிதியியல் பொறுப்புகளிலுள்ள மாற்றங்களை நிறுவனங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

**சர்வதேச கணக்கீட்டு நியமம் 12 வருமான வரிகள் கீழுக்கான திருத்தங்கள்**

2016 செம்டெம்பரில் இ.க.நி. 12 இற்கான திருத்தங்களை வெளியிடுவதன் மூலம் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமானது கணக்கீட்டுக்காக நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட ஆனால் வரி நோக்கங்களுக்காக செலவில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கணக்கீட்டு விதத்தினை விளக்கியது. 2017 சனவரி 1 முதல் திருத்தம் செயலில் இருக்கும் கம்பனியின் நிதியியல் கூற்றுக்கள் மீது திருத்தங்களைப் பின்பற்றுவது தாக்கங்களைக் கொண்டிருக்கும் என கம்பனி எதிர்பார்க்கவில்லை.

**2.7.1 பங்குடமையாளர்கள் ஒப்பந்தம் மற்றும் பங்குவிற்பனை கொள்வனவு உடன்படிக்கை பொதுப்பயன்பாட்டாளர் வசதிகள் காலாவதியாதல்**

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை இந்தியக் கம்பனி பீஎல்சி மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டேமினல்ஸ் லிமிடட் ஆகியவற்றுக்கிடையிலான பங்குடமையாளர்கள் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட வருமானமும் செலவினங்களும் சொல்லப்பட்ட நியதிகளையும் கம்பனியின் பணிப்பாளர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள அதனைத் தொடர்ந்த ஏதேனும் மாற்றங்களையும் கருத்திற் கொண்டதன் பின்னர் இந்நிதியியல் கூற்றுகளில் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 3. | வருமானம் | | |
| 3.1 | செயன்முறைப்படுத்தல் வருமானம் | | |
| | முன்னைய வருமானம் | **9,084,844,481** | 7,219,578,282 |
| | தொழிற்படுத்தல் இலாபம் | **3,400,967,743** | 3,233,860,313 |
| | மீள்நிரப்பத்தக்க கடன் வட்டி | **-** | - |
| | | **12,485,812,224** | 10,453,438,595 |
| | சேவைகளை வழங்குதல் | | |
| | போக்குவரத்து வருமானம் | **2,854,063,742** | 2,676,786,208 |
| | கப்பல் எரிபொருள் வழங்கல் தொழிற்பாடு | **-** | - |
| | | **2,854,063,742** | 2,676,786,208 |
| | மொத்த வருமானம் | **15,339,875,966** | 13,130,224,803 |
| 4 | ஏனைய தொழிபடுத்தல் வருமானம் | | |
| | அலுவலர் கடன் மற்றும் ஏனையவை மீதான வட்டி | **646,713,133** | 579,450,678 |
| | ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை மீதான வருவாய் | **29,445,300** | 26,421,610 |
| | வாடகை வருமானம் | **10,292,479** | 9,885,375 |
| | வெளியீடுகள் கட்டணங்கள் | **2,100,000** | 1,350,000 |
| | ஆய்வுகூட பரிசோதனைக் கட்டணங்கள் | **49,055,922** | 53,680,584 |
| | தனியார் பவுசர் சாரதிகள்/மோட்டர்களுக்கான பயிற்சி | **4,534,910** | 4,818,444 |
| | கழிவு விற்பனை | **5,226,593** | 8,391,795 |
| | தீயணைப்பு கருவிகளை செம்மைபார்த்தல் | **1,883,303** | 1,948,343 |
| | ஒப்புவமை கட்டணங்கள் | **7,359,265** | 8,105,578 |
| | சில்லறை வருமானம் | **15,187,628** | 4,122,299 |
| | சுற்றுலா விடுதி வருமானம் | **885,105** | 820,184 |
| | மீளளிக்க முடியாத கேள்வி | **3,316,464** | 5,338,223 |
| | நீண்டகால கடன்படுனர் நிலுவைகள் மீள்பதிவு செய்யப்பட்டது | **76,348,694** | - |
| | | **852,348,796** | 704,333,113 |
| 4.1 | மீளப்பெறமுடியாத கடன்களின் பதிவழிப்பு | **70,222,231** | - |
| | நீண்டகால கடன்படுனர் நிலுவைகள் மீள்பதிவு செய்யப்பட்டது | | |
| | | **70,222,231** | - |
| 5. | நிதியியல் வருமானம் | | |
| | நிதி வருமானம் | | |
| | ரிபோ முதலீடுகள் மீதான வட்டி | **55,437,509** | 40,576,962 |
| | வைப்புகள் மீதான வட்டி | **267,592,341** | 77,300,237 |
| | | **323,029,850** | 117,877,199 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 6. | வரிக்கு முந்திய இலாபம் | | |
| | அறவிடுதல்/வரவு வைத்தலுக்கு பின்னர் குறிக்கப்பட்டது | | |
| | நேரடிச் செலவுகளில் உள்ளடக்கப்பட்டவை | | |
| | தனிப்பட்ட செலவு | **2,934,549,917** | 2,954,073,137 |
| | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | **847,972,657** | 820,253,095 |
| | நிருவாகச் செலவில் உள்ளடக்கப்பட்டவை | | |
| | பணிப்பாளர்களின் வேதனாதிகள் | **4,514,718** | 8,539,121 |
| | பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள் | **1,448,347** | 2,893,207 |
| | ஆளணிச் செலவு | **3,337,383,921** | 3,491,632,362 |
| | வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடு ஆண்டுக்கான விதிப்பனவு | **265,146,147** | 226,725,802 |
| | கணக்காய்வுக் கட்டணம் - நடப்பு ஆண்டு | **1,980,000** | 1,943,223 |
| | ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு விதிப்பனவு | **155,199,006** | 131,147,766 |
| | ஆண்டுக்கான மதிப்புக் குறைப்பு விதிப்பனவு | **25,908,400** | 4,486,998 |
| | வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் மதிப்புக் குறைப்புக்கான ஒதுக்கீடுகள் | **-** | (174,665,455) |
| | ஊழியர் கடனுக்கான பற்றாக்குறைக்கான கொடுப்பனவுகள் / (திருப்புதல்கள்) | **-** | - |
| | பதிவேட்டுப்பொருள் மேலதிக ஏற்பாட்டின் திரும்பல் | **11,978,285** | (127,236,542) |

**7. வரிச் செலவுகள்**

2019 டிசம்பர் 31 2018 டிசம்பர் 31 இல் ஆண்டுகளுக்கான வருமான வரிச் செலவுகளில் பிரதான கூறுகள் பின்வருமாறு

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 7.1 | வருமான வரி கூற்று | | |
| | நடப்பு வருமான வரி | | |
| | நடப்பு வரிச் செலவு | **1,045,291,808** | 333,928,430 |
| | முன்னைய ஆண்டு தொடர்பில் நடப்பு வரிகளின் குறைந்த/(மேலதிக) ஏற்பாடு) | **(9,075,934)** | 28,844,501 |
| | பிற்போடப்பட்ட வருமான வரி | | |
| | பிற்போடப்பட்ட வரி விதிப்பு/(வரவு) (குறிப்பு 08) | **126,313,172** | 962,139,274 |
| | நிதிக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட வருமான வரிச் செலவு/(வரவு) | **1,162,529,046** | 1,324,912,205 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

7.2 2019 டிசம்பர் 31இல் மற்றும் 2018 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுகளுக்காக நியதிச் சட்ட வரி வீதத்தினால் கணக்கீட்டு இலாபத்தின் வரிச் செலவுகள் மற்றும் உற்பத்திகளுக்கு இடையிலான இணக்கம் பின்வருமாறு:

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| வரிக்கு முன்னர் கணக்கீட்டு இலாபம் | **2,927,856,033** | 1,522,230,109 |
| ஒன்று சேர்க்கப்பட்ட அனுமதிக்கப்படாத விடயங்கள் | **1,502,301,316** | 1,457,934,083 |
| ஒன்று சேர்க்கப்பட்ட அனுமதிக்கப்படத்தக்க விடயங்கள் | **(1,138,864,596)** | (1,979,521,282) |
| | **3,291,292,753** | 1,000,642,910 |
| வட்டி வருமானம் | **441,892,274** | 305,279,692 |
| மொத்த நியதிச் சட்ட வருமானம் | **3,733,185,027** | 1,305,922,601 |
| கழிக்குக: பயன்படுத்தப்பட்ட முன்கொண்டு செல்லப்பட்ட வரி இழப்புகள் | **-** | - |
| வரிவிதிக்கத்தக்க இலாபம் | **3,733,185,027** | 1,305,922,601 |
| வரிவிதிக்கத்தக்க வருமானத்திற்கான வருமான வரி | **1,045,291,808** | 333,928,430 |
| **நடப்பு வருமான வரிச் செலவுகள்** | **1,045,291,808** | 333,928,430 |

## 8. பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்

### 8.1 பிற்போடப்பட்ட வரி

பின்வருவனவற்றுடன் தொடர்புடைய பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள், பொறுப்புகள் மற்றும் வருமான வரி

| | நிதியியல் நிலைக் கூற்று | | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று | | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று | |
|---|---|---|---|---|---|---|
| | 2019 ரூபா | 2018 ரூபா | 2019 ரூபா | 2018 ரூபா | 2019 ரூபா | 2018 ரூபா |
| **பிற்போடப்பட்ட வரி பொறுப்புகள்** | | | | | | |
| வரி நோக்கங்களுக்கான மூலதன ஒதுக்கீடுகள் | **2,561,923,931** | 2,355,880,566 | **206,043,365** | 1,096,959,160 | **-** | - |
| அருவச் சொத்துகள் | **8,418,715** | 1,997,748 | **6,420,967** | 1,960,412 | **-** | - |
| | **2,570,342,646** | 2,357,878,314 | | | | |
| **பிற்போடப்பட்ட வரிச் சொத்துகள்** | | | | | | |
| பொருட்பதிவேடுகள் | **4,597,959** | 3,829,479 | **(768,480)** | 15,378,738 | **-** | - |
| ஏற்பாடுகள் | **2,122,648** | 1,851,253 | **(271,395)** | 22,642,655 | **-** | - |
| வரையறை செய்யப்பட்ட நலத் திட்டங்கள் | **477,707,513** | 354,571,409 | **(85,111,285)** | (174,801,690) | **(38,024,819)** | 18,334,523 |
| வரையறை செய்யப்படாத நலத் திட்டங்கள் | **-** | - | **-** | - | **-** | - |
| | **484,428,119** | 360,252,141 | | | | |
| காலம் தாழ்த்தப்பட்ட வருமானம் வரி – வருமானம் | | | | | | |
| **தேறிய காலம் தாழ்த்தப்பட்ட பொறுப்பு / (சொத்துகள்)** | **2,085,914,526** | 1,997,626,173 | **126,313,172** | 962,139,274 | **(38,024,819)** | 18,334,523 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

8.2 விளைவு வட்டி வீதத்தினை பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி கணிக்கப்பட்டுள்ளது. வரிவிதிக்கத்தக்க வருமானத்தின் வேறுபட்ட மட்டங்களுக்கு பிரயோகிக்கப்பட்ட பல வரி விகிதங்களின் காரணமாக வீதமானது 24.42% இருந்து 28.0% ஆக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, 2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பில் ரூபா 88,288,353/-

9. **பங்கொன்றிற்கான உழைப்பு**

9.1 பங்குரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்க காலத்திற்கான தேறிய இலாபத்தினால் பிரிப்பதன் மூலம் கணிக்கப்படுகின்றது. காலத்தின் போதும் முன்னைய காலத்தின் போதும் நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் நிறைவேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கையானது மிகை ஊதியம் வழங்கல் போன்ற வழங்கலின் நேரொத்த மாற்றம் ஒன்று இன்றி நிலுவையாக உள்ள சாதாரண பங்குகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்கின்ற நிகழ்வுக்காக சரி செய்யப்படுகின்றது.

9.2 பின்வருவன பங்கொன்றுக்கான உழைப்பினை கணிப்பதில் பயன்படுத்தப்படும் வருமான மற்றும் பங்குத் தரவுகளை பிரதிபலிக்கின்றன.

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| **தொகுதியாக பயன்படுத்தப்பட்ட தொகை** | | |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பிற்கான சாதாரண பங்கு உரிமையாளர்களுக்கு உடமையாக்கத்தக்க தேறிய இலாபம் | **1,765,326,987** | 197,317,904 |
| **பகுதிவொண்ணாக பயன்படுத்தப்படும் சாதாரண பங்குகளின் எண்ணிக்கை:** | | |
| வழங்கலில் உள்ள சாதாரண பங்குகளின் நிறையேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கை | **750,000,000** | 750,000,000 |
| பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பிற்கு ஏற்புடையது | | |
| பங்கொன்றிற்கான உழைப்பு | **2.35** | 0.26 |

10. **ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

10.1 **மொத்த கொண்டு செல்லும் தொகை**

| கிரயத்தில் | 01.01.2019 ரூபா | சேர்த்தல்கள் ரூபா | இடமாற்றங்கள் ரூபா | அகற்றுதல்கள் ரூபா | 31.12.2019 ரூபா |
|---|---|---|---|---|---|
| நிரந்தரக் காணி | **4,497,001,663** | 308,516,741 | | | **4,805,518,404** |
| நிரந்தரக் கட்டிடம் | **1,684,811,781** | 50,333,405 | | | **1,735,145,186** |
| களஞ்சியத் தாங்கி | **6,542,365,958** | 374,267,372 | | | **6,916,633,330** |
| மோட்டார் வாகனங்கள் | **1,837,636,417** | 72,928,243 | | (40,205,504) | **1,870,359,156** |
| குழாய்த் தொகுதி | **7,447,106,547** | 361,657,005 | | (12,125,000) | **7,796,638,552** |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | **2,260,453,057** | 88,302,134 | (164,894,400) | (2,641,315) | **2,181,219,476** |
| கணனிகள் | **295,590,104** | 31,720,060 | | (29,800) | **327,280,364** |
| தனி/இரட்டை நிலை இறக்கும் | **2,800,409,453** | 140,427,145 | 164,894,400 | | **3,105,730,997** |
| பம்புகளும் நிலைத்தூண்களும் | **1,454,685,884** | 135,200 | | | **1,454,821,084** |
| **பெறுமானம் தேயத்தக்க சொத்துக்கள்** | **28,820,060,864** | 1,428,287,305 | - | (55,001,619) | **30,193,346,549** |
| **முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி** | **635,514,312** | 353,765,596 | (801,206,338) | | **188,073,569** |
| | **29,455,575,176** | 1,782,052,901 | (801,206,338) | (55,001,619) | **30,381,420,118** |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

## 10.2 பெறுமானத்தேய்வு

| கிரயத்தில | 2019.01.01 அன்று மீதி ரூபா | ஆண்டுக்கான விதிப்பனவு ரூபா | அகற்றல்கள் ரூபா | அகற்றல்கள் ரூபா | 2018.01.01 அன்று மீதி ரூபா |
|---|---|---|---|---|---|
| நிரந்தரக் கட்டிடம் | **631,480,795** | 48,906,831 | | | **680,387,626** |
| களஞ்சியத் தாங்கி | **2,587,514,829** | 160,928,774 | | | **2,748,443,603** |
| மோட்டார் வாகனங்கள் | **1,288,889,610** | 163,450,502 | | (31,850,351) | **1,420,489,761** |
| குழாய்த் தொகுதி | **3,206,008,179** | 280,178,720 | | (12,125,000) | **3,474,061,899** |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | **1,933,240,503** | 71,112,165 | (164,894,400) | (1,226,378) | **1,838,231,890** |
| கணனிகள் | **164,058,266** | 35,180,010 | | (29,800) | **199,208,476** |
| தனி இரட்டை நிலை இறக்கும் | **2,476,564,859** | 190,537,983 | 164,894,400 | | **2,831,997,242** |
| பம்புகளும் நிலைத்தூண்களும் | **1,120,963,392** | 52,876,678 | | | **1,173,840,070** |
| | **13,408,720,433** | 1,003,171,663 | - | (45,231,529) | **14,366,660,567** |

## 10.3 தேறிய புத்தகப் பெறுமதி

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| நிரந்தரக் காணி | **4,805,518,404** | 4,497,001,663 |
| நிரந்தரக் கட்டிடம் | **1,054,757,560** | 1,053,330,986 |
| களஞ்சியத் தாங்கி | **4,168,189,727** | 3,954,851,130 |
| மோட்டார் வாகனங்கள் | **449,869,395** | 548,746,807 |
| குழாய்த் தொகுதி | **4,322,576,653** | 4,241,098,368 |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | **342,987,586** | 327,212,554 |
| கணனிகள் | **128,071,889** | 131,531,838 |
| தனி/இரட்டை நிலை இறக்கும் | **273,733,754** | 323,844,594 |
| பம்புகளும் நிலைத்தூண்களும் | **280,981,014** | 333,722,492 |
| முன்னெடுக்கப்படும் மூலதனப் பணி | **188,073,569** | 635,514,312 |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொண்டு செல்லும் மொத்தப் பெறுமதி | **16,014,759,551** | 16,046,854,744 |

**10.4** நிதியாண்டின் போது கம்பனியானது ரூபா 1,782,052,901/- (2018 - ரூபா 573,028,893/- திரட்டிய பெறுமதிக்காக ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை பெற்றுக்கொண்டது. ரூபா 980,846,563/- (2018 - ரூபா 375,230,766/-) தொகைக்கான காசுக் கொடுப்பனவுகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக்காக இவ்ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன.

# நிதியியல்
## கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| **10.5 சொத்துக்களின் பயன்பாடுமிக்க ஆயுட் காலம் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது** | | |
| நிரந்தரக் கட்டிடங்கள் | **35 வருடம்** | 35 வருடம் |
| களஞ்சியத் தாங்கிகள் | **40 வருடம்** | 40 வருடம் |
| மொத்த தாங்கிகள் | **30 வருடம்** | 30 வருடம் |
| குழாய்த் தொகுதி | **30 வருடம்** | 30 வருடம் |
| பம்பிகள் | **20 வருடம்** | 20 வருடம் |
| வாகனங்கள் | | |
| - புதிய கையகப்படுத்தல்கள் | **5 வருடம்** | 5 வருடம் |
| - உரித்தளிக்கப்பட்ட பொருட்கள் | **இன்னும் உள்ளது** | பயனுள்ள ஆயுட்காலம் |
| நிலைத் தூண்கள் | **15 வருடம்** | 15 வருடம் |
| உபகரணங்கள் | | |
| - இலத்திரனியல் | **5 வருடம்** | 5 வருடம் |
| - ஏனைய | **10 வருடம்** | 10 வருடம் |
| தளபாடங்களும் பொருத்துகளும் | | |
| - வன்பொருள் | **5 வருடம்** | 5 வருடம் |
| - ஏனையவை | | |
| முத்துராஜவல ஏனைய சொத்துகள் | | |
| - இரட்டை நிலை இறக்கும் மிதவை | **10 வருடம்** | 10 வருடம் |
| - PLEM | **10 வருடம்** | 10 வருடம் |
| - குழாய்த்தொகுதி | **20 வருடம்** | 20 வருடம் |
| கணனிகள் | **04 வருடம்** | 04 வருடம் |

| கிரயத்தில் | இஆர்பி முறைமை இஆர்பி அனுமதி | செப் மற்றும் பத்திரம் | கரைகடந்த தன்னியக்க முறைமை குழாய்தொகுதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| **11. அருவச் சொத்துகள்** | | | | |
| **11.1 மொத்த கொண்டு செல்லும் தொகை** | | | | |
| அன்று உள்ளவாறு 01.01.2019 | 542,038,595 | 9,380,250 | 37,793,560 | **589,212,405** |
| சேர்தல்கள் | - | - | - | **-** |
| அகற்றல்கள் | - | - | - | **-** |
| அன்று உள்ளவாறு 31.12.2019 | 542,038,595 | 9,380,250 | 37,793,560 | **589,212,405** |
| **11.2 பெறுமதிக் குறைப்பு** | | | | |
| அன்று உள்ளவாறு 01.01.2019 | 414,697,035 | 9,380,250 | 37,793,560 | **461,870,845** |
| ஆண்டுக்கான விதிப்பனவு | 25,908,400 | - | - | **25,908,400** |
| அன்று உள்ளவாறு 31.12.2019 | 440,605,435 | 9,380,250 | 37,793,560 | **487,779,245** |
| **11.3** 31.12.2018 அன்று உள்ளவாறு தேறிய புத்தகப் பெறுமதி | 127,341,561 | - | - | **127,341,561** |
| **11.4** 31.12.2019 அன்று உள்ளவாறு தேறிய புத்தகப் பெறுமதி | 101,433,160 | - | - | **101,433,160** |

**11.5** கட்புலனாக சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் வழங்கப்பட்ட மொத்த கொண்டு செல்லல் பெறுமதியான ரூபா 459,670,406/-ஐ உள்ளடக்கியுள்ளது (2017 - ரூபா 459,670,406/-).

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 12. | **பொருட்பதிவேடுகள்** | | |
| | திருத்துவதற்கான பொது வன்பொருட்கள் | **339,784,780** | 301,864,715 |
| | மோட்டார் உதிரிப்பாகங்கள் | **284,544,373** | 282,030,574 |
| | நுகர் பொருட்கள் | **59,999,685** | 80,505,712 |
| | முடிவுறுத்தப்பட்ட பொருட்கள் | | |
| | லங்கா பெற்றோல்-95 | **788,088** | 788,088 |
| | லங்கா பெற்றோல்-92 | **567,567** | 1,442,844 |
| | லங்கா வாகன டீசல்-LAD | **6,578,343** | 6,670,165 |
| | | **692,262,836** | 673,302,098 |
| | மெதுவாக நகரும் பதிவேட்டுப் பொருட்களுக்கான ஏற்பாடு | **(16,421,281)** | (15,681,734) |
| | | **675,841,555** | 657,620,365 |
| 13. | **வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கத்தக்கவையும்** | | |
| | வர்த்தக கிடைக்கத்தக்கவை - தொடர்புடைய தரப்பினர் - (குறிப்பு 13.1) | **6,693,857,641** | 6,088,960,136 |
| | ஏனைய கிடைக்கத்தக்கவை | **328,637,986** | 240,174,077 |
| | | **328,637,986** | 240,174,077 |
| | வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் (குறிப்பு 13.3) | **1,225,148,039** | 1,350,100,920 |
| | | **8,247,643,666** | 7,679,235,133 |

**13.1 வர்த்தக கிடைக்கத்தக்கவை - தொடர்புடைய தரப்பினர்**

| | உறவு | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | தாய்க் கம்பனி | **6,317,852,698** | 5,682,366,384 |
| மதிப்புக் குறைப்பு கழித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் - (குறிப்பு 13.1) | | **6,317,852,698** | 5,682,366,384 |
| லங்கா இந்தியன் ஒயில் கம்பனி பீஎல்சீ | ஏனைய பிரதான பங்குரிமையாளர் | **376,004,943** | 406,593,752 |
| **மதிப்புக் குறைப்பு கழித்து இலங்கை இந்திய ஒயில் கம்பனி (குறிப்பு 13.2)** | | **376,004,943** | 406,593,752 |
| | | **6,693,857,641** | 6,088,960,136 |

**13.2** 2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வர்த்தக கிடைப்பனவுகளின் வயது பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| | மொத்தம் | 0-30 நாட்கள் | 31-90 நாட்கள் | 91-180 நாட்கள் | 181-365 நாட்கள் | 365 நாட்களுக்கு மேல் |
|---|---|---|---|---|---|---|
| **இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்** | 6,317,852,698 | 1,208,434,158 | 2,888,971,060 | 429,838,274 | 284,986,078 | 1,505,623,128 |
| | 6,317,852,698 | 1,208,434,158 | 2,888,971,060 | 429,838,274 | 284,986,078 | 1,505,623,128 |
| **ல.இ. ஒயில் பீஎல்சீ** | 376,004,943 | 68,250,139 | 64,597,537 | 33,481 | - | 243,123,787 |
| | 376,004,943 | 68,250,139 | 64,597,537 | 33,481 | - | 243,123,787 |

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 13.3 | **வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள்** | | |
| | வைப்புகள், முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகள் | **240,899,871** | 486,080,333 |
| | முற்கொடுப்பனவுகள் செய்யப்பட்ட அலுவலர் நலன்கள் | **984,248,168** | 864,020,587 |
| | | **1,225,148,039** | 1,350,100,920 |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 14. | ஏனைய நிதியியல் சொத்துகள் | | |
| | கம்பனி அலுவலர்களுக்கான கடன்கள் | | |
| | மோட்டார் வாகனக் கடன்கள் | **262,224,119** | 252,826,764 |
| | வீடமைப்புக் கடன்கள் | **1,618,376,699** | 1,040,078,373 |
| | இடர் கடன்கள் | **1,142,383,586** | 1,169,490,290 |
| | ஏனைய கடன்கள் | **150,560,878** | 207,454,563 |
| | | **3,173,545,282** | 2,669,849,989 |
| | (-) மதிப்பு குறைப்புக்கான ஒதுக்கு | **(7,580,887)** | (7,580,887) |
| | | **3,165,964,395** | 2,662,269,102 |
| 14.1 | நடைமுறையற்ற நிதியியல் சொத்துகள் | | |
| | மோட்டார் வாகனக் கடன்கள் | **209,779,296** | 202,261,412 |
| | வீடமைப்புக் கடன்கள் | **1,437,965,043** | 944,150,179 |
| | (-) மதிப்பு குறைப்புக்கான ஒதுக்கு | **(7,580,887)** | (7,580,887) |
| | | **1,640,163,452** | 1,138,830,704 |
| 14.2 | நடைமுறை நிதியியல் சொத்துகள் | | |
| | மோட்டார் வாகனக் கடன்கள் | **52,444,824** | 50,565,353 |
| | வீடமைப்புக் கடன்கள் | **180,411,656** | 95,928,193 |
| | இடர் கடன்கள் | **1,142,383,586** | 1,169,491,290 |
| | ஏனைய கடன்கள் | **150,560,878** | 207,454,562 |
| | | **1,525,800,944** | 1,523,439,398 |
| 15. | காசும் காசுக்கு சமமானவையும் | | |
| | சாதகமான காசும் காசுக்கு சமமானவையும் மீதி | | |
| | காசும் வங்கி மீதிகளும் | **5,318,998** | 8,999,507 |
| | குறுகிய கால முதலீடுகள் | **3,994,393,052** | 3,139,645,376 |
| | காசுப்பாய்ச்சல் கூற்று நோக்கத்திற்காக மொத்த காசும் காசுக்கு சமமானவையும் | **3,999,712,050** | 3,148,644,883 |

**16. குறிப்பிடப்பட்ட மூலதனம்**

| | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | ரூபா | எண்ணிக்கை | ரூபா |
| முழுமையாக செலுத்தப்பட்ட சாதாரண பங்கு | 750,000,000 | 750,000,000 | 750,000,000 | 7,500,000,000 |

**16.1 மூலதன ஒதுக்கு**

கூட்டிணைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து சொத்துகள் மாற்றப்பட்டபோது ரூபா 979,000,000 மூலதன ஒதுக்கொன்று மூலதனமாக்கல் செயன்முறையின் பாகம் ஒன்றாக தோற்றுவிக்கப்பட்டது.

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 17. | வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாடுகள் | | |
| | சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **1,451,971,373** | 1,473,989,898 |
| | நடப்பு சேவைச் செலவு | **172,203,805** | 78,442,419 |
| | வட்டிச் செலவு | **92,942,342** | 148,283,384 |
| | கணிப்பீட்டு (இலாபம்) / நட்டம் | **135,802,924** | (75,079,946) |
| | கொடுப்பனவு செய்யப்பட்ட நலன்கள் | **(146,822,184)** | (173,664,381) |
| | டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மீதி | **1,706,098,260** | 1,451,971,373 |

**17.1** இலங்கை கணக்கியல் நியமம் 19 ஆல் விதித்துரைக்கப்பட்டவாறு, கணிப்பீட்டு தொழில்சார் நிறுவனமான மெர்சர்ஸ் அக்டுஏரியல் அன்ட் மனேஸ்மன்ட் கன்ஸல்டன்ஸ் பிறைவட் லிமிடட் நிறுவனத்தினால் 31 டிசம்பர் 2019 நிலவரப்படி ஓய்வூதிய நன்மைகள் தேவைப்பாட்டின் உண்மையான மதிப்பீடு "உய்த்தறியப்பட்ட அலகு கணக்கு முறைமை" பயன்படுத்தப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டது.

**17.2 கோட்பாட்டு ரீதியான கணிப்பீட்டு ஊகங்கள்**

பெறுமதிக்கு அடிப்படையான கோட்பாட்டு கணிப்பீட்டு நிதியியல் ஊகங்கள் பின்வருமாறு:

| | 2019 | 2018 |
|---|---|---|
| கழிவு வீதம் | **10.47%** | 11.86% |
| சம்பள உயர்வு வீதம் | **3 வருடங்களில் ஒருதடவை 30%** | 3 வருடங்களில் ஒருதடவை 30% |
| அலுவலர் புரள்வு | **1%** | 1% |

| | | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| 17.3 | வரையறை செய்யப்பட்ட நலக் கடப்பாட்டு திட்டத்தின் முதிர்வுத் தோற்றப்பாடு | | |
| | ஒரு வருடத்திற்கும் குறைவு | **129,503,691** | 144,030,529 |
| | 1-2 வருடங்களுக்கு இடைப்பட்டது | **176,163,445** | 116,730,421 |
| | 2-5 வருடங்களுக்கு இடைப்பட்டது | **379,967,591** | 359,844,649 |
| | 5 வருடங்களைத் தாண்டியது | **1,013,138,899** | 831,365,774 |
| | | **1,698,773,626** | 1,451,971,372 |

அறிக்கையிடல் காலத்தின் முடிவில் வரையறுக்கப்பட்ட நன்மை கடமைத்திட்டத்தின் சராசரிக் காலம் நிர்வாக ஊழியர்களுக்கு 7.03 ஆண்டுகளும் நிர்வாகமல்லாத ஊழியர்களுக்கு 8.08 ஆண்டுகளும் ஆகும். மிகுதி சாராசரி பணிசெய்யும் ஆயுட்காலம் நிர்வாக ஊழியர்களுக்கு 11.6 ஆண்டுகளும் நிர்வாகமல்லா ஊழியர்களுக்கு 12.3 ஆண்டுகளும் ஆகும்.

**17.4 காப்பு கணிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்ட உணர்வுத்தன்மை ஊகங்கள்**

2019 ஆம் ஆண்டு தொடர்பில் வரையறை செய்யப்பட்ட நலப் பொறுப்பு அளவீட்டில் இடம்பெற்ற முரணற்ற மாறிலிகளுடன் ஈடுபடுத்தமப்பட்ட முக்கிய ஊகங்களின் நியாயமான சாத்தியமான மாற்றத்திற்கான உணர்வுத்தன்மையினை பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

| உணர்வுத்தன்மை மட்டம் | கழிவு வீதம் | | எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | |
|---|---|---|---|---|
| | அதிகரிப்பு 1% | குறைவு -1% | அதிகரிப்பு 1% | குறைவு -1% |
| வரையறை செய்யப்பட்ட நலக்கடப்பாடு மீதான தாக்கம் | (1,589,941,383) | 1,837,704,849 | 1,742,585,081 | (1,670,554,492) |

# நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள்

**2019 டிசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டு**

## 18. வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்க வேண்டியவை

| | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|
| வர்த்தக செலுத்தப்படத்தக்கவை - தொடர்புடைய தரப்பினர் (18.1) | **68,981,388** | 428,986,429 |
| - ஏனையவை | **30,610,130** | 262,148,463 |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **678,745,348** | 906,549,349 |
| திரண்ட செலவுகள் உள்ளடங்கலாக நாணாவித கொடுநர் | **286,442,901** | 217,340,499 |
| | **1,064,779,767** | 1,815,024,740 |

## 18.1 வர்த்தக செலுத்தப்படத்தக்கவை - தொடர்புடைய தரப்பினர்

| | உறவுமுறை | 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | தாய்க் கம்பனி | **68,981,388** | 428,986,429 |
| | | **68,981,388** | 428,986,429 |

## 19. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | தாய் குழுமம் - இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2019 ரூபா | 2018 ரூபா | ஏனைய பிரதான பங்குரிமையாளர்கள் பங்குரிமையாளர்கள் ஐஓசி பிஎல்சி 2019 ரூபா | 2018 ரூபா | மொத்தம் 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|---|---|---|
| **சனவரி 01இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியது/செலுத்த வேண்டியது** | **5,253,379,955** | 7,162,340,835 | **406,593,752** | 474,913,169 | **5,659,973,707** | 7,637,254,003 |
| எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோகத்திற்கான சேவை | **16,551,965,666** | 14,424,511,997 | **767,352,048** | 956,507,600 | **17,319,317,714** | 15,381,019,597 |
